# மண்

இதழ் 226

ஜேர்மனி / 2024

ஆடி - ஆவணி / Jul - Aug



(26.08.1910 - 05.09.1997)

Mother Teresa

அகிலத்தின் அன்னை திரேசா

ஒரு கை கூப்பி கடவுளை வணங்குவதை விட
ஒரு கை நீட்டி உதவி செய் இரு கைகள்
உன்னைக் கடவுளாக வணங்கும் - அன்னை திரேசா

நெதர்லாந்தில் வாழ்பவரும் எமது வாசகருமான திரு திருமதி ஜெயம் தங்கராசா - ஜெயமலர் தம்பதிகளின் நிதிப் பங்களிப்பில் துணுக்காய் " ஒளிரும் வாழ்வகம் இல்லச் " சிறார்களுக்கு கல்வி நிதி உதவியும் பரிசில் வழங்கல் நிகழ்வும் 11.04.2024









யேர்மனியில் வாழ்பவரும் எமது வாசகருமான திரு துரையரங்கன் அவர்களின் தாயாரின் ஓராண்டு நினைவாக அவரின் நிதிப் பங்களிப்பில் துணுக்காய் " ஒளிரும் வாழ்வகம் இல்லச் " சிறார்கள், மாற்றுத்திறனாளிகள், முதியோருக்கு உணவளித்தல் நிகழ்வு 29.05.2024









# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

**முகவரி:** V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

**தொலைபேசி:** 0203/8073898

015254799233

**மின்னஞ்சல்:** v.sivarajah@arcor.de

**வங்கிவிபரம்:** Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல களம் சூடுபிடித்து வருவதை யாவரும் அறிவீர்கள்தானே. ஜனநாயகத்தின் அத்திவாரமான வாக்கு, தேர்தல், ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லவேண்டிய கடமை நம் எல்லோருக்கும் உண்டு. பல ஆண்டுகளாக இலங்கையில் இடம்பெற்றுவரும் இன மோதல்கள், உரிமைப் போராட்டம் காரணமாகப் பல லட்சம் இலங்கையர்கள் நாட்டைவிட்டு வெளியேறி உலகின் பல நாடுகளில் வாழ்ந்து வந்தாலும் நமது நாட்டு மக்களின் தேசியம், சுதந்திரம், சமஉரிமைகள் மீது தாகம் கொண்டுதான் வாழ்ந்து வருகிறார்கள் என்பது நிஜமாகும். நமது நாட்டில் இப்படி இருக்க.. புலம்பெயர் நாடுகளிலும் குறிப்பாக ஐரோப்பாவிலும் இனம், மதம், நிற, மொழி, கல்வி, கலை, கலாச்சாரம் சார்ந்த வேறுபாடுகளும், ஒடுக்குமுறைகளும் தலைதூக்கி வருவதை நாம் நோக்க வேண்டும்.

சென்றமாதம் 27 நாடுகளைக்கொண்ட ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றதையும் அதில் வலதுசாரிக் கட்சிகளின் வெற்றி மேலோங்கி இருந்ததையும் நீங்கள் அவதானித்திருப்பீர்கள். தேர்தல் முடிவுகளின் படி குறிப்பாக யேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஒஸ்திரியா போன்ற நாடுகளின் தேர்தல் முடிவுகள் வெளிநாட்டவர்களுக்கு எதிரானவையாகவே கருதப்பட்டுள்ளது. பிரான்ஸ் அரசாங்கமே இத்தேர்தலால் ஆட்டம்கண்டு 07.07.2024 நடைபெற்ற பாராளுமன்ற இறுதிக்கட்டத் தேர்தலில் வலதுசாரிக் கட்சியினர் 3 வது இடத்திற்குச் சென்றபடியால் தப்பிப் பிழைத்திருக்கின்றது.

குறிப்பாக ஐரோப்பா நடுகளான எனைய நாடுகளைவிட ஐரோப்பாவில் வசதிபடைத்த நாடுகளான யேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஒஸ்ரியா நாடுகளில் வலதுசாரிக்கட்சியின் செல்வாக்கு மேலோங்கியிருப்பதை அறியலாம். இது வெளிநாட்டவர்களை தமது நாட்டுக்குத் திரும்பிப் போதல் வேண்டும் என்பதை வலியுறுத்தி இருக்கிறது. தமது நாடு, தமது மொழி, தமது இனம், என்பதை வலியுறுத்தியுள்ளது. அதாவது பெருமளவு வெளிநாட்டவர்கள் தமது நாடுகளில் அகதிகளாகவும் வேலைவாய்ப்பிற்காகவும் வந்து குவிந்துள்ளதால்... தமக்கு வேலைவாய்ப்பு, கல்வி, பொருளாதாரம் குறைவடைந்துவருவதாகவும் கலாச்சார சீர்கேடுகள், பயங்கரவாதம் பெருகிவருவதாகவும் அமைதி சீர்குலைங்குள்ளதாகவும் இந்தநாடுகளின் மக்கள் கருத்திற்பொண்டு பிரதான கட்சிகளுக்கு எதிராக வாக்களித்திருக்கிறார்கள்.

பெருமளவு வெளிநாட்டவர்கள் வருகையால் தமது நாட்டவர்கள் வேலைவாய்ப்பு, கல்வி, சம்பளம், வீட்டு வசதிகள், உரிமைகளை இழப்பதாகவும் தமது வாழ்க்கைத்தரம் குறைவடைந்து வருவதாகவும் அவர்கள் கருதுகிறார்கள். அதாவது இங்கு வாழும் வெளிநாட்டவர்கள் நல்ல வேலை செய்கிறார்கள், நல்ல வசதியான வீடுகளை வைத்திருக்கிறார்கள், ஆடம்பரக் கார்களை வைத்திருக்கிறார்கள், பாரிய தொழிலகங்களை வைத்திருக்கிறார்கள், அரச உயர் பதிவிகளை வகிக்கிறார்கள் இதனால் தாம் இரண்டாம் தரத்திற்குப் பின்தள்ளிவிட்டோம் எனக் கருதுகிறார்கள்.

நடந்து முடிந்த ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தலின்படி யேர்மனியில் எதிர்கட்சியான CDU/CSU (Christlich Demokratische Union Deutschlands/Christlich-Soziale Union in Bayern) முன்னிலையில் உள்ளது. வலது சாரிக்கட்சி AfD (Alternative für Deutschland) ஆளும் கட்சியை பின்னுக்குத் தள்ளி இரண்டாவது இடத்திற்கு வந்துள்ளது. ஆளும் கட்சியான SPD (Sozialdemokratische Partei Deutschlands) மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டது. எதிர்க்கட்சியான CDU/CSU (Christlich Demokratische Union Deutschlands/Christlich-Soziale Union in Bayern) 30.00% முன்னிலையில் உள்ளது வலது சாரிக்கட்சி AfD (Alternative für Deutschland) 15.90% பெற்ற இரண்டாவது இடத்தில் உள்ளது. ஆளும் கட்சியான SPD (Sozialdemokratische Partei Deutschlands) மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டது.13.90% பசுமைக்கட்சி (Die Grünen - Bündnis 90/Die Grünen) 11.90% பெற்று மூன்றாவது இடத்தில் உள்ளது.

அதாவது 2019 ம்ஆண்டு தேர்தலில் 4வது இடத்திலிருந்த வெளி நாட்டவர்களுக்கு எதிரான வயதுசாரிக்கட்சி (AfD)இந்தத் தேர்தலில் 2 இடத்திற்கு வந்திருப்பது ஆச்சரியப்பட வைத்தது. வெளிநாட்டவர்களுக்கெதிரான கருத்துக்கள் வலுவடைந்து வருவதுடன் இன, மத, நிற, மொழி வெறுப்புகள் மேலோங்கி வருவதாகவே கருதப்பட்டுள்ளது. புசுமைக்கட்சி, இடது சாரிக் கட்சிகளும் இத்தேர்தலில் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றன.

யேர்மனியைப் பொறுத்தவரை வெளிநாட்டவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டிருக்கின்றது. எதிர்காலம் இருண்ட யுகத்திற்குத் தள்ளப்பட்டுவிடுமோ?..என அஞ்சி வாழவேண்டிய சூழல் தோன்றியுள்ளது. இந்நிலையில் வெளிநாட்டவர்களின் சந்ததிகளின் எதிர்கால நல்வாழ்வு எப்படி அமையப் போகின்றது எனப் பெற்றோர் கலங்கித் துடிக்க வேண்டியுள்ளது. வெளிநாட்வர்களுக்கு எதிரான வன்முறைகள், கருத்துக்கள் பெருகுவதற்கு வாய்ப்புகள் அதிகமாகவே காணப்படுகின்றன.

இருப்பினும் இந்த நாடு 2ம் உலக யுத்தத்தில் தரைமட்டமாக்கப்பட்டது வரலாறாகும். யுத்தம் முடிவடைய 1945ம் ஆண்டிலிருந்து இந்த நாட்டை நாடாக்கி வளர்ச்சியடைய வைத்து, கட்டிவளர்த்த பெரும் பங்கு வெளிநாட்டவர்களின் தொழிலாளர்களே. இதில் பெரும் பங்குகொண்டவர்கள் துருக்கி, அல்ஜீரியா, மொரோக்கோ, இத்தாலி போன்ற நாடுகளின் தொழிலா-ளர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் இல்லையானால் நிலமை வேறுமாதிரி யும் அமைந்து இந்நாடு பின்தள்ளப்பட்டிருக்கும் என்பதையும் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

எதுவானாலும் வெளிநாட்டவர்கள் பல லட்சம்பேர் இந்தநாட்டுக்கு வந்து குடியேறி 40 -50 - 60 - 70 வருடங்கள் சென்றுவிட்டாலும் யேர்மனிய மக்களுடன் சேர்ந்து ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இனவாத, மதவாதக் கட்சிகள் வேண்டாம் என்றும் அக்கட்சிகளைத் தடைசெய்ய வேண்டும் எனவும் போராட்டங்கள் நடாத்திவருவதுடன் வெளிநாட்டவர்களை ஆதரித்து வாழும் யேர்மனிய மக்கள் மிக அதிகமாகவும் காணப்படுகிறார்கள். ஆகவே வெளிநாட்டவர்களாகிய நாம் யேர்மனிய மக்களின் அமைதி, நல்வாழ்வுக்குக் குந்தகம் விளைவிக்காமல் அவர்களோடு கை கோர்த்து வாழ்வோமாக!...

**- ஆசிரியர் -**

# சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி...

### கூடிப் பிரியேல்...

வாழ்க்கையில் நீ பலரோடு பழகவேண்டி வரும். ஆனால் பழகுபவர்களை எல்லாம் நீ உன் உற்ற நண்பனாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு சிலரே அந்தத் தகுதி உடையவர்கள். அப்படிப்பட்டவருடனே நீ நட்புக் கொள்ளுகிறாய். இன்ப துன்பங்களில் ஒருவரோடு ஒருவர் பங்குகொண்டு பழகுகிறீர்கள். மகிழ்ச்சியான நாட்கள்.. சில காலம் சென்ற பிறகு அந்த அருமை நண்பரின் சில குணங்கள் உனக்கு ஏற்புடையதாக இல்லை. அவர் நல்லவர்தான் ஆனால் அவருடைய சில செயல்கள் உன் இயல்புக்கு உகந்ததாக இல்லை. இதனால் நீ அவருடன் விரோதம் கொண்டு வெறுத்துப் பிரிந்து விடலாமா?..கூடாது. அவருடைய சிறிய குறைகளைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். பலநாள் பழகியபின் சிறு குறை காரணமாகப் பிரிதல் கூடாது..

### கெடுப்பது ஒழி...

உனக்கு ஒருவன் ஒரு தீங்கு செய்கிறான். அதனால் ஆத்திரமடைந்த நீ பதிலுக்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் வாயிலாக அவருக்கு இன்னல் விளைவிக்கின்றாய் இது தவறு. ஏன் உடனே அவர் மீண்டும் உனக்குக் கெடுதல் செய்வார். இப்படி ஒருவர் மாற்றி ஒருவர் வஞ்சம் தீர்த்துக்கொண்டிருந்தால் என்ன ஆகும்?..இதைத்தான் காந்தி மகான் கூறினார். வன்முறைகளைக் கண்டிக்கும் போது ஒருவன் உன் கண்ணைக் கெடுத்ததற்காக நீ அவன் கண்ணை நாசமாக்கினால், பிறகு எல்லோருமே குருடர்களாகப் போகவேண்டியதுதான் என்று.. ஒருவருக்கு ஒருவர் கேடுசெய்துகொண்டே போனால் முடிவில் அழிவதான் மிஞ்சும். யாருக்கும் நன்மை ஏற்படாது. ஆகவே பழிவாங்கும் எண்ணத்தை ஒழிக்க வேண்டும்!..

# நல்நெறிபற்றி........

(வி நந்தகுமார்)

## உடல் உள ஆரோக்கியம்

அருவருப்பான வார்த்தைகள் அழகைக் குறைக்கும்.
ஆரோக்கியம் ஆனந்த வாழ்வு தரும்.
இரக்கம் உள்ளவன் சிறக்க வாழ்வான்.
ஈயாதார் வாழ்வு இன்பம் பெறாது.
உள்ளம் உறுத்தப்பட்டால் உடலும் உருகும்.
ஊக்கமான உறுதி இறுதிவரை இன்பம்.
எது நேர்ந்தாலும், நிலைதடுமாறாமல் நட.
ஏற்றம் வரும்போது எதிர்பாராத மாற்றமும் வரும்.
ஐம்பொறிகளை அடக்கித்தன்னுள் ஆத்திரத்தைக் குறை.
ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும்.
ஓர்மம் ஒப்பற்ற சாதனைகளை உருவாக்கும்.
அளவுடன் உண்பவன் அறிவாளி.
அதிகம் உண்பவன் அதிகம் சுமக்கிறான்.
செமித்தபின் செலுத்து, செமிபாடு சுலபமாகும்.
கோபம், கொடிய முகத்தைக் காட்டும்.
சினந்து பேசினால், சிரமங்கள் அதிகமாகும்.
கசப்பான வார்த்தைகள் கலகத்தைக் கூட்டும்.
பகைதீர ஒரேவழி, நட்பு ஒன்றுதான்.
மனவலி உடல் வலியைவிட வேதனையானது.
தவறு செய்தவர்கள், தவிப்புடன் வாழ்கிறார்கள்.
மதுபோதைகள் மனிதனை மாசு படுத்துகிறது.
குற்றமில்லாத மனம் குதூகலம் பெறும்.
சிரிக்கும்போது சிலநோய்கள் சிதறிப்போகின்றன.
மாசற்ற மனதில் மார்க்கங்கள் மகிமை பெறும்.
நல்லவற்றை நாடு அல்லவற்றை அகற்று.
உன்னதமான பணிகள் உன்னை உயர்த்தும்.
நீதியில் நிற்பவன் நிமிர்ந்து நடக்கிறான்.
உயர்வும் தாழ்வும், உன்னாலே உண்டாகிறது.
வழிமுறைகள் வாழ்க்கையை வழுக்காமல் வழிநடத்தும்.
சந்தோஷமும் துக்கமும் உன் சாவியில் உள்ளது.
போதனைகள் மறந்தால், வேதனைகள் மிஞ்சும்.
முழு முயற்சி எடுத்துத் தன்னும் மனிதனாக வாழ்.
நடைமுறை பிழைத்தால், தலைமுறை பிழைக்கும்.
நிறைவை நினைக்காமல் நிம்மதியை எட்ட முடியாது.
மென்மையாகக் கூறுங்கள் மேன்மை பெறுவீர்கள்.
மனஅமைதியில் இருந்தே மகிழ்ச்சி ஆரம்பமாகிறது.

# சூழலைப் பாதுகாப்பது சிறுவர்களின் கடமை...

இயற்கை வளங்களைப் பொறுத்தே நமது வாழ்வாதாரம் அமைகின்றது. இயற்கை அன்னையின் கொடையான இயற்கை வளங்களைப் பாதுகாப்பதே ஒவ்வொரு மனிதன் மற்றும் நாம் வாழும் சமூகத்தின் தலையாய கடமையாகும். நாம் உயிர்வாழத் தேவையான அனைத்து வசதிகளையும் நாம் இயற்கை வளங்களை மேம்படுத்துவதன் மூலமாகவே பெறமுடியும்.

காற்று, நீர், சூரியஒளி, மரம், மலை, மணல் என மனிதனின் தேவைகளுக்குப் பயன்படும் இயற்கை வளங்களில் பட்டியல் மிகப்பெரிதாகும். மனித தேவைகளுக்கு எளிதில் கிடைக்கும் இயற்கைகள் மட்டுமல்லாது பூமியைத் கடைந்தெடுத்த பெரும் வளங்களும் மிக முக்கியமானதாகும். மனிதன் தனது தேவைக்காக எவ்வளவு அரிதான வளங்களையும் பயன்படுத்தத் தொடங்கியதன் தாக்கம் நமக்கு தற்போதய இடர்பாடுகள் மூலமாகத் தெரியவருகின்றன.

மனித வாழ்வானது இயற்கை சூழ வளங்களையே சார்ந்துள்ளது. இயற்கை வளங்கள் மட்டுமே நமது பூமியை மனித வாழ்வாதாரத்திற்கு உகந்த அளவுகோலாக நிர்ணயிக்கின்றது. மனிதன் இயற்கை வளங்களைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டான். இயற்கை விவசாய நிலங்களை பாதுகாத்தல், மனித வளர்ச்சியில் மாசுபட்ட வாயுவை சரிசெய்தல், மரம் நடும் முறையைச் செயற்படுத்துதல் போன்ற பல செயற்பாடுகளைச் செய்து எம்மைப் பாதுகாக்கும் இயற்கையை நாம் பாதுகாப்போம்.

கழிவுப் பொருட்களை நீர் நிலைகளில் கலக்காமல் இருப்பது, நெகிழிப் (பிளாஸ்ரிக்) பயன்பாட்டை தவிர்த்தல், எல்லாவித குப்பைகளையும் எரிக்காமல் மீள் சுழற்சிக்குப் பயன்படுத்துவது, மின்சாரம் நீர் ஆகியவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது போன்ற செயற்பாடுகளினூடாக இயற்கை வளம் அழிவடையாமல் பாதுகாக்கலாம். ஆகவே மாணவர்களாகிய நாமும் இயற்கையைப் பாதுகாப்பதில் விழிப்பாக இருந்து செயற்படுவோம்!..

இயற்கை வளத்தைக் காப்போம்
எதிர்காலத்தை அழகாகச் சிறப்பிப்போம்!..

**செல்விகள்...**
**தர்சிகா, கஜீபனா, கீர்த்தனா, சுபாசினி**
**நல்லாயன் சிறுவர் இல்லம்**
**மாங்குளம்..**

# முல்லாவின் உயில்..



முல்லாவின் நண்பர் ஒருவர் பெரிய பணக்காரர். அவர் வீட்டுக்கு முல்லா செல்லும் போதெல்லாம் பணக்காரர் தமது திரண்ட சொத்துக்களை தம் மக்களுக்கு எவ்வாறு பிரித்து உயில் எழுதி வைப்பது என்பது பற்றியே அடிக்கடி பேசிக் கொண்டிருப்பார்.

உயிலை எழுதுவதால் அவருக்கு சிக்கல் ஏதும் இல்லை. ஆனால் தம்முடைய செல்வச் செருக்கினை மற்றவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதற்காகவே யாரைக் கண்டாலும் உயிலைப் பற்றிப் பேச்செடுத்து மணிக்கணக்கில் அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார். அவருடைய பணச் செருக்கு முல்லாவுக்கு எரிச்சலாக இருக்கும்.

ஒருநாள் செல்வந்தர் முல்லாவைத் தேடிக் கொண்டு முல்லாவின் வீட்டுக்கு வந்தார். அப்போது முல்லா ஒரு தாளில் ஏதோ தீவிரமாக எழுதிக் கொண்டிருப்பதை செல்வந்தர் கண்டார். " இவ்வளவு தீவிர சிந்தனையுடன் என்ன எழுதிக் கொண்டிருக்கிறீர்? " என்று செல்வந்தர் கேட்டார்.

"என் உயிலைத் தயாரித்துக் கொண்டிருக்கிறேன் தயாரித்து முடிப்பதற்குள் உயிர் போய்விடும் போலிருக்கிறது. ஒரே குழப்பம் சிக்கல் " என்றார் முல்லா.
" நீரும் உயில் எழுதுகிறீரா? உயில் எழுதும் அளவுக்கு உம்மிடம் சொத்தோ பணமோ ஏது? ஒன்றும் இல்லாதபோது குழப்பமும் சிக்கலும் எங்கிருந்து வந்தது? " என்று செல்வந்தர் வியப்புடன் கேட்டார்.

" சொத்தோ செல்வமோ இல்லாததனால்தானே உயில் எழுதுவதில் சிக்கல் இல்லாத சொத்து அல்லது செல்வத்தை எவ்வாறு என் மக்களுக்குப் பிரித்துக் கொடுப்பது என்றுதான் எனக்கு விளங்கவில்லை " என்று கூறிவிட்டு முல்லா சிரித்தார். தம்மை மட்டம் தட்டவே முல்லா இவ்வாறு கூறுகிறார் என்று உணர்ந்த செல்வந்தர் வெட்கத்துடன் தலைகுனிந்தார்...

## இயற்கையைப் பாதுகாப்போம்!..

இந்த உலகில் நிரந்தரமானவர்
என்று எவரும் கிடையாது
நிரந்தரமானது இயற்கையும்
இயற்கையின்
நிகழ்வுகளும்மட்டுமே!..

ஏழை பணக்காரன்
என்ற பாராபட்சம் இல்லாமல்
மனம் போல அனுபவிக்க
தன்னையே அர்ப்பணிக்கும்
அன்னை இயற்கையே!..

இயற்கை இறைவனின் பரிசு
உருவாக்கிவிட்டு அழித்தால்
அது எப்படி நியாயமாகும்
அழிப்பதை மட்டுமே
வேலையாகக் கொண்டால்
அது அநியாயம்
அடுத்து தலைமுறைக்கு
செய்யும் துரோகமாகும்!...

நீ இயற்கையை அழிப்பது
சரிதான் என்றால்
உன்னை இயற்கை
அழிப்பதும் சரிதானே!...

ஒவ்வொரு வினைக்கும்
எதிர் வினை உண்டு
நல்லது செய்தால்
நல்லது மட்டுமே
இயற்கையும் அப்படித்தான்
இயற்கையை மதிப்போம்
இயற்கையைப் பாதுகாப்பது
நம் கடமை அல்லவா!...

**செல்விகள்...**
**சதுர்சிகா, மதுசனா, தரணிகா**
**மோகனப்பிரியா, டிலோசிகா**
**கனிநிலா.. - மாங்குளம்**
**நல்லாயன் சிறுவர் இல்லம்**

## குழந்தைகள் நீங்கள்!...

ஏழை இன்று குழந்தைகள் நீங்கள் - எனினும்
இனி இந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்!

(இன்று குழந்தைகள் நீங்கள்)

நன்றாய்ப் படியுங்கள்! நாட்டின் குழந்தைகள்
ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணுங்கள்

(இன்று குழந்தைகள் நீங்கள்)

குன்றினைப் போல் உடல்வன்மை வேண்டும்!
கொடுமை தீர்க்கப் போராடுதல் வேண்டும்!
தின்றதையே தின்று தெவிட்டுதல் இல்லாமல்
அன்றன்று வாழ்வின் புதுமை காண வேண்டும்!

(இன்று குழந்தைகள் நீங்கள்)

பல்கலை ஆய்ந்து தொழில் பல கற்றும்
பாட்டின் சுவைகாணும் திறமையும் உற்றும்
அல்லும் பகலும் இந்நாட்டுக்கு உழைப்பீர்கள்!
அறிவுடன் ஆண்மையைக் கூவி அழைப்பீர்கள்!
சிறுவர்கள் சிறுமியர் என்று இருபால் -

(இன்று குழந்தைகள் நீங்கள்)

**- பாரதிதாசன் -**

# நகுலின் குட்டிக் கதைகள் - 6

### கோபம் கூடாது

சில நண்பர்கள் சேர்ந்து படித்து கொண்டிருந்தார்கள். நல்ல நட்புடன் ஒற்றுமையாக படித்தார்கள். அவர்களுள் ரவியும், ரகுவும் இருந்தார்கள். ஒரு புத்தகத்தில் கதை ஒன்றைப் படித்துக் கொண்டிருக்கும் போது ஒருவர் உனக்குத்தான் இந்தக்கதை பொருத்தம் எனச் சுட்டிக்காட்டினார்கள். உடனே ரவிக்கு கோபம் வந்தது. கோபத்தில் கத்திப் பல வார்த்தைகளைப் பேசினார். அதற்கு மற்றவர் பகிடி உனக்கு விளங்கவில்லை ஆத்திரனுக்கு புத்தி மத்திமம் என்ற பொருந்துகிறது என்றான் ரகு. முற்கோபம் கூடாது என்றான்.

இதில் இருந்து நாம் முற்கோபம் கூடாது என்பதை அறிந்து கொண்டோம்.

**செல்வன் நகுல் துரையரங்கன்**

........................................................................................

## வாழ்க்கையில் வெற்றி பெற "தகுதி" அவசியம்...

**த**......தன்னம்பிக்கை

**கு**......குறிக்கோள்

**தி**......திட்டமிடல்

........................................................................................

## School என்றால் இதுவும் ஒரு அர்த்தம்...

S C H O O L

Study Center House of Organized Learing

........................................................................................

## வெற்றி:-

நாம் வாழும்வரை நம்மை யாரும் வெறுக்கக்கூடாது!..வாழ்ந்து முடிந்த பின்பு நம்மை யாரும் மறக்கக்கூடாது!..அதுதான் நம் வாழ்வின் வெற்றி!..

# கல்வியே சிறப்பு...

ஒருவருடைய வாழ்க்கையிலே கல்வி மிக மிக முக்கியமானதும் தவிர்க்க முடியாததுமாகும். அதனால்தான் அனைத்து நாடுகளிலும் கட்டாயக் கல்விச் சட்டம் அமுலில் உள்ளது. ஆம் அந்தளவிற்குக் கல்வியின் முக்கியத்துவத்தை விளங்கக்கூடியதாக உள்ளது. இவ்வுலகிலே உள்ள ஜீவராசிகளிலே மனிதனானவன் மட்டுமே ஆறறிவு வாய்க்கப் பெற்றவன். இதனால்தான் கணனி, அறிவியல், விண்வெளி என நுண்ணறிவு சார்ந்த பல துறைகளிலே மனிதன் வளர்ச்சியடைந்திருக்கின்றான்.

இவற்றுக்கு எல்லாம் மூலகாரணம் கல்வியே ஆகும்.. கல்வியின்மூலம் அறிவு மாத்திரமன்றி மனமும் வளர்ச்சியடைகின்றது. கல்வியின் மூலம் புகழ் பெற்றவர்கள் பலர். உதாரணமாக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன், இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் போன்றவர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் இளமையில் வறுமையில் போராடிக் கல்வியில் வெற்றி பெற்ற மகான்களாவர்.

உலகில் படித்த ஒருவன் மிக இலகுவாக மற்றவர்களைவிடப் புகழ் பெற முடியும். உதாரணமாக நீங்கள் கூறலாம் விளையாட்டு வீரர்கள் புகழ்பெறுகிறார்கள் என்று. அவர்களின் புகழ் அவர்கள் விளையாடும்வரைதான் ஆனால் படித்து உயர்ந்தவன் புகழ் காலாதி காலம் அழியாப்புகழோடு விளங்கும். அன்றைய மன்னர்கள் காலத்தில்கூட கல்விமான்களுக்குச் சென்ற இடம் எல்லாம் தனிச்சிறப்பு இருந்ததை வரலாறுகள் கூறுகின்றன.

திருக்குறளை எடுத்தோமானால் அதில் கல்வி என்கின்ற அதிகாரத்தில் இதனை விளங்கிக் கொள்ளலாம். மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன். மேலும் கற்றோனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற பாடலும் நல்ல உதாரணங்கள்.

கல்வி என்றவுடன் நம் பெற்றோரை இதில் கட்டாயம் குறிப்பிட்டே ஆகவேண்டும். புலம்பெயர் நாடுகளிலுள்ள நம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் படிப்புக்கு மிக முக்கியத்துவம் கொடுப்பவர்களாக உள்ளனர். அதையிட்டு மாணவர்களாகிய நாம் பெருமையடைகின்றோம். இப்படிச் சிறப்புப் பெற்ற கல்வியை கற்று இவ்வுலகில் வளமாக வாழ்வோமாக.. நம் பெற்றோருக்கும் பெருமை சேர்ப்போம்!..

**(01.06.2024 அன்று யேர்மனி - எசன் நகரில் இடம்பெற்ற எசன் நகர தமிழ்மொழிச்சேவை பாடசாலை மாணவர்களின் பேச்சுப் போட்டியில் ஒரு மாணவரால் பேசப்பட்ட விடையமாகும்.)**

## இலங்கையில் கல்விபற்றிய தகவல்...

1- முதலாவது மத்திய மகாவித்தியாலயம் அமைக்கப்பட்ட இடம் - மத்துகம

2- முதலாவதாக தேசிய கல்வியல் கல்லூரி - மகாவலி தேசிய கல்வியல் கல்லூரி.

3- இலங்கையிலுள்ள தேசிய கல்வியற் கல்லூரிகளின் எண்ணிக்கை - 19.

4- மகாபொல புலமைப்பரிசில் திட்டத்தை ஆரம்பித்தவர் - முன்னாள் அமைச்சர் காலம்சென்ற அத்துலத் முதலி.

5- ஆங்கிலப் பாடத்திட்டத்திற்கென ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தேசிய கல்வியல் கல்லூரி - பேராதனை தேசிய கல்வியற் கல்லூரி.

6- முதலாவது திறன்வகுப்பறை ( Smart Class room ) எங்கு அமைக்கப்பட்டது- கொழும்கு ஜயவர்த்தனபுர ஆண்கள் மகாவித்தியாலயம்.

7- வணிகக் கல்விக்கான கல்வியற் கல்லூரி எங்குள்ளது - மஹரகம.

8- தேசிய கல்விக் குறிக்கோள்களில் முதலாவதாக வலியுறுத்தப்படுவது - தேசிய ஒருமைப்பாடு.

.....................................................................................................................................

## இலங்கையில் பிரதான நதிகள்..

பெயர்களும் அவற்றின் நீளம் மற்றும் கலக்கும் இடங்கள்..

1- மகாவலி கங்கை - 335 கி.மீ - திருகோணமலை

2- களனி கங்கை - 145 கி.மீ - கொழும்பு

3- வளவ கங்கை - 138 கி.மீ - அம்பாந்தோட்டை

4- களு கங்கை - 129 கி.மீ - களுத்துறை

5- மாணிக்க கங்கை - 115 கி.மீ - யால

6- ஜின் கங்கை - 113 கி.மீ - காலி

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 44

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | | 1 | 4 | | 8 | |
| | | | | | 6 | 4 | | 3 |
| | 6 | | 3 | | | 9 | | |
| | | 8 | | 4 | 1 | | | 2 |
| | 4 | | | | 8 | 7 | | 5 |
| | 7 | | | 3 | | | | |
| 1 | | 2 | | | | | | |
| | | 5 | 2 | 8 | | | 9 | |
| | | 6 | | 5 | | 2 | | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 137
## ( ஆடி - ஆவணி 2024 )

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இவ
01-03 விளையாட்டுப் பொருள்.
15-16 இது வந்தால் பத்தும் பறந்துவிடும் என்று கூறுவார்கள்.
வ-இ
12-10 இது ஒரு நேரப் பொழுது.
15-13 இது ஒரு நிறம்.
கீ-மே
11-07 விரைவு, வேகம் என்றும் கூறலாம்
மே-கீ
01-13 பல் துலக்கப் பயன்படுவது.
04-16 மாதங்களில் ஒன்று.
06-10 பட்டம் விடுவதற்கு இதுவும் பயன்படும்.

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

# பழமொழிகளும் விளக்கங்களும்...

1- அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்டது போல..
அரசினை என்பது ஆலமரத்தைக் குறிக்கும். அதவது திருமணமான பெண்கள் பிள்ளைப்பேறு பெற அரச மரத்தைச் சுற்றுவார்கள் காரணம் அரசமர வாயு கருத்தங்குவதற்கு ஏதுவானது எனக் கருதப்படுகின்றது. கட்டிய கணவனைக் கவனிக்காமல் வெறும் அரச மரத்தைச் சுற்றுவது பயன் தராது.
(அரசனை-அரசினை வேறுபாடு உண்டு)

2- மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?..
மண் குதிர் என்பது ஆற்றின் நடுவில் இருக்கும் மண் திட்டு / மேடு இதை நம்பி ஆற்றில் இறங்கினால் ஆற்றில் சிக்கிக் கொள்ள வேண்டும்( குதிரை - குதிர் வேறுபாடு உண்டு)

3- வர..வர மாமியாள் கழுதை போல ஆனாளாம்..
வர..வர மாமியார் கயிதை போல ஆனாளாம். கயிதை என்பது ஊமத்தங்காயை க் குறிக்கும். ஆரம்பத்தில் ஊமத்தம் பூவாக இருக்கும்போது பார்க்க அழகாக இருக்கும் பின்னர் நாளாக..நாளாக அது காயாக மாறி சுற்றிலும் முள் போல இருக்கும். கொடிய விஷம்கொண்டது அது போல மாமியார் பேசுவதும் நடப்பதும் நாளாக..நாளாக கயிதைபோல இருக்கும் என்று அர்த்தம்
( கயிதை - கழுதை வேறுபாடு உண்டு )

4- ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டியாவான்..
ஆடம்பரமாக வாழும்தாய், பொறுப்பில்லாமல் போகும் தந்தை, ஒழுக்கம் தவறும் மனைவி, துரோகம் செய்யும் உடன் பிறப்பு, பிடிவாதம் பிடிக்கும் பிள்ளை இந்த ஐந்தும் கொண்ட எந்தக் குடும்பமும் முன்னேறாது என்பதே பொருள். ஆனால் பலர் இதை வேறமாதிரிப் புரிந்து வைத்திருக்கிறார்கள். (சிலர் ஐந்து பெண் பிள்ளைகளைப் பெற்றவர்கள் என்று தவறாக அர்த்தப் படுத்துவார்கள்)

5- பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க...
மணமான பின்பு பதினாறு குழந்தைகளைப் பெற்று பெரு வாழ்வு வாழ்க எனத் தவறாக அர்த்தம் கொள்வார்கள் இது தவறு. அதாவது பதினாறு செல்வங்களைப் பெற்று வளமாக வாழவேண்டும் என்பதே இதன் சரியான விளக்கமாகும். ஆகவே யாரும் மணமக்களை வாழ்த்தும் போது இந்தப் பதினாறையும் கூறி வாழ்த்துங்கள் .இதுதான் சிறப்பானதாகும்...

| | | | |
|---|---|---|---|
| 01 - புகழ் | 02 - கல்வி | 03 - வலிமை | 04 - வெற்றி |
| 05 - நன் மக்கள் | 06 - பொன் | 07 - நெல் | 08 - நல் விதி |
| 09 - நுகர்ச்சி | 10 - அறிவு | 11 - அழகு | 12 - பெருமை |
| 13 - இனிமை | 14 - துணிபு | 15 - நோயின்மை | 16 - நீண்ட ஆயுள் |

## எதிர்க்கருத்துச் சொற்கள்...

01- அசட்டுத்தனம் - சாமர்த்தியம்
02- அசதி - சுறுசுறுப்பு
03- அசாதாரணம் - சாதாரணம்
04- அசுரர் - சூரர்
05- அழித்தல் - ஆக்கல்
06- அடி - முடி
07- அம்பலம் - மறைவு
08- அசீரணம் - சீரணம்
09- அலங்காரம் - அலங்கோலம்
10- அவசரம் - நிதானம்
11- ஆக்கம் - கேடு
12- ஆடவர் - பெண்டிர்
13- ஆண்டவன் - அடியவர்
14- ஆத்திகன் - நாத்திகள்
15- ஆதாயம் - நட்டம்
16- ஆதரவு - அநாதரவு
17- ஆவேசம் - சாந்தம்
18- ஆண்டான் - அடிமை
19- ஆரம்பம் - முடிவு
20- ஆனந்தம் - துக்கம்

................................................................................................................................

## தை + பை + கை .....

1- ஊர்ந்து செல்லும் தை - நத்தை
2- பொருட்களை வேண்டும் தை - சந்தை
3- படுக்க உதவும் தை - மெத்தை
4- அப்பாவைக் குறிக்கும் தை - தந்தை
5- அப்பாவின் சகோதரியைக் குறிக்கும் தை - அத்தை

1- கறி சமைக்க உதவும் பை - அகப்பை
2- வயலில் வேலைக்கு உதவும் பை - கலப்பை
3- உணவு உடலில் தங்கும் பை - இரைப்பை
4- திருடன் வழிப்பறி செய்யும் பை - கைப்பை
5- கறியின் வாசனைக்கு உதவும் பை - றம்பை

1- துன்பத்தில் வரும் கை - அழுகை
2- சகோதரியை குறிக்கும் கை - தங்கை
3- பெண்ணை குறிக்கும் கை - மங்கை
4- சிவனின் தலையில் இருக்கும் கை - கங்கை
5- சிறிய தெருவைக் குறிக்கும் கை - ஒழுங்கை

# அறிந்து கொள்வோம்...

1- மனிதனின் இதயம் சராசரியாக ஒரு நாளைக்கு ஒரு லட்சம் (1.00.000 ) முறைகளுக்கு மேல் துடிக்கின்றது. உதாரணமாக 60 வயதைக் கடந்த மனிதனின் இதயம் மொத்தமாக 200 கோடி முறைக்கு மேல் துடிக்கம் அப்படி என்றால் 100 வயதுடைய மனிதனின் இதயம் மொத்தம் சராசரியாக 350 கோடி முறைக்கு மேல் துடிக்கும்..

2- மனித உடலிலுள்ள இரத்தக் குளாய்களின் மொத்த நீளம் 96.000 கி.மீட்டராகும். அதிசயமானதுதான் நமது மனித உடல்.

3- சூரியனுக்கும் பூமிக்கும் இடையேலுள்ள தூரம் 1.49.59.787 கி.மீ. இத்தூரத்தை சூரியன் ஒளி நொடிக்கு 3 லட்சம் (3.00.000) கி.மீ என்ற வேகத்தில் வந்தடைய எடுத்துக்கொள்ளும் நேரம் 8 நிமிடம் 20 நொடிகள்.

4- பூமியிலுள்ள நீரில் 97.4 வீதம் கடல் நீராக அதாவது உப்பு நீராக உள்ளது. மீதமுள்ள 3 வீதம் நன்னீராக உள்ளது. அதிலும் 1.8 வீதம் பனிப்பாறைகளாக உறைந்துள்ளன. 0.78 வீதம் நிலத்துக்கு அடியிலும் 0.02 வீதம் குளங்கள், ஏரிகள், ஆறுகள், பிற நன்னீர் உள்ள நீர் நிலைகளாகவும் காணப்படுகின்றன. இதன் மூலம் உலகில் நமக்குக் கிடைக்கும் நன்னீரின் அளவு எத்தனை குறைவானது என்பதை நாம் அறியலாம்.

5- சூரியனைச் சுற்றிவரும் கோள்கள்...

1- பூமி - (ஏர்த் -Earth) 2- புதன் (மேர்குரி - Mercury)
3- வெள்ளி - (வீனஸ் -Mercury) 4- செவ்வாய் (மார்ஸ் - Mars)
5- வியாளன் - (ஜூபிட்டஸ் - Jupiter) 6- சனி (சாடர்ஸ் - Saturn)
7- யுரேனஸ் - (Uranus) 8- நெப்டியூன் (Neptune)

........................................................................................................................................

# ஆட்சிக்காலம்...

நமது தாய் நாடான இலங்கையை முன்னர் வெளிநாட்டவர்கள் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். இதற்கு முன்னர் தமிழ் மன்னர்கள் ஆட்சி புரிந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. நமது நாடு 1505ம் ஆண்டு தொடக்கம் அந்நியர் ஆட்சிக்கு வந்திருக்கின்றது. ஆட்சிபுரிந்தவர்களைப் பார்ப்போம்..


போத்துக்கீசர் - 1505 - 1656 - 151 வருடங்கள்

ஒல்லாந்தர் - 1656 - 1796 - 140 வருடங்கள்

ஆங்கிலேயர் - 1796 - 1948 - 152 வருடங்கள்

## கணக்குப் புதிர்ப்போட்டி...

| | | | | |
|---|---|---|---|---|
| 68 | | 62 | | 56 |
| | 63 | | | 69 |
| 64 | 46 | | 70 | |
| | 59 | 66 | | 65 |
| | | 54 | 61 | |



**புதிர் - 1**

- மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், இடமிருந்து வலம், வலமிருந்து இடம் கூட்டினால் கூட்டுத்தொகை 290 வரவேண்டும்.
- 46 தொடக்கம் 70 வரையிலான எண்களைப் பாவிக்கலாம்.

**புதிர் - 2**

- சுடோக்கோ...ஒரே நேர் கோட்டில் ஒரே இனப் பறவைகள் வரக்கூடாது.
- ஆறு சதுரங்களிலும் ஆறு இனப் பறவைகள் இம்பெற வேண்டும்..

**விடைகள் இன்னொரு பக்கத்தில்....**

........................................................................................................................................

## ஆசிரியர்களே தெய்வங்கள்!..

தாயை போல கருணையும் தந்தை போல அறிவுரையும் தவறுகளை திருத்தியதும் ஏணியாய் இருந்து எங்களை ஏற்றியதும் அறிவு பசியை ஆற்றியதும் நல்லது கெட்டது அறியும் அறிவு தந்ததும் புத்தனின் ஞானமும் சித்தனின் அனுபவமும் சொல்லிக் கொடுத்த தெய்வமும் சிறு சிறு தவறுகளை திருத்தியும் உலக அறிவையும் உணர்த்தியும் என்போன்ற பலரையும் மேலே உயர்த்தியும் எங்கள் திறமைகளை புரியவைத்தும் தோழன் போல தோளில் தட்டிக்கொடுத்தும் முன்னேற்றப் பாதையில் அழைத்து சென்றும் பல சேவை செய்த உங்கள் சேவைக்கு நன்றி சொல்கிறேன் என் பாசமிக்க ஆசிரியர்களே உங்கள் ஆசிரியர் பயணம் என்றும் இனிமையாய் நீண்டு தொடரவும் நீங்கள் பல்லாண்டுகள் வாழவும் வாழ்த்துக்கள்!..

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## அளவை...

அன்றாடம் ஓடிக்கொண்டிருந்த பேரூந்தின் சக்கரத்தைப் பார்த்துத் தெரு கேட்டது..." மண் முழுவதும் சுற்றி வருகின்றாயே நீ பெற்ற அனுபவம்தான் என்ன?." . சக்கரம் அமைதியானது. பின்பு அது தெருவைப் பார்த்துச் சொன்னது... நான் என்னையே பலமுறை சுற்றி அளந்து கொள்கிறேன். அதனால்தான் உலகத்தையே அளந்து வருகிறேன்... திரும்பவும் தெருவைப் பார்த்து புரிகிறதா?.. என்று கேட்டது சக்கரம். அது சொன்னது...

**" தன்னை அளந்தவன் மண்ணை அளந்தவன் "**

## சண்டித்தனம்...

எல்லோரையும் அடித்து நொறுக்குவேன்...இடியோசையோடு சண்டித்தனத்தில் இறங்கியது மின்னல். ஒரு நொடிதான். வளைந்து நொறுங்கி அது முறிந்து விழுந்தது. மண்ணில் இருந்தபடியே மின்னலின் சண்டித்தனத்தையும் வீழ்ச்சியையும் பார்த்த தவளை சொல்லியது..

**" சண்டியாய் எழுவான் நொண்டியாய் விழுவான் "**

# குறளும் பொருளும்...

## குறிப்பறிதல்:-

701 - கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாறாநீர் வையக்கு அணி.

702- ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தொ டொப்பக் கொளல்.

703 - குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.

704 - குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரனையரால் வேறு.

705 - குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு
ளென்னை பயத்தவோ கண்.

706 - அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்.

707 - முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும்.

708 - முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின்.

709 - பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின்.

710 - நுண்ணிய மென்பா ரளங்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற.

# குறளும் பொருளும்...

## மனமறிதல்..

701- ஒருவர் சொல்லாமலே அவர் மனதில் நினைத்ததை அவரது கண்ணாலும் முகத்தாலும் அறிபவன் உலகத்திற்கு அணிகலமாவான்.

702- மனதில் உள்ளதை ஐயப்படாமல் உணர்ந்து ஒரு முடிவுக்கு வருபவன் மனிதருள் தேவனாவான்.

703- தன் மனச் சிந்தனையால் பிறர் மனக் குறிப்பை அறியும் அறிஞர் விரும்பி வேண்டுவதைக் கொடுத்தாவது அவரைத் துணையாகக் கொள்க.

704- ஒருவர் மனதில் நினைத்ததை அவர் சொல்லாமலே அறிந்துகொள்பவரோடு மற்றவர் உறுப்பால் ஒன்றுபட்டாலும் அறிவால் வேறுபட்டவராவர்.

705- ஒருவன் முகத்தாலும் கண்ணாலும் அவன் மனக்குறிப்பை உணராவிட்டால் உறுப்புகளாகிய கண்களால் என்ன பயன் உண்டாகும்.

706- தன்னை அடுத்த பொருளின் உருவைத் தன்னுள் காட்டும் பளிங்கு போல ஒருவன் நெஞ்சில் எண்ணியதை அவன் முகம் காட்டும்.

707- ஒருவனின் விருப்பையும் வெறுப்பையும் அவன் முகம் காட்டிவிடும். அம்முகத்தைவிட அறிவுடையது உண்டோ..

708- உள்ளத்தை உணர்ந்து உற்றதை உரைக்கும் ஒருவருடைய முகத்தை நோக்கி நின்றால் போதும். தன் குற்றத்தைக் கூறிவிடுவார்.

709- கண் பார்வையின் வேறுபாடுகளை உணர்பவர் ஒருவனுடைய மனதில் உள்ள பகையையும் நட்பையும் அவனது கண்களினாலேயே அறிந்து சொல்லிவிடுவர்.

710- பிறரது நுட்பமான அறிவை அளக்குங்கோல் எது என்று ஆராய்ந்து பார்த்தால் அவருடைய கண்களே அல்லாமல் வேறு இல்லை.

# குறுக்கெழுத்துப்போட்டி-200
## (ஆடி- ஆவணி 2024)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-05 இது ஒரு விளையாட்டுப் போட்டி.
09-11 மாடுகள் கட்டிவைக்கும் இடம்.
22-26 இரு பக்கத்தால் எழுதினாலும் ஒரு சொல்.
வ-இ
07-05 இதை ஊன்றினால்தான் மரம் செடி முளைக்கும்.
17-15 வீட்டில் ஒருவன்.
28-26 தமிழர்கள் இதை உயிரினும் மேலாகக் கருதுவார்கள்.
34-31 தாயகத்தில் அரசால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் இப்படியாக விடுவிக்கப்பட்டன.
45-43 கிழமை ஒத்த சொல்.
கீ.மே
25-11 இலங்கையில் ஒரு நகரம்.
26-12 சினிமா, சின்னத்திரையில் இவளுக்கும் ஓர் இடமுண்டு.
34-13 கல்வி கற்கும் இடங்களில் ஒன்று.
37-30 வீட்டு மிருகங்களில் ஒன்று.
45-31 மனிதருக்கு வரும் நோய்களில் இதுவும் ஒன்று.
மே-கீ
01-43 இதுவும் ஒரு போராட்ட வடிவம்.
07-35 காலம் சென்றதை இப்படியும் அழைக்கலாம்.
25-46 நம் நாட்டில் வீட்டுப் பாவனைப் பொருள் இது.
26-47 வட்டத்தின் அரைப் பங்கு.
28-49 கவிச் சக்கரவர்த்தி என்று இன்றும் அழைக்கப்படுபவர்.
34-48 கூரான ஆயுதம் இது.
(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

# முள்ளிவாய்க்கால்...

- வே புவிராஜ்... நோர்வே -

சிலிர்க்கிறது தேகம்
மே வந்தால் அனல் பூத்து
கொதிக்கிறது தேசம் மறந்துவிட
முடியாமல் இரைந்து அழுகிறது
கடல் அலையும் காற்றும் .

முள்ளிவாய்க்கால்
தமிழர் எம் பேர்
இனத்தை ஏப்பம்மிட்ட சதுப்பு நிலம் .
உருக்குலையா உணர்வலைகள்
அமிலம் என கசிகிறது வடுச்சுமந்த
வலிகளோடு காலம் இன்றும் நீழ்கிறது.
தசை சிதைந்த எலும்புகளில்
மரபணுவை தேடுகின்றோம்
சொந்தம் தேடி வாடுகிறோம் .

ஒன்றா இரண்டா
பலநூறு ஆயிரம்
கால் வேறு கைவேறு தலைபோன
முடம் வேறு உடல் குறு தெரியாத
பிணமானோர் பல நூறு
வான் அதிர கிபீர் வந்து வகை
வகையாய் குண்டெறியும்
யார் எவர் விதி என்று
எதை எதை சொல்லுவது

கோவில் என்றும் பள்ளி என்றும்
கூடிவந்தோர் அடைக்கலமாய்
தேவன் அவன் ஆலயத்தில் வந்து பூர
தேடிவந்து குண்டு விழும்
யாரும் இங்கே மிச்சமில்லை .

முன் எதிரே ஓடிவந்து செஞ்சிலுவை
தடுக்கவில்லை. செஞ்சிலுவை
குறி பதித்த மருத்துவமனை
கூட தப்பவில்லை கர்ப்பிணிகள்
கருக்கலையை காயமுற்றோர்
உயிர் பறிய ஒட்டிவைத்து
கட்டக்கூட மருந்து இல்லை
எச்சில் நீர் தாக்கத்துக்கும்
தண்ணீர் இல்லை
கண்ணீரில் தத்தளித்தோம்
உமிழ் நீர் வற்றியபின்
உடம்பில் இல்லை உயிர் அணு .

பல் குழல் எறிகணையால்
காற்றலையில் கலந்து கந்தகம்.
அனல் விடும் சுடுகாடாய
தமிழ் நிலம் எரிந்தது .
மரம் செடி கொடி முதல்கால்நடை
அனைத்துமேகரியாக்கி விழுந்தன .
ஈ எறும்பு புழு கூட நொடியினில்
இறந்தது குருவிகுயில்காக்கை கூட
மிச்சம் இல்லை வல்லூறின்
வட்டத்துக்குள் சிறைப்பட்டு
விழுந்தன .

அனாதைகள் ஆக்கப்பட்டோம்
தெருநாயாய் வீசப்பட்டோம்
காடையர் வேட்டைக்கெல்லாம்
தமிழச்சி இரையானாள்.
புலிக்காட்டில் நரிகள் வேட்டையாட
மௌனித்திருந்தது பாயும் புலி .
வேங்கைகள் விழுந்தது ஓநாய்கள்
உலவியது தமிழர் எம்சரணாலையம்
முள் வேலி ஆனது .
மேற்குலகம் மௌனித்ததுதமிழக
மேடையெங்கும் மயில் ஆட்டம்
தோகை கட்ட மகான்கள் மான்கள்
ஆனார்கள் மனிதம் மரித்ததன்று .

பெரு மழை விட்டபின்னும்
தூறுகின்ற வானமென வேட்டுக்கள்
தீரவில்லை வெடிச்சத்தம்
ஓயவில்லை காணாமல்
போனவரை கண்டு சொல்ல
யாரும்மில்லை .

தமிழ் தாயின் முலை அறுத்து
தறுதலைகள் ஏலமிட ஈழத்து
வளம் எல்லாம் எடுப்பார்
கை ஆனதின்று அடுத்த எம்
தலைமுறைக்கு எடுத்துரைக்க
நாதியில்லை
தனித்து நிக்கும் தமிழ் இனமாய்
தனிமையில் அழுகிறோம்!....

# தரமற்ற தமிழன் நிலை..

- ப.பசுபதிராசா -

கல்தோன்றி மண்தோன்றி ஆயினும் அறிவு தேன்றாமை மடமை
மரங்களை கற்களை வணங்கும் அடிமை மனோ பாவமுறமை
பூச்சி புழுக்களுக்கு உயிர்நேயம் கொண்டு போடுவாராம் மாக்கோலம்
சக மனிதனை வாழவிடாது சூனியம் செய்யும் தீய மனிதக்கோலம்...

பெற்றெடுத்து வாழ்வுதந்த பெற்றோரை ஏமாற்றும் மனக்கலை
பெண்குழந்தை பிறந்தால் வளர்க்கவே முடியாமல் சிசுக் கொலை
தப்பித்தவறிவளர்ந்த அப்பெண்ணை வாழவைக்கமுடியாமல் சீதனக்கொலை
இரண்டுஉயிர்கள் வேற்றுமைமறந்து வாழத்தலைப்பட்டால் ஆணவக்கொலை.

பிறர்தம்மை அடக்கியாள தலைப்பட்டது வெறும் நூறுவருடங்கள் கீழ்
நம்மை நாமே எளியவர்ஏழை என அடக்கியது இரண்டுஆயிரங்களுக்குமேல்
நம்மிடமே பெருமைகள் பற்பல இருந்தும் அதைக்கீழ் என எண்ணுவது ஏன்
அது பிறரிடம் இருந்தால் அதையே பெருமை எனக்கொண்டாடுவதேதான்...

பறவைகள் தாம்விரும்பியதைத் தேடி உண்ணும் சுதந்திர துரித நிலை
கோவில் குளத்தில் மாடுகள் எருமைகள் குளிப்பது புண்ணிய வகை
செடி கொடிதான் நினைத்தபடி பற்றிப்படர்ந்து வாழ்வதில் இல்லை குறை
நான் விரும்பியதை உண்ண வேறு ஒருவன் ஆணை வேண்டிய தேவை...

யப்பானியன் தன்னைத்தானே சுய விமர்சனம் செய்து கொள்கிறான்
தமிழன் தன்னைத்தானே புகழ்ந்து புளுகி உண்மையை கொல்கிறான்
அதனால் அணுக்குண்டு அழிவிலும் நாட்டைக் கட்டி எழுப்ப முடிந்தது
நம்மால் நாட்டைவிட்டு ஓடி அடிமை விசுவாசிகளாய் வாழ முடிந்தது....

பொது நலத்திற்கு உழைப்பதென்பது மதிப்பிற்குரியது என்பது இல்லை
மாவீரர்கள் தியாகிகள் கர்மவினை உடையர் என்பது எண்ண எல்லை
தமிழர்கள் தம்மைத் தாம் ஆளும்திறமை இல்லாதவர் எனும் நோக்கு
உலகமெல்லாம் தமிழர் மற்றவர்களால் ஆளப்படும் போக்கு.....

..............................................................................................................................

## தீட்டு!..

எத்தனைபேர் கை பட்டாலும்
எத்தனை அசிங்கப் பட்டாலும்
தீட்டு என்று ஒதுக்கப்படாத
ஒரே ஒரு பொருள் பணம்...

## மது!...

இழப்பு பணம் மட்டுமல்ல
உயிர்களும் ஏராளம்
நன்மை எதுவுமே இல்லை
தீமை ஏராளம் மதுவில்!..

- சிவா -

## வலிசுமந்த அகதி முகாம் வாழ்வு...

வானம் கறுகறுக்க
மேகம் திரண்டுவர
இடியோடு மின்னல்வர
கன மழை பெய்தது
மூட்டிய அடுப்பு அணைந்தது
ஏற்றிய உலை இறங்கியது
பிஞ்சுக் குழந்தைகள்
பசியால் வாடிக்கிடக்குது
பசித்த வயிறு பற்றிஎரியுது
யுத்தம் ஒருபக்கம்
மழை ஒரு பக்கம்
இயற்கையே நீயும் எமக்கெதிரானாயோ?

ஒட்டிய உடம்பிலே
உயிர்மட்டும் ஒட்டிக்கிடக்குது
நித்தம் கண்ணீர் மழையிலே
நாங்கள் நனைகிறோம்
நீதி கிடைக்குமா எம் வாழ்வில்?
பட்டகாலே பட்டுக்கிடக்குது
மூத்த குடியே முடங்கிக்கிடக்குது
யாரிடம் முறையிடுவோம்?

வேட்டுத் தெறிக்கயிலே
போறவளி தெரியாது
கால்போன போக்கிலே
சிதறியே போனோம்
உறைவிடம் விட்டோம்
உடைமையும் விட்டோம்
உழைத்து வாழும் எம்
பிழைப்பையும் விட்டோம்
யுத்தம் எமை பந்தாடி மகிழ்கிறது
நாம் திண்டாடி நிக்கிறோம்
தவறென்ன செய்தோம்
நாம் தண்டிக்கப்பட?
உரிமைகள் தான் கேட்டோம்..

சொத்தோடு முத்தான சொந்தங்களை
கொத்தாக பறிகொடுத்து பரிதவித்து
நிற்கின்றோம் நாம்
கனத்த மனதின் ரணங்கள் இங்கு
மௌனித்து உறங்கிக் கிடக்கிறது
அறாயாத முகங்கள்
தெரியாத உறவுகள்
சொல்லாத சோகங்கள்
நெஞ்சோடு தாங்கி
நாளை நமக்கு ஒரு
விடிவு வரும் என்ற
நம்பிக்கையோடே ஏங்கித்
தவிக்கிறோம் நாம்....

**சந்திரா...**
**டென்மார்க்...**

.................................................................

## நாவடக்கம்!..

நாவடக்கம்தான் நம்மை
நல்வழிப் படுத்துகின்றது- பேச்சில்
மட்டுமல்லாமல்-நாம்
உண்ணும் உணவிலும்தான்!..

## பழம்!....

பயிற்சியும் முயற்சியும்
விடாத கடின உழைப்பும்
சந்திக்கும் இடம்தான்
வெற்றி என்னும் புகழ்!..

## பொக்கிசம்!..

பாதுகாப்பு வேண்டுமானால்
கரையில் நில்லுங்கள்
பொக்கிஷம் வேண்டுமானால்
கடலுக்குள் மூழ்குங்கள்!..

**- சிவா -**

# அகம் மறவா ஆடிக்கலவரம்.....

திருமதி கௌரி கண்ணன்

தன்மானத் தமிழர்கள்
தம் தேசத்தில்
துடிதுடித்து மாண்ட
துயர நாள்களில்
ஒன்று கறுப்பு ஜூலை!..

தமது தேசத்தில்
தமது உரிமைகள்
பறித்த தருணம்
அதை மீட்டிட
தமிழ் இளைஞர்களாலும்
புத்திஜீவிகளாலும்
எடுத்த பல்வேறு
முற்சிகள் பலிக்காத
நிலையில்......
திருநெல்வேலி மண்ணில்
பதின்மூன்று இராணுவத்தினர்
கொல்லப்பட்டதும்
எதிரொலியாய் தெற்கில்
வெடித்தது ஆடிக்கலவரம்!..

வெலிக்கடைச்சிறையில் இருந்த
அப்பாவி அரசியல்கைதிகள்
குட்டிமணி ஜெகன் உட்பட
ஐம்பத்து மூவர்
தலைகள் பிளந்து
கண்கள் தோண்டி
இதயங்கள் கிழித்து
குடல்கள் உருவி
குரல்வளைகள் அறுத்து
கைகால்கள் துண்டித்து
கௌதம புத்தருக்கு
சிங்களக் காடையர்களால்
காணிக்கை செய்யப்பட்ட

கறை படிந்த வலி சுமந்த
நாள் யூலை இருபத்துமூன்று!..

"தாம் இறந்தாலும்
தமது கண்கள்
மலரும் தமிழீழத்தைக்
காண வேண்டும்-தமது
கண்களைத் தானம்
செய்ய வேண்டும்
என்ற -குட்டிமணி ஜெகனின்
கனவை விழிகளில்
இரத்தம் சிந்த
உயிரோடு தோண்டி
எடுத்தது சிங்களம்!..

மலையக மக்களுடன்
தெற்கில் வாழ்
தமிழர்கள் உடமைகள்
பறிக்கப்பட்டு அழிக்கப்பட்டு
சிதைக்கப்பட்டு
கொலை கொள்ளை
கற்பழிப்பு முடுக்கி
விடப்பட்டு கோரவெறி
கண்ட துயர நாள்
கறுப்பு ஜூலை!..

கறுப்பு ஜூலை போல்
பலவித கறுப்பழிவுகள்
பலவேறு வடிவங்களில்
இன்று வரை தொடர்ந்து
தமிழர் தம் உரிமைகள்
இன்னமும் மீட்கா
நிலையில் நிர்க்கதியாய்
தாயக வாழ்வு தொடர்கிறது
நாற்பத்தோராவது
கறுப்பு ஜூலை
நினைவுகளுடன்!...

## உழைப்பாளி...

வியர்வை சிந்தி உழைக்கின்றான்
வேரின் மைந்தன் இவனன்றோ!
கூர்மை வாழ்வின் குணவாளன்
குடும்பம் காக்கும் தொழிலாளி!
நேர்மை உழைப்பு நெஞ்சினிலே
நேசம் வைத்து வாழ்பவனாம்
பாரே போற்றும் பண்பாளன்
பலமே கொடுப்போம் உழைப்புக்கே!
வயலை உழுது வளமாக்கி
வண்ணப்பயிரைச் செழிப்பாக்கி
அயர்வை தமக்குள் காட்டாமல்
அல்லும் பகலும் உழைப்பவனே!
உயர்வை வாழ்வின் குறிக்கோளாய்
உண்மை உழைப்பைப் பலமாக்கி
தயவாய் பயிரைத் விளைவித்தே
தரணி போற்றும் நல்லோனே!

### ஓய்வு!..

நூலகத்தில் கைத்தொலைபேசிக்கு
நன்றாக ஓய்வு கொடுங்கள்
பலவகைப் புத்தகங்களுக்கு
நன்றாக வேலை கொடுங்கள்!..

**- சிவா -**

## விடியல்...

விடியல் என்றும் உனக்காக
விண்ணில் தோன்றும் உணருகவே!
படிகள் பலவே காத்திருக்கும்
பாங்காய் உயர வழிவகுக்கும்!
நொடிகள் இமைக்கும்
பொழுதினிலும்
நுட்பத் திறனாய்ப் போட்டியிடு!
துடிப்பாய் வாழ்வில் உயர்ந்திடவே
துலங்கும் அறிவைக் கூராக்கு!

உன்றன் விடியல் உள்ளத்தில்
உணர்வாய் என்றும் துடிக்கட்டும்!
இன்பம் எழுதும் எழுதுகோலாய்
இறைவன் பாதம் தொடரட்டும்
வென்றே ஒளிரும் அறிவொளியாய்!
வெற்றி வாழ்வில் ஒளிரட்டும்!
நன்றே படைக்கும் இன்றமிழால்
நாளும் புதுமை பூக்கட்டும்!

உலகம் போற்றும் புதுவிடியல்
உனக்குள் பரவ முனைந்திடுவாய்!
நலமே போற்றும் நற்றிறனும்
நனவாய் ஆக உழைத்திடுவாய்!
திலகம் போலே மதிப்புடனே
திகழ என்றும் செயற்படுவாய்!
குலமே போற்றும் நல்வாழ்வு
குவியப் பாடு படுவாயே!

**தமிழ்மணி நகுலா சிவநாதன்**

### செருப்பு!..

சொகுசு காட்சியறையில் இருந்தாலும்
ஆயிரம் லட்சத்துக்கு
வேண்டி அணிந்தாலும்
வீட்டில் வெளியேதான்!..

## வேள்விப் பொங்கல்...

**திருமதி ராணி சம்பந்தர்**

அதிகாலை 5 மணிக்கு எழும்பி
முதல் நாள் சுட்டு வைத்த பால்
ரொட்டி,முறுக்கு பக்குவமாய்ப்
பெட்டியிலிட்டுக் கடகத்தில்
நிரப்பிடும் அம்மா

பொங்கல் பானை,பச்சை அரிசி,
பயறு போன்ற பொங்கும் மூலப்
பொருட்களைச் சேர்த்ததும் சுட்ட
உளுந்து வடையை வாழை நாரில்
கோர்த்து அழகிடும் அம்மா

பொறுக்கிய பனை மட்டை விறகு
சேர்த்து ஒரு கட்டுக்கட்டி உச்சந்
-
தலையிலே கடகம் அதன் மேல்
விறகுக்கட்டும்,ஒரு கையில் பானை
மறு கை தலையில் பிடித்த படி
விறுக்கு விறுக்கென நடந்திட

அதிகாலை கண் கசக்கியபடி
அம்மாவிற்குத் துணையாய்ப்
போகையில்"ம்மே ம்மே"எனக்
கத்தும் கிடாயும் அடுத்து என்ன
நடக்கப் போறது தெரியாது
கூடி வரும் கூடவே வரும்

புண்ணியத்திற்கென்று கிணற்றில்
ஒருவர் அள்ளி இறைக்கும் நீரால்
கால் முகம் கழுவிப் பொங்கத்
தொடங்க என் எண்ணமோ சுவர்க்
கரையில் அமர்ந்து அழகான
வளையல்விற்றிடும் சோப்பு
சீப்புக் கண்ணாடியில்

அம்மா பத்துத் தரம் கூப்பிட்டும்
பத்துநிமிடத்தில் தன் தலையை
அறுக்கப்போகும் அந்த பரிதாப
விறுவிறுப்பில் விடை கூறும்
ம்மே, ம்மே, ம்மே

தும்பு முட்டாசுக்காரன் கண்ணாடிப்
பெட்டியில் 5 காசுக்கு ஒரு சொட்டைக்
கிள்ளிப் பழைய கடதாசியில் சுற்றிட
சர்பத்காரனோ "சர்பத் சர்பத் எனக்
கூவிக் கூவிக் கூப்பிட

காப்புக்காரனோ இதுதான் தர்ணமென
இறுக்கமான காப்பால் கையை விடாது
பிடிக்க கொண்டு வந்த காசோ முடிய
மிச்சம் மீதி வாங்க அம்மாவின்
சேலைத் தலைப்பு அவிழ்க்க

பொங்கி முடிந்த
அம்மாவுடன்,அழுதழுது
ஊதும் அம்மம்மா
குழலுடனும் வீடு போக
வழியில் ரத்தம் சொட்ட கூட வரும்
தலைஇல்லா முண்டமும் பயமுறுத்த
ஓடி ஓடி வந்த பலா மரத்தில்
தொங்கிய ஆட்டை
உரித்துப் பங்கு போட்டு உண்ட
இறைச்சி மே மே எனக் கத்தியதே!...
..........................................................................

## வெளிநாடு!..

இன்று அம்மாவின் நினைவுநாள்
மேசை முழுவதும் காய்கறிகள்
வகைவகையாய் பரவிக்கிடக்கின்றன
உண்ண ஆட்களில்லா வீடு
நானும் மனைவியும்தான் வீட்டில்
பிள்ளைகள் வெளிநாட்டில்!...

**- சிவா -**

## நூலகமே நுண்ணறிவுப் பெட்டகமே..

சாலச்சிறந்திட்ட சரித்திரத்தின் உருவாக்கம்
ஞாலமே வசப்படும் நூலகத்தின் நூற்தேட்டம்
அடுக்கடுக்காய் மாடியுடன் வானுயர்ந்த பெட்டகமே
அவனியிலே தமிழர் திறன் ஒருங்கிணைத்த தேட்டமிது
வலம்புரியின் சங்காகி வற்றாத சுரங்கமென
ஆசியாக்கண்டத்தின் ஆழிமுத்தாகி திகழ்ந்தாயே
அரக்கரின் அழிப்பிலே அனலிலே தீயானாய்
வெந்தணலில் வேகியே சாம்பலில் மேடனாய்
அறிவின் தேட்டமே நூற்களின் நுண்ணறிவே
காலத்தின் பொக்கிசமே கலங்கரையின் வெளிச்சமே
தமிழினமே மாண்டதாய் தனித்துவமே புதைந்ததாய்
நூலகப் படுகொலையில் நொந்து மடிந்து நாம்
ஆண்டுகள் நாற்பத்தி மூன்றாச்சு
நலிந்திட்ட வரலாற்று வலியில் நம்
நூலகம் மீண்டும் மிடுக்குடன்
மீளவும் உயிர்ப்புடன் வானுயர் அடுக்குடன் வாழினும்
அன்றுபட்ட துயர் அழியாத ரணமே
ஆயுள் முழுதும் எம்மால் ஆற்றுப்படுத்தலற்ற கனமே
முழுமதியின் மிடுக்கிழந்து முழுநூல்கள்
பலமிழந்த வாழ்நாளின் வலிச்சுவடே.

**- வசந்தா ஜெகதீசன் -**

## மாற்றங்கள் மாறாதது!..

நீர்க்குமிழி வாழ்வினிலே
நிரந்தரமாய் ஏதுமில்லை
ஊற்றாகும் சிந்தனையே
உயர்வுக்கு வேராகும்!
நாற்றாகி எழுந்திருக்கும்
நதியாக விரைந்திருக்கும்
தோற்றங்கள் பலவாகித்
துலக்கிடும் புதுப்பாதை!
அண்டத்தின் சுழற்சியிலே
அழகழகாய் ஏற்றங்கள்!
வென்றவரின் சாதனையாய்
வீழ்கிறது வெற்றிக்கனி!
அண்ணாந்து பார்த்திட்ட
ஆகாய வெளியெங்கும்
அடிபதிக்கும் காலமிதாய்
ஆக்கிய வளர்ச்சிகள்!
கண்சிமிட்டும் நொடியில்
காட்சியாய் அனைத்துலகும்
கொண்டுவந்து நிறுத்துகின்ற
கடுகதிக் கணினியுகம்!
நோக்கும் இடமெங்கும்
நிறுவுகின்ற பாடங்களாய்
வாழ்வினிலே மாற்றங்கள்
என்றும். மாறாதது

**- கீத்தா பரமானந்தன் -**

## உலகப் பரப்பெங்கும்!...

- இரா . சம்பந்தன் -

ஊரிலே வாழ்பவரின் உயர்வுக்காய்
தோளிலே சுமைகள் தாங்குவோர்
துவண்டு போவதுண்டு
தாங்க வொண்ணாச் சுமைகளைத்
தாங்கியே நிற்பதனால்

தன்னை யுருக்கித்
தரணிக்கு ஒளிகொடுக்கும்
மெழுகுவத்தி போன்றவர்
தியாகச் சுடர்களாய்

கொட்டும் பனியிலே
குளிரிலே நடுங்கியபடியே
உறங்காமல் பணிசெய்தே
உறவுகளுக்குக் கரங்கொடுப்போர்

சொந்த பந்தங்களை கரைசேர்க்க
சுமைதாங்கி நின்றவர்
நொந்தவராய் வாழ்கின்றார்
புலம்பெயர் தேசங்களிலும்

ஏணியிலே ஏறும்வரை
இளநகை சிந்தியவர்
ஏணியிலே ஏறியபின்
ஏணியை எட்டியே உதைப்பவராய்

காரியம் முடியும்வரை
கைகால்கள் பிடிப்பதும்
காரியம் முடிந்தபின்
கைகழுவிச் செல்வதும் . . . .

மனிதம் தொலைத்து
வட்டிப் பணத்திலே
வளங்கள் பெற்றவரும் ,
வறியவரின் வயிற்றுப் பசிக்கு
வழங்காமல் நிற்பவரும்

பகட்டுக்காய் மனைகள் வாங்கிப்
பட்டகடன் அடைப்பதற்காய்ப்
பகலிரவு தூக்கமின்றிப்
பதட்டமுடன் ஓடுவோரும்

அயல்வீட்டார் அவுடியில் பயணிக்க
அதைப்பார்த்து அவசரமாய்
வங்கிக் கடனதில்
வாகனம் வாங்கியே
வங்குரோத்து ஆனவரும்

காலையென்ன மாலையென்ன
கவலையற்ற மானிடராய்
போதையிலே திளைத்துப்
பொழுதுகளைக் கழிப்போரும்

இத்தனையும் அரங்கேறும்
இப்புவியின் பரப்பெல்லாம்
அத்தனையும் எண்ணிப் பார்க்கையிலே

பெட்டிக்குள் அடங்கும் மனிதன்
பேதைமை கொண்டே
கட்டித் தங்கத்திற்கும் காமத்திற்கும்
காலமெல்லாம் அலைவதை யெண்ணிக்
கலக்கமுறும் நெஞ்சு!...

.....................................................................

## தேசம்!..

அழகு உடைந்து வறுமையானாலும்
அழுக்கடைந்த தோற்றத்துக்குள்
அழகான காவியம் பிறக்கின்றது
அழகான தேசத்தை உருவாக்குகின்றது!

- சிவா -

## எண்பத்திமூன்றில் எரிந்த ஆடி....

எண்ணிப் பார்க்கும் நாளிதுவோ -மொழி
எழுத்துக்குள்ள அடங்கா பொருளிதுவோ
கண்ணில் கரையாக் காட்சிகளை-இந்த
ககனம் மட்டுமே கண்டதுவோ..?

கண்டங்கள் கூடி எரித்த மண்- எழும்
கரிமூட்டம் மிதந்தே சூழ்ந்ததுவே விண்
அண்டத்தில் ஆச்சரியம் அறிவோரே-இங்கு
அலறிய அழுகுரல்களை ஆய்வீரோ..?

மண்ணில் நிகழாக் கொடுமைகளால்-இங்கு
மரித்தவர் பலஇலட்சம் சடலங்காய்
புண்ணிலே வேலைப் புதைத்தனரே-காலை
புலர்வுக்குள் பல்வகை படலங்களாய்.

வண்ணம் பூத்தவெம் சாலைகளில்-ஆடி
வதையில் மரித்தவர் எத்தனையோ
திண்ணமாய்ச் சிங்களஇனவெறியில்-கற்பை
தின்று சிதைந்தவர் எத்தனையோ.?

மண்டலம்போற்றும் தமிழ்மண்ணில்-மெல்ல
மக்கிக் கிடைக்குதெங்கள் வரலாறு
தண்டனை பெறுவதற்கு நாமெல்லாம்-ஈழத்
தமிழராய்ப் பிறந்தது குற்றமாமோ.?

குண்டும் ஆயுதமும் துளைத்திடாது-கரம்
கூடிய சிந்தனைகள் சிதைந்திடாது
கொண்ட இலக்கினை அடையும்வரை-பட்ட
கொடுமைக்கு தண்டனை பிழைத்திடாது.!

**- அம்பலவன் புவனேந்திரன்..**



## அகிலத்தின் அன்னை!....

அகிலம் போற்றிடும் அன்னை
திரேசாவே
அன்புள்ளத்தால் ஆதரவற்றோரை
அணைத்தாய்
தொழு நோய் பிடித்தோரின் துயர்
துடைத்தாய்
தொட்டுத் தடவிப் பெரும்
தொண்டு செய்தாய்
அவதிப்பட்டோர்க் கெல்லாம்
அன்னையாய் தெய்வமாய்
அரும் பாடுபட்டு தாதி போல்
நோய் தீர்த்தாய்
எத்தனை துன்பங்கள் தினம்
வந்து நேரிடினும்
அத்தனையும் சவாலாக்கி
அருந்தொண்டு செய்தாய்
எத்தனை ஆண்டு நினைதனை
எண்ணிப்பார்க்கையிலே
எளிமையாக வாழ்ந்து செய்த
எண்ணிலடங்கா பணிதன்னை
எட்டுத்திசையும் வாழும் உலக
மக்கள் உனைப்போற்றிட
எல்லா ஆண்டும் உன்
நினைவுகள் வந்து போகும்
அன்னையே
இறைவனை வேண்டி
உனை வணங்கி நிற்கிறோம்!....

**- இராஜேஸ்வரி சிவராசா**

# மண் இதழிலக்கம் 225 இற்கான அட்டைப்படக்கவிதை.




சூரியப் பிரகாசம் சூழும் இடப்பத்தின் சின்னம்
சுற்றிவரும் வட்டமாய் சுழல்கிறது இன்னும்
நேரிய பயணத்தில் நிறம்பிரித்திடா வண்ணம்
நீண்டிடும் நாளெல்லாம் நின்பணியே இன்னும்.

கூரிய சிந்தனையில் குவிந்து நிற்கும் உழைப்பு
குவலையத்தில் தனியொருவர் கூட்டமாய் விரிப்பு
பாரிய பணிகளால் பல்கிப் பெருகிய அமைப்பு
பண்பட்ட விழிப்புணர்வைப் பதியமிட்ட வியப்பு

சீரிய சமூகநலத்தைச் செம்மைப்படுத்திய ஒருவர்
சேவை ஒன்றால் மனிதத்தை சேமித்த தலைவர்
வீரிய முனைப்புகளுடன் விரிவாக்கியவோர் மனிதர்
விதைகளைத் தூவியே பெருவிரிச்சமா யாக்கியவர்

ஆரிய ரெத்னா என்றும் அன்பின் இமயமானர்
அறுபத்து மூன்றாண்டு அறப்பணி ஆற்றியவர்
காரியங்களிற் கவனமாய்ப் பொதுமை காத்தவர்
காலத்தால் அழியாத கருணையின் வடிவானவர்.

**- அம்பலவன்புவனேந்திரன் -**

# கொஞ்சம் சிரிப்போம்...

01-மனைவி- இந்த வீட்டில் ஒன்று நான் இருக்கவேணும் இல்லை உங்க அம்மா இருக்கவேணும்?..
கணவன்- வேலைக்காரியை விட்டுட்டு நீங்க இரண்டு பேரும் எங்கையாவது போயிருங்கோ!..

02-மாணவன்- செய்யாத தம்புக்கு எனக்கு தண்டனை தருவீங்களா சேர்
ஆசிரியர்- தர மாட்டேன் ஏன்?..
மாணவன்- நான் Home work செய்யலை சேர்!..

03-பாலன்- பல் டாக்டரை பார்க்கப் போனேன் உங்கள் லேடி டாக்டர் இருந்தார் திரும்பி வந்து விட்டேன்..
மனைவி- ஏன் அப்படி..
கணவன்- ஏனென்றால் நான் எந்த பெண்ணிடமும் பல்லுக் காட்டி நிற்கக் கூடாது என்பதற்காக..

04-ஆசிரியர்- என்னிடம் ஐந்து மாம்பழங்களில் ஒன்றை உன் தங்கையிடம் கொடுத்தால் என்ன வரும்?..
மாணவன்- சந்தேகம்தான் வரும்!..

05-மனைவி- பள்ளிகளில் செல்போனுக்கு தடை விதித்திருப்பது மகிழ்ச்சியா அதிர்ச்சியா.?..
கணவன்-பெற்றோருக்கு மகிழ்ச்சி பிள்ளைகளுக்கு அதிர்ச்சி...

**- ஜெயா நடேசன் -**

# இதுவும் சிரிப்புத்தான்...

01- கணவன்- என்னைப் பெத்தவங்கள் நாளைக்கு வீட்டுக்கு வாறாங்க...
மனைவி- அதுக்கு என்னங்க டாலிங்...
கணவன்- அவங்க எதிரில என்னைச் சமைக்கச் சொல்லாதே!..

02- கணவன்- ஏன்டி பரிசுபெற்ற வாஷிங்மெஷினை வேண்டாம் எண்டனி?..
மனைவி- அதுக்குத்தானே நீங்க இருக்கிறீங்க...அந்தப் பெறுமதியான காசை வேண்டி எனக்கு முகப்பூச்சு, கிறீம் வேண்டப் போறன்!..

03- அம்மா- மகனே ஏனடா ஸ்கூலுக்குப் போகும்போது சீப்புக் கொண்டு போகிறாய்?..
மகன் - கேள்வி கேட்கும்போது தலையைச் சொறியக்கூடாது என்று மிஸ் சொன்னவா...அதுக்குத்தான்!..

**- சிவா -**

# மொழி வாழியவே ....

- சர்வேஸ்வரி கதிர்த்தம்பி -

காகத்தின் கூட்டில் முட்டையிட்ட குயிலின் குஞ்சும் கூட பிறர் கூட்டில் பிறந்து விட்டோம் என்பதற்காகத் தன் தாய்மொழியை இழப்பதில்லை. பிறமொழி பேசும் இன்னொரு இனத்தின் சேர்க்கையை காகம் விரும்புவதும் இல்லை..மணிக்கணக்கில் பேசும் நாமோ இந்தவொரு சிறு முனைப்பின்உத்வேகம் தரும் வாழ்வியல் பாடங்களை ஆழ்மன தேடலாக சிந்திக்கும்போது கற்றுத்தரும் வலுவான பக்கங்கள் விரிந்தே செல்கிறது.

தாய் மண் வாழ்க்கையினை புரட்டிப்போட்ட புலம்பெயர்வின் ஆக்கிரமிப்பில் வாழ்வினை தொடர உழைத்துவாழவோ....புகுந்த நாட்டு மொழியினை கற்றிட முதல்.... வேலைதேட முடியாத இக்கட்டான போராட்டத்தில்சிக்கியபோது, ஊரில் உயர்பதவியில் உன்னத ஆளுமையில் வாழ்ந்த வாழ்வினை மறக்கடித்து மூலை முடுக்குகளில் தென்பட்ட உணவகங்கள், வியாபார ஸ்தலங்கள் இப்படி உழைப்புக்காக அலைந்த காலங்கள்...

எல்லாமே காலத்தால் அழிக்க முடியாத வேதனை வரலாறு. மனத்தில் எழுதிய சிறுகதை ...தொடர்கதையானதும் பக்கங்களை புரட்டி பார்த்திடும் வேளையில் இவற்றால் கற்றுக்கொண்ட பாடங்கள் சிந்திக்க அடுத்த நகர்வுக்கான வழிமுறைகளை தேடவைத்தது.இந்தநேரத்தில் காகத்தின் செயல்போல் எந்தவொருநாட்டு மக்களும் எமக்கு செய்திருக்க நினைத்திருந்தால்.....

எம்மினத்தின் அல்லல் அவலம் சோகவரலாறாகவே தான் தொடந்திருக்கும் .எமக்கு புகலிடம் தந்தவர்களை மனதார மண்டியிட்டு வாழ்த்தவே எங்கள் சரிதம் தொடர்கிறது. புகலிட மண்வாழ் மனிதநேயம் மிகுந்தநேசம் காட்டியதால் தான் எம்மால் அடுத்த கட்டம் என்ன செய்வது என்பதை உத்தேசிக்க பலமான வலுசேர்க்க முடிந்தது. எமை ஆதரித்து ஒருங்கிணைந்து செயலூக்கதினை திட்டமிட்ட முனைப்புக்குள் வலுப்படுத்த ஆரம்பித்த தாய்மொழி கலை கலாசார அணுகுமுறை , பக்தியில் சமயபற்று ஊடுருவும் பாங்கும் புகலிடம் காட்டிய நேசத்தின் மனிதாபிமானத்தின் மேன்மையே தான் இன்று எம் மூன்றாம் தலைமுறைகளை நல்வழிப்படுத்தி எங்கள் கலை கலாசார பண்புகளை அவர்களுக்கு கடத்தும் வழிமுறைகளையும் கையாள இலகுவானது ...

எங்கள் பிள்ளைகளும் தங்கள் பெற்றோர்களின்சோதனை வேதனைகளை புரிந்ததில் உணர்ந்ததில் தங்கள் எதிர்காலமுனைப்புகளில் மிக்க ஆழமாக கவனமாக் செயல்பட்டதில்அவர்கள் வாழும் நாடுகளில் தங்களை தங்களின் திறைமைகளை மிக்கச் சிறப்பாக வெளிக்காட்டி தமிழ்த் தாய்மொழியின் மகத்துவத்தினை பேணிக்காத்திட முவந்ததும் மட்டுமல்ல தங்கள் எதிர்காலச் சந்ததிக்கும் வாழ்வியலில் முக்கியமானதாகவும் கருத்தினில் பதித்து உன்னதமான செயலூக்கம் கொண்டுள்ளார்கள் என்பதை காணமுடிகிறது. இளையவர்களை அவர்களின் ஒவ்வொரு செயலூக்கதின் ஆக்கமுறையைகவனத்திலெடுத்து அவ்வப்போது வாழ்த்தியும், நிகழ்வுகளுக்கு நேரில் சென்றும் தட்டிக்கொடுத்து அவர்களை வெற்றியாளர்களாக்கி பெருமையோடு சரிதம் எழுதுவோம்.!..

# வெளிநாட்டுக்கு வந்து நான் கற்றுக்கொள்ளும் பாடங்கள் இதுதான்.....

- ஒரு கப் நெய் சோறு அரிசிக்கு இரண்டு கப் தண்ணீர் ஊற்ற வேண்டும் என்று படித்ததும் இங்கேதான்.

- நாம சாப்பிட்ட, குடிச்ச பாத்திரத்தை நாம்தான் கழுகி வைக்க வேண்டும் என்று படித்ததும் இங்கேதான்.

- எந்த உணவு சாப்பிட்டாலும் அதில் உப்பில்லை, காரமில்லை, சுவை இல்லை என்று குறை சொல்லக்கூடாது என்றும் படித்தது இங்கேதான்.

- இன்று பிரிட்ஜில் வைத்து நாளை சூடாக்கி சாப்பிட்டாலும் ஒன்றும் ஆகாது என்று படித்ததும் இங்கேதான்.

- வாழ்க்கையில் சரியான நேரத்திற்கு அலாரம் வைத்து எழுந்திருக்கவும், உறங்கவும் படிச்சது இங்கேதான்.

- சத்தம் இல்லாமல் கதவை திறக்கவும் மூடவும் படித்தது இங்கேதான்.

- தனது கனவு தேவதையாக தலையணையை கட்டிப்பிடித்து உறங்கி பழக படிச்சதும் இங்கேதான்.

- பொறுமை என்ற 3 எழுத்திற்கு அர்த்தம் என்ன என்பதை படித்ததும் இங்கேதான்.

- எவ்வளவு கும்மிரட்டிலும் ரூமில் உறங்குபவர்களுக்கு தொந்தரவு செய்யாமல் ஆடை அணியவும், சாப்பாடு சாப்பிடவும் படித்தது இங்கேதான்.

- நூறு கிடைத்தாலும் பத்து ரூபாய் கடன் வாங்கி 110 ஆக நாட்டுக்கு அனுப்ப படித்ததும் இங்கேதான்.

- மின்சாரத்தையும், தண்ணீரையும், சோப்பையும், பற்பசையையும் சிக்கனமாக உபயோகிக்க படித்ததும் இங்கேதான்.

- பள்ளிக்கூடத்தில் 10 அல்லது 15 வருடங்களில் படிக்காத பல மொழிகளைப் படித்ததும் இங்கேதான்.

- வாழ்க்கையில் இன்ப துன்பங்களை தாங்கி வாழப்பழகி படிச்சதும் இங்கேதான்.

- சொந்தமாக ஒரு தேநீர் கூட போட தெரியாதவன் வெளிநாட்டுக்கு வந்து ரெண்டு மூணு மாதங்களுக்குள் பிரியாணியும் பல கறிகளும் சமைக்கப் பழகியதும்து இங்கேதான்.

- உலகத்தில் எங்கேயும் படிக்க கிடைக்காத பொருளாதார சாஸ்திரத்தை படித்ததும் இங்கேதான்.

வெளிநாட்டு வாழ்க்கை,அது ஒரு கதை. யாரும் சொல்லாத கதை.சொல்ல மறந்த கதை.வெளிநாட்டுக்காரர்களை வாழ்த்துகிறேன்.நானும் உங்களில் ஒருவன் என்று பெருமை கொள்கிறேன்.

# தாயகத்தில் தமிழரின் உணவுக் கலாச்சாரம்.....

(கலைவாணி.ஏகானந்தராஜா)

கொழும்பில் ஒரு வாரம் மட்டக்களப்பில் ஒரு வாரம் யாழ்ப்பாணத்தில் சில வாரங்கள் தங்கிவந்தேன். விலைவாசி ஏற்றம் நாடு முழுவதற்கும் தான் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. கொழும்பிலும் சரி யாழ்ப்பாணத்திலும் சரி (Food citty) என்றழைக்கப்படும் சுப்பர் மார்கெட்களில் ஜரோப்பாவில் காணப்படும் சகல பொருட்களும் அங்கு பெறக்கூடியதாக உள்ளன. கோப்பி சீனி பலசரக்கு வகைகள் யாவும் யூரோவில் கணக்குப் பார்த்தால் ஒரே அளவு விலைதான்.

கொழும்பில் நின்றபோது காலைச் சாப்பாடு பால் கஞ்சி இடியப்பம் பிட்டு அனேகமாக பாண் அல்லது பணிஸ் (Bun) சீனி பணிஸ் அல்லது சீனிச்சம்பல் வைத்த பணிஸ். பாடசாலைப் பிள்ளைகளும் இதையே கட்டிக்கொண்டு செல்வதைப் பார்த்துள்ளேன். மாலை நேரங்களில்தான் வடை றோல்ஸ் கறிரொட்டி கேக் வகைகள் தேநீர் நேரத்துக்காக வாங்கிச் செல்வார்கள்.

மட்டக்களப்பிலும் அதே வாடிக்கை தான். கொழும்பிலும் சரி மட்டக்களப்பிலும் சரி பாடசாலைச் சிறார்கள் மதிய உணவை வீட்டிலிருந்து எடுத்துச்செல்வதை பார்த்தேன். வீட்டில் சமைக்கும் உணவையே எடுத்துச் செல்வார்கள். யாழ்ப்பாணத்தில் காலை உணவை கடைகளில் வாங்கிக் கொடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளார்கள். இது கலாச்சாரமாகவே மாறி வருகிறது.

நான் பல தடவைகள் கண்டுள்ளேன். நான் யாழ்ப்பாணத்தில் அச்சுவேலியில் தங்கியிருந்தபோது பாடசாலை செல்லும் பிள்ளைக்கு பெற்றார் காலை உணவுக்கும் மதிய உணவுக்கும் கேக்வகைகளையும் கறிரொட்டி றோல்ஸ் போன்றவற்றையும் வாங்கிக் கொடுப்பதை கண்டு மிக வருந்தினேன். தினம் வீட்டு வாசலுக்கு வாகனத்தில் பாண் எடுத்துவரும் பழக்கம் என் சிறு வயதிலிருந்தே தெரிந்திருந்தேன். தற்போதும் வானத்தில் பாண் எடுத்துவரும் பழக்கம் உண்டு ஆனால் பாண் மட்டுமின்றி கேக் வகைகளும் றோல்ஸ் கறிரொட்டி வடை சீனிபணிஸ் போன்றவற்றையும் எடுத்துவருவார்கள். பிள்ளைகள் பாண் தவிர்ந்த மற்றவைகளையே கேட்டு வாங்குவதை பார்த்தேன்.

ஒரு இறாத்தல் பாண் விலை 150 ரூபா.
ஒரு றோல்ஸ் விலை 80 ரூபா
ஒரு கிழங்கு றொட்டி 60 ருபா
ஒரு துண்டு கேக் 60 ருபா
இனிப்பு (Bun)வகை ஒன்று 60 ரூபா

ஒரு இறாத்தல் பாணை நான்கு அல்லது மூன்று பேர் காலை உணவாக உண்ணலாம். ஒரு பிள்ளைக்கு காலை இரண்டு அல்லது மூன்று ரோல்ஸ் வாங்க எவ்வளவு செலவாகும் என்பதை யோசித்துப் பார்த்தேன். செலவு மட்டுமா? உடலுக்கு தீங்கு விளைவிக்கும்..

உணவுவகைகளுக்கு இவ்வளவு பணத்தை கொடுக்கிறார்களே !எண்ணையில் பொரித்த உணவுகள் ஆரோக்கியத்தை பாதிக்குமல்லவா ? மிக வேதனையாக இருந்தது. வீடுகளில் காலை உணவு தயாரிப்பதென்பது அருகிவருகிறது என்றே சொல்லலாம்.

திருநெல்வேலியில் உள்ள அம்மாச்சி கடையடியில் போய் பார்த்தால் தெரியும். முண்டியடித்துக்கொண்டு நிற்கும் பாடசாலைப் பிள்ளைகளும் வேலைக்குச் செல்லும் பெற்றார்களும் உணவு பார்சலுக்காக காத்திருப்பார்கள். இடியப்பம் பிட்டு தோசை இட்லி சிலர் வடை ரொட்டி என வாங்கிச்செல்வர். சில பெற்றார் புத்திசாலித்தனமாக பிள்ளைகளதும் தங்களதும் (Lunch box) உணவு பெட்டிகளை எடுத்துவந்து நிரப்பிக்கொண்டு செல்வதை பார்த்தேன்.

பிள்ளைகள் நீரை பருகுவதை தவிர்த்து வருகிறார்கள். நேக்ரோ கோலா பெப்சி சோடா வகைகளையும் மைலோ நெஸ்ரல் பால் வகைகளையும் வாங்கித் தரும்படி பெற்றாரிடம் அடம்பிடித்து வாங்கி குடிக்கிறார்கள்.
பெப்சி கோலா வகைகள் ஒரு லிற்றர் விலை 200 ரூபா
சோடா வகைகள் முக்கால் லிற்றர் விலை 150 ரூபா
மைலோ நெஸ்ரல் பால் வகை 100 மில்லி 180 ரூபா

இவை மட்டுமா? ஒவ்வொரு ரோட்டிலும் புரியாணி கடைகளும் கொத்துரொட்டி கடைகளும் பெரிய எழுத்தில் மாட்டப்பட்ட போர்ட்டுகளுடன் காட்சியளிக்கின்றன. அத்துடன் தற்போது பீட்சா (pizza) கடைகளுக்கும் பஞ்சமில்லை.
1.499 ரூபாவுக்கு ஒரு பீட்சா வாங்கினால் ஒன்று இனாம்
1.000 ருபாவுக்கு பீட்சா வாங்கி எத்தனைபேர் உண்ணலாம்?

வீடுகளில் நடைபெறும் பிறந்தநாள் விழா முதல் திருமணம் சாமத்திய சடங்கு என்று எந்த விழாவானாலும் ஓடர் சாப்பாடுதான். ரோல்ஸ் இல்லாத விழாவே இல்லை என்று சொல்லலாம். ஏன் மரணவீடுகளுக்கு கூட ஓடர் சாப்பாடுதான். இழப்பு வீட்டில் 31 ம் நாள் காரியத்தின் பின் வந்தவர்களுக்கு ஒவ்வொரு பார்சல் கொடுத்தார்கள்.

ஒருவர் பெருமையாகச் சொன்னார் ஒரு மரணவீட்டுக்கு தான் யாழ்ப்பாணம் U S , Hotel ல் றால் கோழி இறைச்சியுடன் ஓடரில் சாப்பாடு அனுப்பியதாக. இந்த கலாச்சாரம் எப்படி வந்தது? மக்களின் சோம்பேறித்தனத்தாலா? அல்லது பணத்திமிராலா?தமிழரின் உணவுக்கலாச்சாரம் எங்கே போகிறது?...

# அன்னை திரேசா.......

(சிறுகதை)

"இஞ்ச வா பிள்ளை இந்தக் கதையைக் கொஞ்சங்கேளன்" என்று தொடங்கிய தினேஷ் அண்ணா தேம்பித்தேம்பிக் கண்களில் நீர் வெள்ளமாய்ப் பாய்ந்தோடிக் கசிய ,என்னண்ணா எதுக்கு அழுகிறீங்கள் என்று அவள் அவர் அருகில்ப் போய் இருந்து கைகளை மெல்லப் பிடித்து மார்பில்ச் சாய்ந்து நான் உங்கள் கதையைக் கேட்க எப்போதும் உங்கள் நண்பியாகத் தங்கையாக இருக்கிறன் என்று மெல்ல மௌனமாய் உதிராத வார்த்தைகளால் அவனைத் தொட்டு ஆறுதல் சொல்ல வேண்டுமென இதயம் துடிக்க உணர்வுகள் போராட எமது கலாச்சாரப் பண்பாட்டுப் போர்வை மூட வைத்த கண் வாங்காது விறைத்தே போனாள்.

ஏன் இப்பிடி அழுகிறீங்க என்று மொட்டையாகக் கேட்டுப் பதிலுக்காக காத்திருந்தாள் , இல்லை இப்பிடி ஒரு பெண் கன்னியானவள் தாயாக இத்தனை தொழுநோயாளருக்குள்ளும் இருந்து பணி செய்வது என்பது நினைக்கவே முடியல்லையே அப்படி ஒரு திரேசா இன்றில்லையே இத்தனை மக்களைப் பராமரிக்க என்ன செய்ய ! அதுதான்...

ஏன் அண்ணா இன்று சுயநலமாய்ப் பொய்யாய் ஒரு நாளைக்கு ஒரு உறவு ஒரு நட்பு அன்னையைப்போல தியாகியாகத்தான் இருக்கிறானே ! என்று உள்ளுக்குள் நினைவுகள் வந்துபோக...

ஏன் நீகூடப் பிள்ளை உன்னைப்போலப் பலபெண்கள் எத்தனை போராட்டங்கள் பிரச்சனைகள் மத்தியில் அந்த அன்னையைப்போல அன்றாடம் அடுத்தவருக்கு அற்பமாய் அந்தப் புனிதரைப்போல இல்லாவிட்டாலும் இயன்றதைச் செய்கிறாயே செய்கிறீரகளே , ஏன் அந்தப் புனிதை உன்னைக் கவர்ந்து விட்டாளோ என்று சிந்தித்தவனாய்க் கேள்விகளை மட்டும் தன்னுக்குள்க் கேட்டவனாய் , இப்போ கேட்டால் இவளும் கலங்க வைத்து விடுவேனோ என்றவனாய் பதிலுக்கு ம்..ம்..ம் என்று பதில் இல்லாமலே நகர

என்ன பெருமூச்சு ! இல்ல அன்னை திரேசாவை ஒருநாள் ஒரு விளையாட்டு வீரர் சந்திக்கச் சென்றபோது அன்னையைக் காணவில்லையாம் வருவா வருவா என்றால் எங்க ,ஒருவாறு சந்திக்க முடிந்தபோது அந்தவஇடம் அவ்வளவு , முனகல், வெக்கை, இடநெருக்கடி .அட இந்தவிடம் ஒவ்வொரு நொடியும் புண்களுக்கு மருந்து போட்டாலும் புண்கள் ஏதோ மாறாமலேதான் என்று மனங்கனத்தவனாய்! இத்தனை மத்தியில் முள்ளுக்குள்ப் பூத்த றோஜாவாய் ஒரு வெள்ளைநிறப் பூ முகமெங்கும் பற்களாக எந்தவித சோர்வோ சோகமோ வெளிப்படாத மகிழ்வான நிலா போன்ற முகம்! இது நிஜமா! என்று அவனே சற்றுநேரம் தன்னை மறந்தவனாய்! விறைத்தே போனானாம்!

ஏன் என்று கேட்டவளாய் அவளும் அதிர்ச்சி மேலிட கேட்ட எனக்கே பேரதிர்ச்சி இப்போ! என்று அவனும் பேச்சிழந்து நிற்க! இப்படியே அந்த அன்னையை நினைத்து நினைத்து வார்த்தையின்றி அவனின் கதையைக் கேட்டுப் போராடியவர்களாய்...பேந்து என்ன நடந்தது , அந்த விளையாட்டு வீரன் இந்தாங்கோ காசு என்று மகிழ்வோடு ஏற்பாள் எனக்கும் பெருமை என்று நீட்டத் திடீரெனப் புயல் அடித்தது போன்ற அச்சம் ஏன்? இது வேண்டாம் என்றாவாம் தாய், ஏன்? ஏனம்மா எதுக்கு வேண்டாம் என்கிறீர்களே என்று சொல்லே வாயில்த் தடுமாற! அப்ப என்னதான் வேணும் என்று தொடர......

எனக்குத்தேவை உமது நேரந்தான் என்று மௌனமாய் உரைக்க! இவருக்கோ புயலோட இடி மின்னல் கூடவே தாக்கியதுபோல மௌனித்தே போனானாம். அட வாழ்க்கையில் இவ்வளவு துன்பம் ,கஷ்டம் ,வேதனை அத்தோடு நோய் மத்தியில் ஒரு அரைமணிநேரம் செலவு செய்வது இறப்பதற்குச் சமமான இயலவே இயலாத காரியம் என்று திகைத்தவனாய் வெளியேறியது அவரது வாழ்வையே மாற்றியதாம் அதை எண்ணி எண்ணி இப்படி இல்லாவிட்டாலும் கொஞ்சங்கூட முடியல்லையே எனக்கு என பதைபதைத்தான் இவன்...

அன்னை திரேசாவை வர்ணிக்க வாழ்நாளே போதாது அத்தனை நல்லது செய்தாளே என்ன மனிதர் நல்லது செய்தவர்களை நினைத்து அதனைச் செய்யத் துடிக்கும் உள்ளங்கள் இன்னமும் மனிதவடிவில் வாழ்கிறார்களே பல ஆண் வடிவில் அன்னை திரேசாக்கள் என்று இவளும் புருவங்களை உயர்த்தி வியந்து நோக்கியவளாய் அப்ப வரட்டே என மௌனம் இருவருக்கும் விடைகொடுக்க....

” பிடிப்பாய் நன்றே செய்வோம் இதை இந்த நொடியே செய்வோம் ”

**- திரேஸ் மரியதாஸ் -**
**இலண்டன் சட்டன்**

.....................................................................




அன்னை தெரசா **இளமை**

**தோற்றம்... அரிய புகைப்படம்.**

# அன்னை திரேசா......

சேரிகளின் காவல்த் தூதர்-----


என்னிடம் வருபவர் தம் தாய் ,தந்தை,மனைவி,பிள்ளைகள், சகோதர, சகோதரிகள் ஆகியோரையும் ஏன் தம் உயிரையுமே என்னை விட மேலாக்க் கருதினால் அவர் என் சீடராயிருக்க முடியாது. இயேசு விடுத்த இச்சவாலை தன் 18வது வயதில் ஏற்று தன் குடும்பத்தினரையும்,தாயகத்தையும் விடுத்து துறவற வாழ்வைத் தொடர்ந்த ஓர் இளம் பெண்ணை செப்ரம்பர் 04 ஞாயிறு பெருமைபடுத்தினார்கள். தான் விரும்பித் தேர்ந்த துறவற சபையை விட்டு வெளியேறி இயேசுவின் சவாலை இன்னும் முழுமையாக நிறைவேற்ற 1950ஆம் ஆண்டு தன் 40ஆவது வயதில் மற்றொரு துறவு சபையை நிறுவி துன்புறும் மக்களுக்கு தன் முழுமையான அர்ப்பணிப்பை 47 ஆண்டுகளாக வழங்கிய அன்னை திரேசா.

செப்ரம்பர் 04 ஞாயிறு அன்று ஒரு புனிதராக உயர்த்தப்பட்டார்.இரக்கத்தின் இறைத்தூதர் சேரிகளின் காவல்தூதர் சாக்கடையின் புனிதர் என்று பல வழிகளில் புகழப்படும் அருளாளர் அன்னை திரேசா.இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் ஒரு சிகர நிழ்வாக 04 செப்ரம்பர் 2016 ஞாயிறு அன்று வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நிகழ்த்திய சிறந்த திருப்பலியில் புனிதராக அறிவிக்கப்பட்டார்.1950ஆம் ஆண்டு பிறரன்பு மறைப்பணி சகோதரிகள் சபையை உருவாக்கி இந்தியாவின் வறுமைப் பிடியில் சிக்கித் தவிக்கும் பல்லாயிரம் மக்களுக்கு தன்னால் இயன்ற அளவு விடுதலை வழங்கிய புனித அன்னை திரேசாவிற்காக இறைவனுக்கு நன்றி சொல்வோம்.அவருக்காக மன்றாடுவோம்...

- ஜெயா நடேசன் -

## 16ம் பக்க கணக்குப்புதிர் விடை...

| | | | | |
|---|---|---|---|---|
| 68 | 55 | 62 | 49 | 56 |
| 51 | 63 | 50 | 57 | 69 |
| 64 | 46 | 58 | 70 | 52 |
| 47 | 59 | 66 | 53 | 65 |
| 60 | 67 | 54 | 61 | 48 |



## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| ப | ந் | து | ஐ |
| ற் | நூ | தி | ப் |
| ப | ல் | க | ப |
| சை | ச் | ப | சி |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ | தை | ப | ந் | து | த் | வி |
| ண் | ப | ட் | டி | லி | ரி | ண் |
| ணா | ண் | அ | ண் | ல் | லு | ண |
| வி | க | ட | க | வி | ல் | க |
| ர | டு | ம் | ட | ட் | க | ம் |
| த | ஆ | த | க | ட | த் | ப |
| ம் | ர | வா | ம் | ம் | தி | ர் |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 9 | 5 | 1 | 4 | 6 | 8 | 7 |
| 5 | 1 | 7 | 8 | 9 | 6 | 4 | 2 | 3 |
| 8 | 6 | 4 | 3 | 7 | 2 | 9 | 5 | 1 |
| 9 | 5 | 8 | 7 | 4 | 1 | 3 | 6 | 2 |
| 6 | 4 | 3 | 9 | 2 | 8 | 7 | 1 | 5 |
| 2 | 7 | 1 | 6 | 3 | 5 | 8 | 4 | 9 |
| 1 | 9 | 2 | 4 | 6 | 3 | 5 | 7 | 8 |
| 4 | 3 | 5 | 2 | 8 | 7 | 1 | 9 | 6 |
| 7 | 8 | 6 | 1 | 5 | 9 | 2 | 3 | 4 |

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்கிறன்..கோதாரிப்போன கொரோனா ஒழிந்து விட்டது என்று நம்பப்பட்டாலும் ஆங்காங்கே சில நாடுகளில் கோரோனாவைப் போல வேறு..வேறு வருத்தங்கள் வந்துகொண்டுதான் இருக்கிறது. அப்ப நீங்களும் கொஞ்சம் அவதானமாக இருங்கோ..இல்லை என்றால் மண்டையைப் போட வேண்டியது தான்.

நம்மட நாட்டில பொருளாதாரப் பிரச்சனையால் பெரும் நெருக்கடி. இதனால் நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாடுகளுக்கு எப்ப ஓடலாம் என்று பல்லாயிரக் கணக்கானோர் படாத பாடுபடுகுதுகள் பாருங்கோ.. அது அப்படி இருக்கையில் தேர்தல் சூடுபிடித்து அரசியல் குழப்பங்கள் முட்டி மோதி எங்கும் எப்போதும் பிரச்சனை..பிரச்சனை என்றே மக்கள் படும்பாடு அல்லோல கல்லோலம்தான். பாராளுமன்றக் கதிரைகளையும் உள்ளூராட்சி மன்றக் கதிரை களையும் பிடித்து சொகுசுவாழ்வு வாழ எத்தனைப்பேர் வாக்களார்களைவிட வேட்பாளர்கள் கூடப்பேர்கண்டியளோ அந்தளவுக்கு கதிரைச் சண்டை முற்றிவிட்டது. யாராவது நாட்டின் பொருளா தாரத்துக்கு நல்ல தீர்வை வைப்பார்கள் என்றால் இது கிடையாது பாருங்கோவன்.

நம்மட அரசியல் வாதிகளும் நாளுக்குநாள் பல பிரச்சனைகளைக் கிழப்பிக் குளிர்காயும் படலம் தொடர்கதைதான் பாருங்கோ..நாடு எக்கேடு கெட்டாலும் பறவாயில்லை நாங்கள் எங்கட பணம் பண்ணும் வேலையில்தான் குறிக்கோளாக இருப்பம் என்ற போக்குத்தான் நம்மில் அதிகம் பேருக்கு கண்டியளே..

சரி..சரி..இப்படியே அடுக்கிக்கொண்டு போகலாம்.. இப்ப வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் வெய்யிலைக் கணடால் ஊருக்குச் சென்று ஒரு ரவுண்ட் அடிக்கலாம் என்று வெளிக்கிட்டுவிடுவினம். அப்படி அல்ல பலர் நாட்டுக்குப் படை எடுத்துவிட்டார்கள். கோடை விடுமுறையல்லவா.. இந்தக் குளிர் நாடுகளில் கிடந்து பட்ட துன்பங்கள் போக்க நமது நாடு நல்லதுதானே. சொர்க்கம் என்றாலும் நம்நாடுபோல வருமா என்ற இளயராஜாவின் சினிமாப் பாடல்தான் ஞாபகம் வருதே...ஞாபகம் வருதே!..இந்த மயிலனுக்கு...

ஊருக்குப்போய் சுற்றலா போகலாம், தண்ணியடித்துப் பொழுதைப் போக்கலாம், ஆடு மாடு வெட்டிப் பாட்டி கொண்டாடலாம் விதம் விதமான உடைகள் போடலாம். கட்டிய ஆடம்பர வீட்டுக்குக் குடி புகுதல் செய்யலாம் பிள்ளைகளின்

பிறந்தநாள், சாமத்தியவீடு, கலியாணவீடு, 50, 60, 70 பிறந்தநாள் கலியாண நாள் கொண்டாடலாம். கோயில்களில் திருவிழா கொண்டாட்டம் எனக் களைகட்டிவிட, தமது போலிக் கௌரவத்தையும், பணத்திமிரையும், ஆடம்பர செலவுகளையும் செய்து பந்தா காட்டலாம் என்று பல கூட்டம் தமிழ்ப்பிரதேசங்களில் இப்போ காணக்கூடியதாகவே உள்ளன. இந்த மயிலனின் காதுகளிலும் கண்களிலும் செய்திகள் கிடைத்துக்கொண்டெ இருக்குது பாருங்கோ...

சரி...பணத்தைக் கொண்டுபோய் கொட்டிச் செல வழியுங்கோ ராசாக்கள் ராசாத்திகள்... ஆனால் பந்தா காட்டாதையுங்கோ.. நீங்கள் வெளிநாடுகளில் எப்படி உழைக்கிறீர்கள் என்று இந்த மயிலனுக்கு நல்லாகவே தெரியும் பாருங்கோ. உழைத்த காசை வீண் ஆடம்பரத்தில் செலவு பண்ணி உங்கள் திமிரைக் காட்டாமல் நல்லதுக்குச் செலவழியுங்கோ.

இப்ப இலங்கையில்தமிழர் வாழும் சில ஊர்களில் ஆடம் பரங்களோ அமெரிக்கா ரேஞ்சுக்கு உயர்ந்துவிட்டது. சாமத்தியப் பெண், அல்லது கலியாண மாப்பிள்ளை பெண் ஹெலிகெப்டர்களில் ஏத்தி இறக்குவதும், யானை, குதிரை வண்டிகளில் ஏத்தி ஊர்வலம் வருவதும், 10 - 15 ஆடம்பரகோடிக் கணக்கான கார்களில் ஊர்வலம் வருவதும் இப்ப பாஷனாய் போய்விட்டதாம்.

ஏன் வெளிநாடுகளிலும் நம் டமிழர்கள் (தமிழர்கள்) பாகுபலி ரேஞ்சிலும், ஹொலீவூட் ரேஞ்சிலும் இந்த விழாக்கள் தடல் புடலாக நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

வசதி படைத்த தமிழர்கள் வெளி நாடுகளிலும் உள்நாட்டிலும் செய்யும் அட்டகாசங்கள் கூத்துக்களுக்குப் பஞ்சமே இல்லை. அதாவது அரசர்கள், கோடீஸ்வரர்கள், சினிமாநட்சத் திரங்கள் வீட்டுக் களியாட்டங்கள் போல நம்மட ஆட்களும் செய்து கோடான கோடி பணத்தை(காசை) கரியாக்கும் நிகழ்வு அன்றாட பொழுது போக்காக மாறிவிட்டது. சந்தனம் மெத்தினால் .........இதில் தடவு என்ற கதையாகிப்போச்சுது பாருங்கோ..

இந்த மயிலன் என்னத்தைக் கத்தினாலும் என்னத்தை எழுதினாலும் நம்மட சனங்கள் யோசிக்கப் போவதும் இல்லை. அல்லது நல்லதை செய்யப் போவதுமில்லைஎன்பது மயிலனுக்கு நல்லாய் தெரியும். இருந்தாலும் கண்டதை, கேள்விப் பட்டதை, படித்ததை உங்களோடு பகிர்ந்து கொள்ளாவிட்டால் இந்த மயிலனுக்கு நித்திரை வராது பாருங்கோ.. அதற்காகத்தான் அதாவது ஒரு ஆறுதல்ஒரு சனமாவது யோசித்துத் திருந்தினால் நல்லது என்று பட்டதைத்தான் சொல்லுகின்றேன்.

ஊரிலேயும் நாட்டிலும் இன்று எத்தனை துன்பங்கள். சாப்பாட்டுக்கு வழியில்லாமல் பட்டினி கிடக்கிறார்கள். அடுத்த வேளை கஞ்சிக்குப் பல குடும்பங்கள் தவியாய்த் தவிக்கிறார்கள். ஏன் ஒரு பவுண் இல்லாமல் திருமண வயதைத் தாண்டி முதிர்கன்னிகள் எத்தனை ஆயிரம். போரால் கணவன்மாரை இழந்த விதவைப் பெண்கள் எத்தனை ஆயிரம் பேர்

அன்றாடம் கூலிவேலை செய்து பிழைத்து வாழும் எத்தனை குடும்பங்கள். கல்வியைத் தொடரமுடியாமல் பாடசாலையை இடைநடுவே விட்டுவிலகும் மாணவர்கள் எத்தனைபேர். இதைவிட வெளிநாட்டு மோகத்தால் கள்ள ஏஜன்சிமாருக்குக் கோடிக்கணக்கான தம் உழைப்பைப் பறிகொடுத்து ஏமாந்து அலையும் இளம் பிள்ளைகள் எத்தனைபேர். வெளிநாடுகளுக்கு வந்து இடைநடுவே தத்தளிக்கும் தமிழர்கள் எத்தனைபேர். வெளிநாடுகளுக்கு உழைக்கச் சென்று நம்நாட்டுப் பெண்கள் சவுதி போன்ற நாடுகளில் சித்திரவதைகளை அனுபவித்து நாடு திரும்பமுடியாமல் தற்கொலை செய்வோர் எத்தனைபேர். இப்படித் துன்பங்களை அடுக்கிக்கொண்டு போவான் இந்த மயிலன்.

இவை அனைத்தும் நடந்துகொண்டிருந்தாலும். நம் தாய் நாட்டில் பெரும் அட்டகாசங்கள் பெருவிட்டன. போதைப் பாவனை பாடசாலை மாணவர் முதல்கொண்டு பெண்கள்வரை பரவிவிட்டது. போதை வியாபாரிகள், அடி தடி மாபியாக்கள், வாள்வெட்டுக் குழுக்கள் என இவர்களின் அட்டகாசங்களைத் தாங்முடியாமல் மக்கள் திண்டாடுகிறார்கள். பொலிசும் பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்துவந்தாலும் ஒன்றையும் செய்யமுடிவதில்லை. இதனால் குற்றச் செயல்கள் புரிவோர் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செய்வதால் நம் நாட்டு அவலங்கள் எங்குபோய் முடியப்போகிறது என்று தெரியாமல் மக்கள் தினம் தினம் செத்துக்கொண்டே உயிர்வாழ்கிறார்கள்.

நம் நாட்டில் இடம்பெற்றுவரும் இந்த சமூகச் சீரழிவுகள், போதை வஸ்த்துப் பாவனை, அடி தடி போன்ற வன்முறைச் சமூகத்தை வளர்த்துவிட்ட பெரும் பங்கு புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழர்கள்தான் முக்கிய காரணம் என இந்த மயிலன் நம்புகிறான். அதவாது அளவுக்குமீறிய பணத்தை அனுப்புவது, கேட்டது எல்லாவற்றிற்கும் அள்ளிக் கொடுப்பது, குடிபோதைகளைப் பழக்கியது, போதைவஸ்த்துப் பாவனைக்கு வழிவகுத்தது. கொடுத்த பணத்திற்கு உரிய வரவு செலவு கேட்காதது, எப்படிச் செலவு செய்யப்படுகின்றது என்று தெரிய விரும்பாதது. ஆடம்பர வாழ்வுக்கு வழிவகுத்தது. காணி வீடு ஆடம்பரமாக வேண்டுவதும் கட்டுவதும், கோடிக்கணக்காக சீதனம் வேண்டுவது, பண ஆசையை தூண்டி அவர்களின் இயல்பு வாழ்வைக் கெடுத்தது போன்ற காரணிகளைக்கூறுவான் இந்த மயிலன்.

புலம்பெயர் ராசாக்கள் ராசாத்திகளே.. கொஞ்சம் சிந்தியுங்கோ. நீங்கள் தேவையில்லாமல் கொடுக்கும் ஒவ்வொரு டொலரும் பவுணும் யூரோவும் எவ்வளவு கெடுதல்கள் விளைவிக்கின்றது என்று சிந்தியுங்கோ. கோவில்களுக்கும் ஆடம்பரத்துக்கும் அள்ளிக் கொடுக்காமல் வறியமக்களின் துயரைத் துடையுங்கோ.நான், பணம், வீடு, ஆடம்பரம் எனச் சிந்திக்காமல் நாலு பேர் உழைத்துப் பசியாற ஏதாவது தொழில் முயற்சியைச் செய்யுங்கோ அல்லது நாலு குழந்தைகள் படிக்கவாவது ஏதாவது உதவுங்கோ. இதுதான் புண்ணியம். அப்ப வாறன் அடுத்தமுறை ஏதாவது ஒரு விடையத்தோடு இந்த மயிலன் வருவான்..எல்லாரும் சுகமாய் இருந்தால் மயிலனுக்குச்சந்தோஷமே!.

## பணம்!...காசு!...ரொக்கம்!..துட்டு!..மணி!...மணி!...

- பணம் உன் பிள்ளைகளுக்கோ உறவுகளுக்கோ நீ விட்டுச் செல்லும் பாதுகாப்பு அல்ல.
- பணம் உள்ளவரை உன்னைச் சுற்றிச் சனங்கள் மொய்க்கும் நீ இறந்துபோனால் உன்னைச் சுற்றி ஈக்கள் மொய்க்கும்.
- நிரந்தரமில்லாப் பூமியில் பணம் நிரந்தரம் என்று ஒருபோதும் எண்ணாதே.
- இருப்பது சில நாட்கள்தான் சேர்ப்பது எதுவுமில்லை. சேர்த்தாலும் பின் தொடர்ந்து பணம் வராது என்பதைப் புரிந்துகொள்.
- பணம் இருக்கும்போது உண்ண வரும் உறவுகள் யாரும் பணம் இல்லாத போது சொந்தம் பந்தம் இல்லை என்றே கூறுவார்கள்.

**ஆகையால்...**

- மனிதர்களையும் மனிதநேயத்தையும் சேர்த்துக் கொள்.
- வாழும்போது புரியாது போகையில் புரிந்து கொள்வாய். உன் நிலை என்னவென்று.
- தர்மம் செய்துகொண்டே இரு... பலனைத் தேடாதே.
- அதுதான் உன் வாரிசுகளுக்கு நீ விட்டுச் செல்லும் பாதுகாப்பு.

........................................................................................................................................

## கல்வி பற்றியது...

- கண்டுபிடிப்பாளர்கள் சாதாரண மனிதர்களே. அவர்கள் அதிகம் கவலை கொள்ளாததற்குக் காரணம் அவர்கள் கற்ற நல்ல கல்வியே..
- மனிதனுடைய முழுத்திறமைகளின் வெளிப்பாடே உண்மையான கல்விதான்.
- ஒரு மூடை நூல்களை வாசிப்பதல்ல கல்வி. அடக்கம், ஒழுக்கம், அறம், நீதி இவற்றின் முன்மாதிரியே கல்வி.
- உடல், உளம், ஆன்மா ஆகிய மூன்றையும் ஒருமித்து வளர்க்க வேண்டியதே நல்ல கல்வியாகும்.
- அறிவை மேலும்..மேலும் கூர்மையாக்கிக்கொள்ள பயன்படும் கருவிதான் கல்வியாகும்.

# இப்படியும் ஒரு மனிதனா!..

- கெங்கா ஸ்ரான்லி-

மிதிலா ரயிலில் ஒரு யன்னல் கரை ஓரத்தில் இருந்து கொண்டு இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டிருந்தாள். அவள் போக வேண்டிய இடமோ பேர்லின் நகரம். இயற்கையோ ஒரே மப்பாக இருந்தது ஆனாலும் எல்லாம் பச்சையமாகச் செழிப்பாக இருந்தன. வாடி வதங்கி இல்லை. அதில் பகிடி என்னவென்றால் ஒரு தரிப்பில் நிற்க வேண்டிய ரயில் நிற்காமல் வேகமாக அடுத்த நிலையத்தில் தான் நின்றது, அதனால் இறங்கி அடுத்த ரயிலில் திரும்பிப் போகவும் என் அறிவிப்பு செய்யப்பட்டது. அப்போது மிதிலாவின் அருகில் இருக்கையில் ஒரு இளைஞன் வந்ததமர்ந்தான்.

மிதிலா இயற்கையை ரசித்து முடிந்து ஏதோ எழுதினாள் அதைப்பக்கத்தில் இருந்த இளைஞன் நீங்கள் தமிழா என்று கேட்டான் அதற்கு அவள் ஆம் என்றாள். என்ன எழுதுகிறீர்கள் , நீங்கள் எழுத்தாளரா எனவும் அவள் இல்லை சும்மா கிறுக்கல் தான் மனதில் தோன்றுவதை ஏதோ எழுதுவேன் என புன்னகைத்தாள்.

பின் குசலம் விசாரிப்பு.அவன் சோகக்கதையை கூறினான்,அதைக் கேட்ட மிதிலா வியப்பில் விழி பிதுங்க விழியில் நீர்த்திவலைகள் உருள , இப்படியும் ஒருமனிதனா மனைவி இறந்து ஒரு வருட மாகாமலே இரண்டாம் திருமணம் செய்யும் இக்காலத்தில்.மனைவியை நினைத்து வாழும் ஜீவன் இவன்.

சரி வாருங்கள் அவன் கதையைக் கேட்கலாம் அந்த இளைஞன் பெயர் சங்கர் ஈழத்தில் பிறந்து வளர்ந்து புலம்பெயர்ந்து இங்கு வாழும் ஒரு தமிழன். ஒரு தமிழ்ப் பெண்ணையே திருமணம் செய்து சந்தோசமாக வாழ்ந்தார்கள், இவர்களுக்கு குழந்தை இல்லை இருந்தும் ஒருவரை ஒருவர் அன்பாக நேசித்தனர். இருவருக்குள்ளும் நல்ல புரிந்துணர்வு இருந்ததினால் குடும்பத்தில் சண்டை சச்சரவு ஒன்றுமில்லை. சந்தோசமாகப் போய்க் கொண்டிருந்தது.

கொஞ்ச காலம்தான் மணவாழ்க்கை மணந்தது . திடீரென மனைவிக்கு வருத்தம் வந்து விட்டது. இந்நிலையில் சங்கர் வேலையை விட்டு விட்டு மனைவியை பராமரித்தான், அதுவும் ஒரு குழந்தையைப் பார்ப்பது போல கழுவித் துடைத்து உணவு ஊட்டி விட்டு சகலமும் அவனே செய்தான். சீறிச் சினக்காது அன்பாகப் பார்த்தான். இப்படி இருக்கையில் மனைவி இறந்து விட்டாள். சங்கர் இடிந்து போய் விட்டான். இருந்தும் தனது மனைவிக்கு செய்ய வேண்டிய ஈமக்கிரியை எல்லாம் செய்து அவளை வழியனுப்பி வைத்தான்.

இப்படி நாடகள் செல்ல சங்கர் வீட்டில் அம்மா அவனை மறுமணம் செய்யச் சொன்னா ஆனால் அவன் மறுத்து விட்டான். குழந்தைகள் இருந்திருந்தால் அவர்களைப் பராமரிக்க வேறு திருமணம் செய்திருக்கலாம், அதுவும் இல்லை என்பதாலோ செய்யவில்லை.

இப்படியே தனிமையில் வாழக் கற்றுக் கொண்டான். மறக்க முடியாமல் எவ்வளவு தத்தளிப்பு பிறகு தானே முயற்சி செய்து மீளப் பழகிக் கொண்டான். சமையல் செய்யும்போது கோழி வெட்டினால் மனைவியின் ஞாபகம் வரும் அப்போ அழுகையாக வரும் உடனே கோழியை குப்பையில் எறிந்து விடுவான் . அதன் பின் மாமிசம் சாப்பிடுவதைக் குறைத்துக் கொண்டான். மனமோ சரியில்லை நித்திரையும் சரியாக இல்லை என்று வைத்தியரிடம் சென்ற போது அவர் இரவு வேலையை செய்தால் பகலில் நித்திரை கொள்ளலாம் என்றார் அதன்படியே இன்றும் இரவு வேலை செய்கிறார்.

இப்போ தேறிவிட்டார் 15 வருடங்கள் ஆகின்றன..இன்னும் தன் மனைவியை நெஞ்சில் சுமந்து கொண்டிருக்கின்றார். இவர் மற்றவர்களுக்கு உதவி செய்வது அவர்களை வாகனத்தில் ஏற்றி இறக்குவது இப்படி பலப்பல உதவிகள் செய்வது.யாராவது வீட்டிற்கு அழைத்தால் போவது இல்லையாம் காரணம் தான் தனிமனிதன் தான் போய் அக்குடும்பத்தில் ஏதாவது பிரச்சனை வரக்கூடாது என்ற நல்லெண்ணமே.அதனால் தவிர்த்து கொள்வாராம்.

சில குடும்பங்களுக்கு இவர் தான் உதவ வேண்டும் என்று சொல்வார்களாம் ஏனெனில் இவர் செய்தால் வெற்றியாக முடியுமாம் அதனால். ஒரு குடும்பம் இங்கிருந்து லண்டன் போனார்களாம், அந்த குடும்பத் தலைவிக்கு ஏதோ வருத்தமாம் சிகிச்சை பெற இங்கு வந்து வைத்தியம் செய்வதற்கு கேட்ட பொழுது மறுக்கப்பட்டதாம், பின் இவர் கதைத்து ஓகே பண்ணி அவர் சிகிச்சை பெற்றாராம்.

இத்தனைக்கும் இவர்களுக்கு முதலில் மொழி பெயர்ப்பு செய்து கதைத்தவர் இங்கு பிறந்து வளர்ந்த மொழி சரளமாகப் பேசும் பிள்ளை அவராலேயே செய்ய முடியவில்லை ஆனால் இவரால் முடிந்ததே என எல்லோரும் ஆச்சரியப் பட்டார்களாம். அப்போ கேட்டார்களாம் எப்படி இது சாத்தியமாச்சு. என்று அதற்கு அவர் சொன்னாராம் , நான் அடிக்கடி போய்க்கதைப்பதால் என்னில் ஒரு நம்பிக்கை அதனால் நான் கேட்டால் நியாயம் இருக்குமென்றுதந்திருக்கலாம்.

இவர் மற்றவர் வீட்டிற்கு போகாவிட்டாலும் அவர்கள் இவருக்கு உணவு செய்து கொண்டு வந்து கொடுப்பார்களாம். சமூகத்திடமும் மரியாதை உண்டு அதனால் பழிசொல் கேட்காது மரியாதையுடன் வாழ்ந்து வருகிறார். இப்படி மனிதமுள்ளவரை உயிருடன் இருக்கும் போது வாழ்த்த வேண்டும். அப்படித்தானே!

இதை எழுத வேண்டும் போல் இருந்தது நாலு பேர் தெரிந்திருப்பது நல்ல மனிதர்களும் உண்டு என்பதற்குச் சாட்சியாக!

# உணவே மருந்து...



வெந்தயக்கீரை, வெந்தயம் இரண்டுமே அதிகப்படியான நற்பலன்கள்கொண்டவை. வீட்டில் சிறிய தொட்டியில்கூட இந்தக் கீரையை வளர்க்கலாம். மூல நோய் தீர்க்கும் மூலிகையாகவும் உணவாகவும் சிறப்பாகச் செயல்படக்கூடியது. தற்போது, சர்வதேச அளவில் வெந்தயக் கீரை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

தாவரவியல் வல்லுநர்களால் மிகப் பழமையான மருத்துவ தாவரங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது வெந்தயக் கீரை. வெந்தயக் கீரை நோய் தடுப்பு மற்றும் ஆரோக்கியத்தை ஊக்குவிக்கிறது. ஆயுர்வேதத்திலும் பாரம்பரிய சீன மருத்துவத்திலும் இது குறித்த மேற்கோள்கள் உள்ளன. வெந்தயக்கீரையைச் சமைத்துச் சாப்பிட்டுவந்தால், மலம் இளகும். வெயில் காலத்தில் பலருக்கும் உடல் சூடு ஏற்படும். உஷ்ணத்தை தணித்து, உடலை குளிர்ச்சியடையச் செய்யும்.

வயிற்றுப் பிரச்சனைகள், உப்புசம், மந்தத்தன்மை, வாயுத்தொல்லை, இருமல், சுவையின்மை பிரச்னைகளைச் சரிசெய்யும். தயமின்கள், ஃபோலிக் அமிலம், ரிபோஃப்ளேவின், நியாசின், வைட்டமின் ஏ, பி கே மற்றும் சி போன்ற வைட்டமின்கள், செம்பு, பொட்டாசியம், கால்சியம், இரும்பு, செலினியம், துத்தநாகம், மாங்கனீஸ் போன்ற பல தாதுப்பொருட்கள் நிறைந்த அமுதமாக வெந்தயக்கீரை இருக்கிறது.

உடல் உறுப்புகளில் ஏற்படும் உள்வீக்கம், வெளிவீக்கத்தைப் போக்கும். வெந்தயக்கீரையை அரைத்துக் வீக்கத்தின் மீது தடவினால், விரைந்து குணமாகும். தீப்புண்கள் மீது வைத்துக்கட்ட, காயம் ஆறும். வெந்தயக்கீரையை வேகவைத்துத் தேன் விட்டுக் கலந்து, அளவாகச் சாப்பிட்டுவந்தால், மலம் எளிதாக வெளியேறும்.

நெஞ்சு வலி, இருமல், மூலம் மற்றும் செரிமானப் பாதையில் இருக்கும் புண்கள் குணமாகும். வெந்தயக்கீரையுடன் சீமை அத்திபழத்தைச் சேர்த்து அரைத்து, கட்டிகளின் மீது பற்றுப் போட, கட்டிகள் விரைவில் பழுத்து உடையும். படை மீது பூசினால், விரைவில் சரியாகும்.

இந்தக் கீரையுடன், பாதாம் பருப்பு, கசகசா, கோதுமை நெய், பசு நெய், பால், சர்க்கரை சேர்த்து, களிபோல கிண்டி சாப்பிட்டுவந்தால், உடல் வலுவடையும். இடுப்பு வலி நீங்கும் வைட்டமின்கள், கால்சியம், இரும்புச்சத்து நிறைந்தது.

சர்க்கரை நோயாளிகள் இந்தக் கீரையை அடிக்கடி சமைத்துச் சாப்பிடுவது நல்லது. நீண்ட நேரம் அமர்ந்திருந்து வேலை செய்ய முடியாமல் இடுப்பு வலிப்பவர்கள் வெந்தயக் கீரையுடன் நாட்டுக்கோழி முட்டை, தேங்காய்ப்பால் சேர்த்து நெய்யில் வேக வைத்து உணவுடன் சேர்த்து சாப்பிட்டு வர, இடுப்பு வலி நீங்கும்.இப்படி பல்வேறு இயற்கை மருத்துவ நோய் நிவாரணியாக வெந்தயக் கீரை தொழிற்படுகிறது.



# மாதுளையின் நன்மைகள்

இதயம் முதல் நீரிழிவு வரை மாதுளைத்தோலின் மகத்தான நன்மைகள்!நாம் நிறைய மாதுளை பழங்களை நிலைய சப்பிட்டிருப்போம். ஆனால் அதன் தோலை குப்பையில் போட்டுவிடுவோம். அப்படி நாம் தூ க்கி வீசிய மாதுளை தோலில் உள்ள நன்மைகளை தெரிந்து கொண்டால் மீண்டும் இந்த தவறை செய்யமாட்டோம்..

மாதுளை தோலின் நன்மைகள்...

மாதுளை தோல் காய வைத்து பொடியாக்கி அதனுடன் பயத்தம் பருப்பை கலந்து சாப்பிட்டால் மாதவிடாய் கோளாறு ,மூல நோய் ,வியர்வை துர் நாற்றம் ,வயிறு பிரச்சினைகள் குணமாகும் .அதுமட்டுமல்லாது. தோலின் பொடியை முகத்தில் பூசிக்கொண்டால் முகப்பரு குணமாகும் .மேலும் இதன் தோலை நம் உடலின் பூசினால் சரும 
பிரச்சினைகள் தீரும் .

தொண்டை வலி ,இதய நோய் ,பல் வலி ,ஈறுகள் வலி போன்ற உபாதைகளையும் இந்த மாதுளை தோல் குணமாக்கும்.இருமலால் தொந்தரவு பாதிக்கப்பட்டிருந்தால், மாதுளை தோலின் சாறு அல்லது பொடியை சாப்பிட்டு வர அது குணமாகும் .நீரிழிவு மற்றும் இதய நோய் போன்ற நீண்டகால நோய்களை இந்த மாதுளை தோல்கள் குணமாக்கும் ஆற்றல் கொண்டது என்றும் சொல்லபப்டுகின்றது.

.................................................................................................................................

## உலகில் எந்த மருந்தகங்களிலும் கிடைக்காத அதி அற்புதமான மருந்துகள்...

1. உடற்பயிற்சி என்பதும் 2. விரதம் இருப்பதும் 3. இயற்கை உணவு உண்பதும் 4. சிரிப்பு என்பதும் 5. நல்ல தூக்கம் என்பதும்

6. பச்சைக் காய்கறிகள் உண்ணுவதும் 7. சூரிய ஒளியும் ஒரு மருந்தும்

8. ஒருவரிடம் அன்பாய் இருப்பதும் 9. நன்றி உணர்வோடு இருப்பதும்

10. தவறை மன்னிப்பதும் 11. தியானம் என்பதும்

12. இறைவனை நினைப்பதும் துதிப்பதும் 13. நல்ல நண்பர்களுடன் இருப்பதும் 14. மனதிற்கு பிடித்தமான பாடல் பாடுவதும் கேட்பதும் மற்றும் இசைக்கு நடனம்ஆடுவதும் 15. சரியாகச் சிந்திப்பதும் சரியான மனநிலையில் இருப்பதும். இவை அனைத்தும் சிறந்த மருத்துவம் இந்த மருத்துவங்களை போதுமான அளவு நாம் எடுத்துக்கொண்டால் மருந்தகங்களில் உள்ள மருந்துகள் நமக்குத் தேவைப்படாது...



# தினம் ஒரு அப்பிள்

ஆப்பிள் சாப்பிடுபவர்களுக்கு இந்த பிரச்சனைகள் கிட்டவே நெருங்காதாம்!

- ஆப்பிள் உடலுக்கு பல வரப்பிரசாதங்களை வழங்கின்றது. ஆனால் இன்றைய சூழலில் பெரும் பாலானவர்கள் ஆப்பிள் சாப்பிடுவதில்லை. சிலருக்கு ஆப்பிள் சாப்பிடவே பிடிக்காது என கூறுபவர்களும் இருக்கின்றனர். ஆனால் குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை ஆப்பிள் சாப்பிடுவதனால் பல நன்மைகளை பெறலாம்.
- ஆப்பிள் சாப்பிடுபவர்களுக்கு இந்த பிரச்சனைகள் கிட்டவே நெருங்காதாம்! Lifestyle Cholesterol Control Apple Health
- ஆப்பிள் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் ஆப்பிள்கள் புற்றுநோய், நீரிழிவு மற்றும் இதய நோய் அபாயத்தைக் குறைக்கும்.
- ஆப்பிள்கள் மூளை ஆரோக்கியத்தையும் எடை இழப்பையும் மேம்படுத்த உதவும்.
- ஆப்பிளில் பெக்டின் என்றும் கரையக்கூடிய நார்ச்சத்து அதிகம் உள்ளதால் உடலில் உள்ள கெட்ட கொலஸ்ட்ராலானது கரைந்துவிடும்.
- ஆப்பிளில் ஊட்டச்சத்துக்கள் அதிகம் உள்ளதால் இதய நோய் ஆபத்து குறைவாக உள்ளது.
- ஆப்பிள்களை சாப்பிடுவது (Level) மட்டம் 2 நீரிழிவு நோய் அபாயத்தைக் குறைக்கிறது.
- ஆப்பிளில் உள்ள ஆக்ஸிஜனேற்றிகள் நுரையீரல், மார்பக மற்றும் செரிமான பாதை புற்றுநோய்களை எதிர்த்து போராடுகின்றன.
- ஆப்பிள்கள் ஆக்ஸிஜனேற்ற அழுத்தத்தால் மூளையில் ஏற்படும் சேதத்திலிருந்து பாதுகாக்கின்றன.
- ஆப்பிளை சாப்பிட்டால், அதில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட்டால், கண்புரை நோய் ஏற்படுவதைத் தடுக்கலாம்.



# விளையாட்டுவீரன் எதிர்வீரசிங்கம் காலமானார்...18.04.2024

சரித்திரம் படைத்த சாதனைத் தமிழன்...
89 வது வயதில் அமெரிக்காவில் காலமானார்....

இலங்கை நாட்டிற்கு முதலாவது தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்தவரும் விளையாட்டுத்துறையில் தமிழர்களுக்குப் பெருமைசேர்த்த சாதனைவீரன் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் அவர்கள் தனது 89 வது வயதில் அமெரிக்காவில் இயற்கை எய்தினார். 1934ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ம் திகதி யாழ் - பெரியவிளான் - இளவாலையில் பிறந்த இவர் யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவராவர்.

தனது 18வது வயதில் 1952 சுவீடனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் உயரம்பாய்தலில் பங்குகொண்டார். 1956ம் ஆண்டு அவுஸ்திரேலியா 1962 இந்தோனிஷியா போட்டிகளில் பங்குகொண்டு 29ம், 21ம் இடங்களைப் பிடித்திருக்கிறார். அனைத்துலக மெய்வல்லுனர் போட்டி ஒன்றில் உயரம்பாய்தல் போட்டியில் வெற்றிபெற்று இலங்கைக்கு முதலாவது தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொடுத்த பெருமைக்குரியவர்.

1958ம் ஆண்டு யப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஆசிய சாதனையை நிலைநாட்டி தங்கப் பதக்கத்தை வெற்றிருக்கிறார். இலங்கை சார்பில் தமிழனாக ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றிய முதலாவது வீரர் இவரே. இவருக்குப் பின் இற்றைவரை எந்தவொரு தமிழ் வீரரும் இலங்கை சார்பில் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் எதுவும் பெறவில்லை.

கிரிக்கட் விளையாட்டிலும் அக்காலத்தில் வல்லவராக இருந்திருக்கிறார். பின்னர் பல பல்கலைக் கழகங்களில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விரிவுரையாளராகவும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராகவும் பணியாற்றி இருக்கிறார். அதன் பின்பு யூனஸ்கோ என்றளைக்கப்படும் (ருநேுளுஊழு) ஐக்கியநாடுகள் சபையில் சிராலியோன், கம்பியா, நைஜீரியா, பபுநியூனியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் கடமையாற்றியிருக்கிறார். கல்வியில் உயர்ந்து விளையாட்டிலும் சாதனை படைத்து தமிழினத்துக்குப் பெருமை சேர்த்த அமரர் எதிர்வீரசிங்கம் அவர்களின் பணியை வாழ்த்துவதுடன் அன்னாருக்கு எமது அஞ்சலிகள்!... ஆசிரியர் - மண் சஞ்சிகை





French Open - 2024 - Tennis Championships

**ரெனிஸ் - பிரான்ஸ் பகிரங்கப் போட்டி - 2024**

ஸ்பெயின் நாட்டு இளம் நட்சத்திர வீரர்கள் வெற்றிவாகை!..
21 வயதில் வெற்றிக் கிண்ணத்தைப்பெற்ற கார்லோஸ் அல்கராஸ்!..
உலகின் பிரபலமான விளையாட்டும் அதிக பணப்பரிசு நிறைந்ததுமான பிரான்ஸ் பகிரங்க ரெனிஸ் போட்டி 26.05.2024 தொடங்கி 09.06.2024 அன்று முடிவடைந்தது. ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் ஸ்பெயின் நாட்டு வீரர் உலக தரவரிசையில் 3வது இடத்தில் இருந்த (Carlo Alcaraz) கார்லோஸ் அல்கராசும் (வயது-21) உலக தரவரிசையில் 4வது இடத்திலிருந்த யோர்மனி நாட்டு வீரர் (Alexander Zverer) அலெஸ்சாண்டர் ஸ்வேரர் (வயது-27) கடுமையாக மோதிக் கொண்டதில் ஸ்பெயின் நாட்டு வீரர் 6-2, 2-6, 5-7, 6-1, 6-2என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றார். Australian Open, French Open, London Wimbledon, US Open இந்த நான்கு ரெனிஸ் போட்டிகளும்தான் வெற்றி பெறுபவர்களுக்கு உலகில் அதிகூடிய பணப்பரிசும் அதிகூடிய புள்ளிகளும் வழங்கப்படுவதாகும். வெற்றிக்கிண்ணத்தைப் பெற்ற ஸ்பெயின் நாட்டு வீரர் (24 லட்சம் யூரோ) பணத்தையும் 2.000 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டார். இறுதிப் போட்டியில் தோல்வியடைந்தவருக்கு 12லட்சத்து 20 ஆயிரம் யூரோவும் 1.300 புள்ளிகளும் கிடைத்தன.

**பெண்கள்:-**

பெண்கள் பிரிவில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் உலகின் 1வது இடத்திலிருக்கும் போலந்து நாட்டு வீராங்கனை (Iga Swiatek) இகா சுவெற்றெக்கும் (23வயது) உலக தரவரிசையில் 12 வது இடத்தில் இருப்பவருமான இத்தாலி நாட்டு வீராங்கனை (28 வயது) ( Jasmine Paolini) ஜஸ்மின் பவுலினி என்பவரும் மோதிக் கொண்டதில் 6-2, 6-1 என்ற புள்ளி அடிப்படையில் போலந்து நாட்டு வீராங்கனை வெற்றி பெற்று 24 லட்சம் அமெரிக்க டொலர்களைப் பெற, தோல்வியடைந்தவர் 12 லட்சத்து 20 ஆயிரம் யூரோக்களைப் பெற்றார்...

Wimbledon Championships -2024 **விம்பிள்டன் - ரெனிஸ் போட்டிகள்**

**பெண்கள்:-**

உலக தரவரிசையில் 31வது இடத்திலுள்ளவரும் செக்குடியரசு நாட்டைச் சேர்ந்தவருமான பார்பரா கிறெஜெசிக்கோவாவும் ( Barbora Krejčíková ) உலக தரவரிசையில் 7வது இடத்திலுள்ள இத்தாலி நாட்டைச் சேர்ந்தவருமான ஜஸ்மின் பௌலினியும் ( Jasmine Paolini ) விறுவிறுப்பாக மோதிக்கொண்டதில் 6-2, 2-6, 6-4 என்ற செட்கணக்கில் பார்பரா கிறெஜெசிக்கோவா வெற்றி பெற்றார். இது ஒரு அதிசயிக்கத்தக்க வெற்றியாக விம்பிள்டன் ரெனிஸ் வரலாற்றில் பதிவாகியுள்ளது. பணப்பரிசாக 31.50.000-00 டொலர்களையும் தோல்வியடைந்தவர் 17.25.000-00 டொலர்களையும் பெற்றனர்

**ஆண்கள்:-**

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவரும் உலகின் 3வது நிலை வீரருமான அல்கரஸூம் (Alcaraz ) உலகின் 2வது நிலை வீரரும்

சேர்பியா நாட்டைச் சேர்ந்தவருமான டியக்கோவிச் (Djokovic) அவர்களும் கடுமையாக மோதிக் கொண்டதில் 6-2, 6-2, 7-6 என்ற செட்கணக்கில் அல்கரஸ் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டார். பணப்பரிசாக 31.50.000-00 டொலர்களையும் தோல்வியடைந்தவர் 17.25.000-00 டொலர்களையும் பெற்றனர்.உலகில் இடம்பெறும் ரெனிஸ் போட்டிகளில்( Grand-Slam ) கிறாண்ட்ஸ்லாம் என்று அழைக்கப்படும் Australian Open, French Open , Wimbledon , US Open போட்டிகளுக்குத்தான் வெற்றிபெறும் வீரர்களுக்கு மிக அதிகமான பணப்பரிசும் மிக அதிகமான புள்ளிகளும் வழங்கப்படுவது வழக்கமாகும்.

.................................................................................................................................................







# ஐரோப்பா கிண்ணத்தை வென்ற ஸ்பெயின் நாட்டு அணி...

ஜேர்மனியில் ஐரோப்பிய உதைபந்தாட்டப்போட்டி - 2024

Fußball-Europameisterschaft 2024 (in Germany)

UEFA European Football - Championship - 2024

Opening Game - 14.06.2024 - München Final Gsme - 14.07.2024 - Berlin

24 ஐரோப்பிய நாடுகள் பங்குகொண்ட 17வது போட்டியானது 14.06.2024 வெள்ளிக்கிழமை குதுாகலமாக ஆரம்பித்து 14.07.2024 முடிவடைந்தது. இறுதிப் போட்டியில் ஸ்பெயின் - இங்கிலாந்து என இரு நாட்டு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக மோதிக் கொண்டதில் 2-1 என்ற கோல் கணக்கில் ஸ்பெயின் நாடு வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தையும் 10 மில்லியன் யூரோ பணப்பரிசையும் பெற்றுக் கொண்டது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருதடவை நடைபெறும் ஐரோப்பிய கால்பந்தாட்டப் போட்டியானது 1960ம் ஆண்டு ஆரம்பித்து 17 தடவையாக இந்த வருடம் யேர்மனியில் நடைபெற்றது. இப்போட்டியில் மொத்தம் 51 போட்டிகள் 10 அரங்குகளில் நடைபெற்றது..

ஐரோப்பாக்கிண்ண வரலாற்றில் ஆகக்கூடுதலாக வெற்றிபெற்ற நாடுகள்..

| | | | |
|---|---|---|---|
| ஸ்பெயின் | 4 | தடவைகள் | 1964, 2008, 2012, 2024 |
| யேர்மனி | 3 | ” | 1972, 1980, 1996 |
| பிரான்ஸ் | 2 | ” | 1984, 2000 |
| இத்தாலி | 2 | ” | 1964, 2021 |

போத்துக்கல்-2016 கிறீஸ்லாந்து-2004 டென்மார்க்-1992 நெதர்லாந்து-1988 செக்கோஸ்லாவியா-1976 சோவியத்யூனியன்-1960 என ஒவ்வொரு தடவையும் வெற்றி பெற்றிருக்கின்றன.

**-ஐரோப்பாகிண்ணம் நடைபெற்ற-வெற்றிபெற்ற நாடுகள் விபரம்..**
**ஆண்டு -நடைபெற்றநாடுகளும் - வெற்றி பெற்ற நாடுகளும்**




| ஆண்டு | நடைபெற்ற நாடுகள் | வெற்றி பெற்ற நாடுகள் |
|---|---|---|
| 1960- | பிரான்ஸ் | -ரஷ்ஷியா |
| 1964- | ஸ்பெயின் | -ஸ்பெயின் |
| 1968- | இத்தாலி | -இத்தாலி |
| 1972- | பெல்ஜியம் | -ஜேர்மனி |
| 1976- | யூகோஸ்லாவியா | -செக்கோஸ்லாவியா |
| 1980- | இத்தாலி | -ஜோமனி |
| 1984- | பிரான்ஸ் | -பிரான்ஸ் |
| 1988- | யேர்மனி | -நெதர்லாந்து |
| 1992- | சுவீடன் | -டென்மார்க் |
| 1996- | இங்கிலாந்து | -ஜேர்மனி |
| 2000- | பெல்ஜியம் - நெதர்லாந்து | -பிரான்ஸ் |
| 2004- | போத்துக்கல் | -கிறீஸ்லாந்து |
| 2008- | ஒஸ்திரியா - சுவீஸ்லாந்து | -ஸ்பெயின் |
| 2012- | போலந்து - உக்ரைன் | -ஸ்பெயின் |
| 2016- | பிரான்ஸ் | -போத்துக்கல் |
| 2020-2021 | (11) நாடுகளில் | -இத்தாலி |
| 2024- | ஜேர்மனி | -ஸ்பெயின் |

**ஒவ்வொரு குழுவிலும் போட்டியிட்ட நாடுகள்...**

| | | | |
|---|---|---|---|
| Group A - 1 -Germany | 2- Scotland | 3- Hungary | 4-Switzerland |
| Group B - 1 - Spain | 2- Croatia | 3- Italy | 4- Albania |
| Group C - 1 - Slovenia | 2- Denmark | 3- Serbia | 4- England |
| Group D - 1 - Poland | 2- Netherlands | 3-Austria | 4- France |
| Group E - 1- Belgium | 2- Slovak | 3- Romania | 4- Ukraine |
| Group F - 1- Turkey | 2- Georgi | 3- Portugal | 4 -Czech Republic |

-அடுத்த ஐரோப்பாக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 2028 கோடைகாலத்தில் இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் நடைபெறும்.

.............................................................................................................................

Copa America - 2024

**கோபா அமெரிக்கா உதைபந்தாட்டப் போட்டி..**

ஐரோப்பிய வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியைப் போல வடஅமெரிக்கா தென்னமெரிக்கா கண்ட நாடுகள் பங்குகொண்ட போட்டிகள் அமெரிக்காவில் 20.06.2024 ஆரம்பித்து 14.07.2024ம் திகதி முடிவடைந்தது. 14 நகரங்களில் நடைபெற்றது.
இதன் இறுதிப் போட்டியில் ஆஜர்ந்தீனா அணியும் கொலம்பியா அணியும் மிக விறுவிறுப்பாக மோதிக் கொண்டதில் ஆஜர்ந்தீனா அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இறுதிச் சுற்றில் பங்குகொண்ட வட, தென்னமெரிக்க 16 நாடுகள்...

1- ஆஜர்ந்தீனா, கனடா, சிலே, பேரு
2- வெனிசூலா, ஈக்குவடோர், மெக்ஸிக்கோ, ஜமேக்கா
3- உருகுவே, பனாமா, அமெரிக்கா, பொலிவியா
4- கொலம்பியா, பிறெசில், கோஸ்ரரிக்கா, பரகுவே

- 3ம் இடத்துக்கான போட்டி 13.07.2024 இரவு இடம்பெற்றதில் கனடா அணியும் உருகுவே அணியும் மோதிக் கொண்டதில் உருகுவே அணி 4 - 3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது

# 33வது சர்வதேச கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் - பிரான்ஸ் - 2024

Intenational Oliympics xxxiii - 2024 - Paris - France
26.07.2024 - 11.08.2024






வரலாற்றுப் புகழ்மிக்க ஒலிம்பிக் போட்டிகள் 4 வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறுகின்றன. மாறி..மாறி ஒவ்வொரு கண்டத்திலும் நடைபெறுவது வழக்கமாக இருந்தாலும் ஆபிரிக்காக் கண்டத்தில் இன்னும் நடைபெறவில்லை என்பது வரலாறாகும். இந்த வருடம் 33வது ஒலிம்பிக் ஐரோப்பாக கண்டத்திலுள்ள பிரான்ஸ் - பாரிஸ் நகரில் நடைபெறவுள்ளது.

## ஒலிம்பிக்போட்டிகள்...

1896ம் ஆண்டு முதலாவது ஒலிம்பிக்போட்டி கிறீஸ்லாந்து நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது 14 நாடுகளைச் சேர்ந்த 280 போட்டியாளர்கள்தான் பங்குகொண்டனர். ஆக 43 விளையாட்டுகள் நடைபெற்றதாம்.தொடர்ச்சியாக நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை 4 கண்டங்களில் மாறிமாறி இடம்பெற்றுவந்தன. பின்னர் 1924ம் ஆண்டு நவீனமயப்படுத்தப்பட்டு இற்றைவரை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. நவீனமயப்படுத்தப்பட்டு இது 100 வருடமாக இடம்பெறும் போட்டியாகச் சிறப்புப் பெற்றுள்ளது. ( 1924 - 2024 )

## கண்டங்கள் ரீதியாகப் பார்க்கும்போது...

| | | |
|---|---|---|
| ஐரோப்பாவில் | - 18 | தடவைகள் நடைபெற்றது |
| வட ∴ தென் அமெரிக்கா | - 08 | ” ” |
| ஆசியா | - 04 | ” ” |
| அவுஸ்த்திரேலியா | - 02 | ” ” |
| ஆபிரிக்கா | - 00 | இதுவரை நடைபெறவில்லை |

## பிரான்ஸ் - பாரிஸ் 33வது ஒலிம்பிக் போட்டிகள் 2024

- இவ்வருடம் கோடைகாலத்தில் 26.07.2024 தொடக்கம் 11.08.2024 வரை நடைபெறும்.
- opening ceremony ஆரம்ப விழா 26.07.2024 மாலை 19.30 மணிக்குப் அதிசயிக்கத்தக்க பலவித வேடிக்கை விநோத நிகழ்வுகளுடன் ஆரம்பிக்கும்.
- பாரிசில் 42 அரங்குகளில் 329 வகையான விளையாட்டுகள் இடம்பெறும்
- 205 நாடுகளைச் சேர்ந்த 10.500 வீர, வீராங்களைகள் போட்டிகளில் கலந்து கொள்வார்கள்.
- வெற்றியாளர்களுக்கு 2.600 பதக்கங்களும் பரா ஒலிம்பிக் (மாற்றுத் திறனாளிகள்) வெற்றியாளர்களுக்கு 2.484 என மொத்தம் 5.084 பதக்கங்கள் வழங்கப்படும்.

- பதங்கங்களின் நிறை தங்கம் 529 கிராம், வெள்ளி 525 கிராம், வெங்கலம் 455 கிராம்
- பாரிஸில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள கோடைகால ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெறும் விளையாட்டு வீரர்களுக்கு பண பரிசுத்தொகைகள் வழங்கப்படவுள்ளன. இதன்படி, பாரிஸில் நடைபெறும் 48 தடகளப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கு 50 ஆயிரம் டொலர்கள் வழங்கப்படவுள்ளது.
- தொடர்ச்சியாக மாற்றுத் திறனாளிகளின் பரா ஒலிம்பிக் போட்டிகள் (Sommer Paralympics) 28.07.2024 ஆரம்பமாகி 08.09.2024 அன்று முடிவுறும்

இதுவரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற நாடுகள்....

Summer and Winter Olympic Games City Country Year Continent Summer

| | | |
|---|---|---|
| Athens Greece | - 1896 | - 1 |
| Paris France | - 1900 | - 2 |
| St. Louis United States | - 1904 | - 3 |
| London United Kingdom | - 1908 | - 4 |
| Stockholm Sweden | - 1912 | - 5 |
| Berlin Germany | - 1916 | - 6 Cancelled due to World War-1 |
| Antwerp Belgium | - 1920 | - 7 |
| Paris France | - 1924 | - 8 |
| Amsterdam Netherlands | - 1928 | - 9 |
| Los Angeles United States | - 1932 | - 10 |
| Berlin Germany | - 1936 | - 11 |
| Helsinki Finland | - 1940 | - 12 Cancelled due to World War-2 |
| London United Kingdom | - 1944 | - 13 Cancelled due to World War-2 |
| London United Kingdom | - 1948 | - 14 |
| Helsinki Finland | - 1952 | - 15 |
| Stockholm Sweden | - 1956 | - 16 |
| Rome Italy | - 1960 | - 17 |
| Tokyo Japan | - 1964 | - 18 |
| Mexico City Mexico | - 1968 | - 19 |
| Munich West Germany | - 1972 | - 20 |
| Montreal Canada | - 1976 | - 21 |
| Moscow Soviet Union | - 1980 | - 22 |
| Los Angele United States | - 1984 | - 23 |
| Seoul South Korea | - 1988 | - 24 |
| Barcelona Spain | - 1992 | - 25 |
| Atlanta United States | - 1996 | - 26 |
| Sydney Australia | - 2000 | - 27 |
| Athens Greece | - 2004 | - 28 |
| Beijing China | - 2008 | - 29 |
| London United Kingdom | - 2012 | - 30 |
| Rio de Janeiro Brazil | - 2016 | - 31 |
| Tokyo Japan | 2020-2021 | - 32 |
| Paris France | - 2024 | - 33 |
| Los Angeles United States | - 2028 | - 34 |






# யேர்மனிய தமிழ்பெண் எழுத்தாளர்கள் விபரம்..

- தொகுப்பு சாந்தினி துரையரங்கன் -

## யேர்மனி தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்... தொடர்ச்சி - 33







பெயர் - செல்வி ஷறீகா சிவநாதன்

தந்தை தாய் திரு திருமதி சிவநாதன் - நகுலா
பிறப்பு - Selm - Germany
கல்வி - Stadt Gymanisam - Selm
Freiherr-vom-Stein-Gymnasium Lünen
பட்டப்படிப்பு - RWTH Aachen University
Bsc, Msc, PhD
தொழில்- Researcher and Lecture in Informatics ( IT)
University of Muenster

- எழுதிய நூல்கள் - " இலட்சியப் பாதையில் எண்ணத் துளிகள் " டொச் மொழியிலும் ஆங்கில மொழியிலும் எழுதினார்.
- " தூவானச்சாரல் " - இறுவெட்டு (CD) தயாரித்தார். 2014
- யேர்மனியில் பிறந்து தமிழையும் ஆர்வமுடன் கற்றார். Diplom in tamil கற்று முடித்தார்.
- 15 வருடமாக Dortmund தமிழாலயத்தில் தமிழ் ஆசிரியராக பாடசாலையில் கற்பித்து வருகிறார்.
- அவர் பல மொழிகளில் திறமையாகச் செயற்படக்கூடியவர்.. யேர்மன் ,தமிழ் , ஆங்கிலம் மூன்று மொழிகளிலும் மொழி பெயர்ப்புச் செய்யும் வல்லமை பெற்றவர்.



- பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும் ஆராய்ச்சியாளராகவும் இருப்பதால் ஆயவு ரீதியாக பல்வேறு நாடுகளின் பல்கலைக்கழகங்களில் உரையாற்றி வருகிறார்.
- சிறந்த அறிவிப்பாளரான இவர் இதுவரை 350 நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கியுள்ளார்.
- யேர்மனியில் இலக்கிய விருது ஒன்றையும் பெற்றுள்ளார்.
- மிக உயரிய விருதான History competition of the Federal president போட்டியில் state winner விருதைப் பெற்றுள்ளார்.
- இலண்டன் தமிழ் வானொலியில் 700 மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ளார்.
- கவி எழுதும் ஆற்றல் சின்னவயதில் இருந்தே வந்ததால் " இலட்சியப் பாதையில் எண்ணத்துளிகள் " எனும் கவிதை நூல் யேர்மன் - தமிழ் மொழிகளில் எழுதியுள்ளார்
- இவர் பாடலாசிரியராக பல பாடல்களை எழுதியுள்ளார்.
- " தூவானச்சாரல் " எனும் இறுவெட்டு இவர் தயாரித்து 2014 இல் வெளியிட்டுள்ளார். பிரபல இந்தியப் பாடலாசிரியர்கள் கார்த்திக், ஹரிச்சரன் கிரிஸ், பூசா போன்றோர் இதில்ப் பாடியுள்ளனர்.
- மலேசியத் தமிழ்த் திரைப்படத்தில் " இளமை புதுமை " இறுவெட்டில் " ஒவ்வொரு கனவு " எனும் பாடல் எழுதிச் சிறந்த பாடலாசிரியருக்கான விருதையும் பெற்றுள்ளார்.
- யேர்மனிய நடன ஆசிரியர் திருமதி வானதி தெசிங்கராஜா அவர்கள் எழுதிய " நடன வரலாறு " எனும் நூலை டொச் மொழியில் மொழி பெயர்த்த பெருமை இவரையே சாரும்.
- 2011- யேர்மனி " வெற்றிமணி" பத்திரிகை " பல்கலைவாணி "" என்ற பட்டத்தை அளித்துக் கௌரவப்படுத்தியது.
- வீச்சுப் பேச்சாளர் என்ற பெருமையை கனடா தமிழ்வானொலி அறிவிப்பாளர் சிற்றம்பலம் கொடுத்தார்.

- ஆண்டு தோறும் நடைபெறும் மலேசியா பத்துமலை முருகன் தைப்பூச திருவிழாவின் நிகழ்வைத் தொகுத்து வழங்கி வருகிறார்.
- தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை என்பார்கள் அந்த வகையில் தாயின் வழிகாட்டலில் உருவாகி தற்போது தனக்கென தனித்துவமான ஒரு பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் ஷறீகா வாழ்வில் சகல செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றோம். வாழ்க வாழ்க.

## மண் சஞ்சிகை ஆசிரியரின் குறிப்பு..

செல்வி ஷறீகா சிவநாதன் அவர்களின் முதலாவது மேடை சிறுமியாக 1997ம் ஆண்டு மண் சஞ்சிகையின் 7 வது ஆண்டுவிழாவில்தான். தொடர்ந்து மண் சஞ்சிகையில் பல சிறுவர் ஆக்கங்களை எழுதி வந்திருக்கிறார். பரிசுகளையும் பெற்றிருக்கின்றார்.

யோ்மனி எழுத்தாளர் சங்கம் வெளியீடு செய்த " நாங்கள் " என்ற புத்தகத்தில் யோ்மனிய தமிழ் மாணவர்களின் படைப்பில் தமிழ் - டொச் மொழிகளில் கவிதை எழுதிச் சிறப்புப் பெற்றிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்.

எமது சஞ்சிகையில் எழுதி வளர்ந்தவர்களில் ஒருவர்தான் இவரது தாயார் நகுலா. இன்று தாயைப்போல செல்வி ஷறீகாவும் எழுத்து, அறிவிப்பு, விமர்சனம், சொற்பொழிவு, வானொலி, ஊடகம், தமிழாசிரியர், விரிவுரையாளர் எனப் பலவகை ஆளுமைபடைத்த இளம் பெண்மணியாக வலம் வந்துகொண்டிருக்கிறார். பக்கபலமாக விளங்கும் இவரின் தந்தையார் திரு சிவநாதன் அவர்கள் போற்றுதலுக்குரியவரே.

மேலும் தமிழிலும் பிறமொழிகளிலும் உயர்ந்து சேவை செய்ய பாராட்டுகளைத் தெரிவித்து மகிழ்கின்றோம்!..

- ஆசிரியர் -

..........................................................................................................................

## அறிந்துகொள்வோம்!...

1- கண் இல்லாத உயிரினம் - மண் புழு
2- பூச்சி இனங்களில் அறிவு மிக்கது - எறும்பு
3- பற்கள் இல்லாத உயிரினம் - ஆமை
4- மூக்கில் பல் உள்ள உயிரினம் - முதலை
5- ஜீரண உறுப்பில்லாத உயிரினம் - ஈசல்
6- யானையின் கர்ப்பகாலம் - 22 மாதங்கள்
7- முன்னுக்கும் பின்னுக்கும் பறக்கும் பறவை இனம் - ஊங்காரக்குருவி
8- முட்டைகளை அடைகாக்கும் ஒரே ஒரு ஆண் பறவை - பென்குயின்






# யேர்மனியில் இசைப்பிரவாகம்!....

(கலைவாணி.ஏகானந்தராஜா)

யேர்மனியில் weilerwist நகரைச் சேர்ந்த பரிமளகாந்தி. பரமதாஸ் தம்பதிகளின் புதல்வன் அருண். பரமதாஸ் அவர்களின் கர்நாடக சங்கீத அரங்கேற்றம் 15.06.2024 அன்று இசைப் பிரவாகமாகப் பாய்ந்து அரங்கத்தில் இருந்த அறுநூறுக்கு மேற்பட்ட அவையோரை மூழ்கடித்தது. செல்வன் அருண் பரமதாஸ் ”சங்கீத கலா விதுஷி” ஸ்ரீமதி. போஜராஜசர்மா அவர்களின் மாணவனாவார். பத்து ஆண்டுகள் இவரிடம் முறையாகக் இசையை கற்றவர்.

மாலை 4 மணியளவில் சுவற்றா சங்கர். சர்மா அவர்களினால் பூஜை நடாத்தப்பட்டு ஆசீர்வாதமும் கௌரவிப்பும் இடம்பெற்று குருவின் ஆசீர்வாதத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. முதல் உருப்படியாக மாயாமாளவகௌளளை இராகத்திலமைந்த ”ஓம் பிரணவ விமல கணபதி”என்ற ஒரு தமிழ் வர்ணத்தைப் பாடினார். வர்ணம் ஆரம்பிப்பதற்கு முன் தாளவாத்யங்களும் இசைக்கருவிகளும் இணைந்து தந்த அசை முழக்கமானது சபையை களை கட்டவைத்தது. ஆரம்பமே கைதட்டலினால் வரவேற்பையும் உற்சாகத்தையும் கொடுத்தது:

அடுத்து வர்ணத்தை மத்திம துரித காலங்களில் பாடியதுடன் திஸ்ர கதியில் பாடி அசத்தியிருந்தார். தொடர்ந்து ஷம்சத்வனி ராகத்திலமைந்த கீர்த்தனை. ”கணபதி கழலடி பணிமனமே” அனாகத எடுப்பில் அமைந்தது:. அற்புதமான ஜதிக்கோர்வைகளுடன் அமைந்த கீர்த்தனை. அடுத்து சம்பிரதாய முறைப்படி ஸ்ரீ ராகத்திலமைந்த பஞ்சரத்ண கீர்த்தனையை நுணுக்கமான ஸ்வர சாகித்ய தாளக் கட்டுப்பாட்டுடன் பாடியிருந்தார்.

இடையே ஒரு வாழ்த்து நிகழ்ச்சியாக பல் தாளவாத்தியக் கலைஞர் திரு ச.தேவகுருபரன் அவர்கள் அரங்கேற்ற நாயகனை பொன்னாடை போர்த்தி வாழ்த்திப் பேசினார். மீண்டும் புயல் அடித்ததுபோல கல்யாணி ராகத்தை மந்திர ஸ்தாயியிலிருந்து மேல்ஸ்தாயிவரை பிரதி மத்திமத்துடன் ரஞ்சகத்திற்காக சுத்த மத்திமத்தையும் சேர்த்து மிக நேர்த்தியாக ஆலாபனை செய்தார். புல்லாங்குழல் கலைஞன் பிரவீன்.பிரதாபன் தன் பங்கிற்கு கல்யாணி ராகத்தை மகுடி வாசிப்பதுபோல வாசித்து ரசிகர்களை மயங்கச்செய்தார்.

வயலின் கலைஞர் அச்ஷயன். சுபாஸ்கரனும் அவர்களுக்கு சளைத்தவரல்ல என்பதுபோல் கல்யபணி ராகத்தை பழரசம்போல் பிழிந்து தந்தார். மொத்தமாக சபையோரின் பலத்த கரகோசத்தை பெற்றனர். தொடர்ந்து ”உன்னையல்லால் வேறேகதி” கல்யாணி ராக கீர்தனையை நேர்த்தியாக நிரவல் செய்து கற்பனாஸ்வரம் பாடியபோது வயலின் கலைஞருக்கு மிருதங்க கலைஞர் டிலக்ஷன்.தர்மசீலன் என்னமா வாசித்து கலக்கினார். புல்லாங்குழல் கலைஞன் பிரவீன் வாசித்தபோது லயஞானவாரிதி அனுஷா ந்த். நயினை விஜையன் அவர்கள் அப்பப்பா சொல்லில் வடிக்க முடியாது. மிருதங்க ஜதிகள் கைகளில் தாண்டவமாடிட புரட்டியெடுத்தார்.

அடுத்து கர்நாடக சங்கீத அரங்கேற்றத்தின் சிகரமாக அமைவது ராகம் தானம் பல்லவி . இது மனோதர்ம சங்கீத வகையை சேர்ந்தது. ஒரே வரியில் அமைந்திருக்கும் இந்தப்பல்லவியை அருண்.பரமதாஸ் தானே தமிழில் எழுதிப் பாடியமை பாராட்டைப் பெற்றது. .பல்லவியை சாருமதி, ஷம்சநாதம், ரேவதி என மூன்று ராகங்களிலும் கண்ட துருப தாளத்திலும் அமைத்திருந்தார். அத்துடன் அமைந்த ராகங்கள் மூன்றையும் பல்வேறு அம்சங்கள் வெளிப்படுத்தும் வகையில் கமகங்களும் பிருக்காக்களும் கொண்டதாக அவரது சாரீரம் பேச ஆலாபனை செய்து. தானம் பாடியபோது சபையோரின் கரகோசம் வானைப் பிளந்தது.

பல்லவியை திரிகாலப்படுத்தி திஸ்ரப்படுத்தி நிரவல் செய்து, நிறைந்த கற்பனைத்திறனுடன் ரசிகப்பிரியா, ரீரிகௌளை, காபி ராகங்களில் கற்பனாஸ்வரம் பாடியும் அசத்தியிருந்தார். அருணுடைய இசையில் உள்ள அபாரத் திறமையும்,ஆழ்ந்த இசை ஞானத்தையும் இந்த ஒன்றே முக்கால் மணி நேரத்தில் எடைபோட முடிந்தது. பக்கவாத்யக் கலைஞர்களும் ஒருவர்கொருவர் சளைத்தவரல்ல என்பதை நிரூபித்து ஒரு கலக்குக் கலக்கிவிட்டார்கள். அவர்களுக்கு ஒரு சபாஸ்.

தொடர்ந்து 5 ராகங்களில் அமைந்த ராகமாளிகை கீர்த்தனம் ”இன்பக்கனாவொன்று கண்டேன்.” அருண் இராக பாவத்துடனும் உணர்வுபூர்வமாகவும் பாடினார். அதேபோல நீலமணி ராகத்தில் அமைந்த ”என்னகவி பாடினாலும்” கீர்த்தனையை உருகி உருகி முருகனை அழைத்துப் பாடி ரசிகர்களை மெய்மறக்கச் செய்தார். அடுத்து திருவிளையாடல் திரைப்பட ப்பாடல் ”பாட்டும் நானே பாவமும் நானே” ஜதிச்சொற்கட்டுடன் ஸ்வரக் கோர்வைகள் கொண்ட பாடலை மிக அற்புதமாகப்பாட சபை ஆரவாரித்து கை தட்டி பாராட்டியது. பக்கவாத்யக் கலைஞர்கள் தம் திறமைகளையெல்லாம் அவிழ்த்துக்கொட்டி ரசிகர்களின் அப்ளாஸ்களை பெற்றனர்.

(தொடர்ச்சி 73ம் பக்கம்)

# இடது பக்கமாக படுங்க என்றார் ஒருவர்...படுத்தேன்....

வலது பக்கமாக படுங்க என்றார் இன்னொருவர் படுத்தேன். குப்புற படுக்காதீங்க என்றார். மல்லாக்க படுக்காதீங்க என்றார் இன்னொருவர்..

படுக்கவிடாமல் படுத்தாறங்களே...காலையில் நடக்க சொன்னார்கள்.. நடந்தேன். நேராக நடக்க கூடாது, எட்டு போட்டுத் தான் நடக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.
காலையில் எழுந்தவுடன் ஒரு டம்ளர் தண்ணீர் குடித்து கொண்டிருந்தேன். போதாது போதாது.. அதனுடன் எலுமிச்சையும் பிழிந்து குடிக்க வேண்டும் என்று சொன்னார்கள் ..கேன்சர் உறுதியாக வராதாம்.!!

உருளைக்கிழங்கு அளவோடுதான் ருசியாக சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். வாயு என்றார்..வாயில் போடுவதை மறந்தேன்...உலக நாடுகளில் இது மட்டும்தான்...வேற வழியில்லை.. சாப்பிடுங்க என்றார்கள்...

இனிப்பை தொட்டுவிடாதீர்கள்..அவ்வளவுதான்..Sugar ஏற்றிவிடும் என்றார்..சரி என்று நிறுத்தினேன். நடக்கும் போது நண்பர் சொன்னார்..low sugar ஆகிவிடும், பாத்துக்குங்க..அப்பப்ப கொஞ்சம் சாப்பிடுங்க என்றார்..

இப்படித்தான் குளிக்க வேண்டும் என்றார்...ஐயோ, தப்பு, அப்படி குளிங்க என்றார்...குளிக்கக்கூட சுதந்திரம் இல்லை...தந்திரமா குளிக்கனும் என்றார். காபி, டீ வேண்டாம்,அரிசி கஞ்சி வேண்டாம்,பால் வேண்டாம்,ஐஸ் வாட்டர் வேண்டாம், பாட்டில் ஜூஸ் வேண்டாம் என்றார்...சரி என்று பழகினேன்..

ஒன்று புரிந்தது.. ஒன்றும் தெரியாமல் இருந்தாலும் ஆபத்து, அதிகமாகத் தெரிந்தாலும்ஆபத்து..

"Over qualification is disqualification" என்று எங்கோ படித்த நினைவு..Too much informations will make you to suffer from distinguishing between useful & useless informations.


நல்லா போய்க் கொண்டிருந்த வாழ்க்கையில்,உடம்பை பாத்துக்கங்க என்று சொல்லி உடம்பையே பார்த்துட்டு இருந்ததன் விளைவு, மனசு வம்பா போச்சு...எல்லோர் பேச்சும் கேட்பதும் ஆபத்து..ஒருத்தர் பேச்சும் கேட்காமல்

இருந்தாலும் ஆபத்து..வாழ்க்கை, வாழை இலையில் விழுந்த ரசம் போல.. எந்தப் பக்கம் ஓடுது என்றே தெரியாமல் ஓடுகிறது. வாழ்க்கை ரசத்தை குடிக்க முடியலையே?

அதிக விஷயம், விஷம். இயல்பா இருங்க. ஒண்ணும் குடி முழுகிப் போய்விடாது.

**- படித்ததில் ரசித்தது -**








# ஐரோப்பியபாராளுமன்ற தேர்தல் முடிவு -2024

5 வருடங்களுக்கு ஒரு தடவை இடம்பெறும் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் 9வது பொதுத்தேர்தல் 09.06.2024 நடைபெற்று முடிந்துள்ளது. 27 ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற இத்தேர்தலில் 720 (MP) உறுப்பினர்கள் தெரிசெய்யப் பட்டனர். சுமார் 52 கோடி பேர் வாக்களித்தகுதி பெற்றிருந்தனர். 15 பிரதான அரசியல் கட்சிகளும் 30க்கும் அதிகமான உதிரிக்கட்சிகளும் இத்தேர்தலில் போட்டியிட்டன.

- இப்பாராளுமன்றத்தின் தலைவராக மீண்டும் தெரிவானார் யோர்மனிய பெண்மணி அவரின் பெயர் Urdula von der Leyen

- பெல்ஜியம், பிரான்ஸ், யோர்மனி, இத்தாலி, லக்ஸம்பேர்க், நெதர்லாந்து ஆகிய 6 நாடுகளால் 1952ம் ஆண்டளவில ஐரோப்பிய கூட்டமைப்பு ஆரம்பித்தாலும் 1979ம் ஆண்டுதான் முதல் முறையாக பாராளுமன்றத் தேர்தல் அறிமுகமானது. இப்பாராளுமன்றம் பிரான்ஸ் நாட்டியுள்ள சார்ள்ஸ்பேர்க் என்ற நகரத்தில் அமைந்துள்ளது.

- 27 நாடுகள் அங்கம் வகிக்கும் இப்பாராளுமன்றத் தேர்தல் கட்டம், கட்டமாக நடைபெற்றது.

-இப்பாராளுமன்றத்தில் அங்கம் வகித்துவரும் நாடுகள்

1979ல் - 9 நாடுகள் - 1984ல் - 10 நாடுகள் - 1989ல் - 12 நாடுகள்
1994ல் - 12 ”” - 1999ல் - 15 ”” - 2004ல் - 25 ””
2009ல் - 28 ”” - 2014ல் - 28 ”” - 2019ல் - 27 ””

- யோர்மனியில்தான் கூடிய எம் பிக்கள் தெரிவாகியுள்ளனர்.
-யோர்மனி - 96 எம் பிக்கள் -பிரான்ஸ் - 81 எம் பிக்கள்
-இத்தாலி - 76 ”” -ஸ்பெயின் - 53 ””

- இத்தேர்தலில் வலதுசாரிக்கட்சிகள் எதிர்பாராத வெற்றியைப் பெற்றிருக்கின்றன. குறிப்பாக யோர்மனி, பிரான்ஸ், இத்தாலி நாடுகளில் அமோக வெற்றி. வெளிநாட்டவர்களுக்கு எதிரான கட்சிகள் வெற்றிபெற்றன.

வெற்றி பெற்ற கட்சிகளின் விபரம்...

| | | |
|---|---|---|
| EVP | - 189 | - 26,25 % |
| S&D | - 136 | - 18,89 % |
| EKR | - 83 | - 11,53 % |
| Renew Europe | - 74 | - 10,28 % |
| ID - Fraktion | - 58 | - 8,06 % |
| Grüne/EFA | - 53 | - 7,36 % |
| The Left | - 39 | - 5,42 % |
| NI | - 45 | - 6,25 % |
| Sonstige | - 43 | - 5,97 % |
| | ---------- | |
| | 720 Sitze | |

- EVP - Fraktion der Europäischen Volkspartei (Christdemokraten)
- S&D - Fraktion der Progressiven Allianz der Sozialdemokraten im Europäischen Parlament
- EKR - Fraktion der Europäischen Konservativen und Reformer
- Renew Europe - Renew Europe Group
- ID - Fraktion Identität und Demokratie
- Grüne/EFA - Fraktion der Grünen / Freie Europäische Allianz
- The Left - Fraktion Die Linke im Europäischen Parlament
- GUE/NGL- NI - Fraktionslos

Deutschland - Endergebnisse

| | |
|---|---|
| CDU/CSU - Christlich Demokratische Union Deutschlands/Christlich-Soziale Union in Bayern | 30,00 % |
| AfD - Alternative für Deutschland | 15,90 % |
| SPD - Sozialdemokratische Partei Deutschlands | 13,90 % |
| Die Grünen - Bündnis 90/Die Grünen | 11,90 % |
| BSW - Bündnis Sahra Wagenknecht - Für Vernunft und Gerechtigkeit | 6,20 % |
| FDP - Freie Demokratische Partei | 5,20 % |
| Die Linke - Die Linke | 2,70 % |
| FW - Freie Wähler | 2,70 % |
| Volt - Volt Deutschland | 2,60 % |
| Die Partei - Partei für Arbeit, Rechtsstaat, Tierschutz, Elitenförderung und basisdemokratische Initiative | 1,90 % |
| Tierschutzpartei - Partei Mensch Umwelt Tierschutz | 1,40 % |
| Familie - Familien-Partei Deutschlands | 0,60 % |
| ÖDP - Ökologisch-Demokratische Partei | 0,60 % |
| PdF - Partei des Fortschritts | 0,60 % |
| Piratenpartei - Piratenpartei Deutschland | 0,50 % |
| Sonstige Parteien - Sonstige Parteien | 3,30 % |

- 27 நாடுகளில் இத்தேர்தலில் ஆகக்கூடுதலாக பெல்ஜியம் நாட்டில் 89.82 வீதம் பேர், ஆகக்குறைந்தது குரோசியா நாட்டில் 21.35 வீதம்பேர் வாக்களித்திருக்கிறார்கள்..

- பிரான்ஸ், யேர்மனி, இத்தாலியில் முன்னிலையில் வலதுசாரி கட்சிகள்!! ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 27 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இருந்து சுமார் 185 மில்லியன் வாக்காளர்கள் வாக்களித்தனர்.
- ஐரோப்பிய ஒன்றிய முடிவுகள் வெளிவந்த நிலையில், ஐரோப்பிய பாராளுமன்றத்தை பிரதான கட்சிகள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அதே வேளையில், தீவிர வலதுசாரி கட்சிகள் எழுச்சி பெற்றன.
- இது ஜனாதிபதி மக்ரோனை பிரான்சில் பாராளுமன்றத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கத் தூண்டியது மற்றும் ஜேர்மனியின் ஸ்கோல்ஸ் மற்றும் ஆஸ்திரியாவின் நெஹாமர் போன்ற தலைவர்களிடம் கடுமையான தோல்விகளைச் சந்தித்தது.
- பிரான்சில், மரைன் லு பென்னின் தேசியப் பேரணி மக்ரோனின் மையவாத மறுமலர்ச்சிக்கு மிகவும் மோசமான தோல்வியை அளித்தது.
- நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, உடனடியாக நாடாளுமன்றத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்க இருப்பதாக இம்மானுவேல் மக்ரோன் அறிவித்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.
- பிரான்சில் மரைன் லு பென்னின் தேசியப் பேரணி சுமார் 31.37மூ வாக்குகளைப் பெற்று ஆளும் கட்சியை தோற்கடித்தது.
- இதேபோன்று யேர்மனியில் எதிர்கட்சியான CDU/CSU (Christlich Demokratische Union Deutschlands/Christlich-Soziale Union in Bayern) முன்னிலையில் உள்ளது. வலது சாரிக்கட்சி AfD (Alternative für Deutschland) ஆளும் கட்சியை பின்னுக்குத் தள்ளி இரண்டாவது இடத்திற்கு வந்துள்ளது.
- ஆளும் கட்சியான SPD (Sozialdemokratische Partei Deutschlands) மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டது.
- எதிர்க்கட்சியான CDU/CSU (Christlich Demokratische Union Deutschlands/ Christlich-Soziale Union in Bayern) 30.00% முன்னிலையில் உள்ளது
- வலது சாரிக்கட்சி AfD (Alternative für Deutschland) 15.90% பெற்ற இரண்டாவது இடத்தில் உள்ளது.
- ஆளும் கட்சியான SPD (Sozialdemokratische Partei Deutschlands) மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டது.13.90%
- பசுமைக்கட்சி (Die Grünen - Bündnis 90/Die Grünen) 11.90% பெற்று நான்காவது இடத்தில் உள்ளது.
- வலது சாரிக்கட்சி AfD 4வது இடத்திலிருந்து 2வது இடத்துக்கு வந்துள்ளது. இதே வேளை பசுமைக்கட்சி 2வது இடத்திலிருந்து 4வது இடத்திற்குச் சென்றுள்ளது.
- இத்தாலி பிரதம மந்திரி ஜியோர்ஜியா மெலோனியின் பரம-பழமைவாத பிரதர்ஸ் ஆ.ஃ.ப் இத்தாலி குழு ஐரோப்பிய பாராளுமன்ற தேர்தலில் அதிக வாக்குகளை வென்றது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அவரது நிலைப்பாட்டை உயர்த்தியது
- பிரதர்ஸ் ஆ.ஃ.ப் இத்தாலி 28.8% வாக்குகளைப் பெற்றுள்ளது. இது கடந்த 2019 ஆம் ஆண்டு ஐரோப்பிய யூனியன் தேர்தலில் பெற்றதை விட நான்கு மடங்கு அதிகமாகவும். 2022 தேசிய வாக்குச்சீட்டில் அது ஆட்சிக்கு வந்தபோது பெற்ற 26% ஐ விட அதிகமாகவும் பெற்றது.

ஒட்டுமொத்த தேர்தல் முடிவுகளின் படி வெளிநாட்டவர்களுக்கு எதிராகவே அனேகம்பேர் வாக்களித்திருக்கிறார்கள், யேர்மனி, பிரான்ஸ், இத்தாலி நாடுகளில் மிக அதிகம் பேர் அரசுகளுக்கு எதிராக வாக்களித்திருப்பதால் வெளிநாட்டவர்களின் எதிர்காலம் கடினமாகவே இருக்கும் எனத் தெரியவருகின்றது.




# எதிர்த்த உலகை அணைத்த அன்னை மேரி கியூரி அம்மையார்...

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையகம் தளைக்குமாம்" என்னும் பாரதியார் கூற்றுக்கிணங்க, மேரி கியூரி அம்மையார் அவர்கள் அறிவியல் துறையில் வல்லுனராகி புகழ்பெற்று விளங்கினார். பெண் என்பதனால் தாய்நாட்டில் படிப்பதற்கு தடை ஏற்பட, வெளிநாட்டுப் பெண் என்பதினால் படிக்கச் சென்று நாட்டில் எதிர்ப்பு ஏற்பட, பெண் என்பதனால் பாராட்டுக்கள், பரிசுகள் கூட கிடைப்பதில் போராட்டங்கள் ஏற்பட்ட ஒரு பெண்ணைப் பற்றிக் கேள்விப்பட்டு உள்ளீர்களா அவர்தான் இந்த மேடம் மேரி கியூரி அம்மையார்.

போலந்து நாட்டின் தலைநகரில் வாழ்ந்த ஒரு உழவர் குடும்பத்தின் வாரிசான கியூரி அம்மையாரின் இயற்பெயர் மேரியா. இயற்கையிலேயே புத்திக்கூர்மை உடைய இவர் படிப்பதில் ஆர்வம் காட்டினார். 1861 போலந்து நாட்டில் பிறந்த இவரின் தந்தையார் கணிதம் மற்றும் இயற்பியல் ஆசிரியர். தாயாரும் பள்ளியில் ஆசிரியராக இருந்தவர் தான். ஆனால் மேரியாவின் சிறு வயதிலேயே, தாயார் கச நோய் காரணமாக இறந்துவிட்டார். ஊர் பள்ளியில் திறம்பட கல்வி கற்று தேர்ச்சி பெற்ற மேரியா, 1883 தங்கப் பதக்கத்தோடு வெளியேறினார்.

பெண் என்ற காரணத்தால் மேல் படிப்பிற்கான அனுமதி மறுக்கப்பட்டது. தந்தையாரின் உதவியுடன் 1891 வரை கல்வியை தொடர்ந்த இவர், ரஷ்ய வேதியலாளரான மேரியாவின் உறவினர் ஒருவரின் தொழிற்சாலையில் உள்ள வேதியல் ஆய்வுக்கூடத்தில் அறிவியல் பயிற்சியை தொடங்கினார். 1891 முடிவில் பிரான்சிக்குச் சென்ற மேரியா, அங்கு இருந்த பல்கலைக்கழகத்தில் இயற்பியல், வேதியல், கணிதம் பயின்றார்.

மிகச்சொற்ப பணத்தில், மிகுந்த சிரமத்தில் படிப்பைத் தொடர்ந்த மேரி, 1893இல் இயற்பியலில் பட்டம் பெற்றார். ஆய்வு கூடத்தில் வேலை பார்த்தபடி படிப்பை தொடர்ந்த மேரி, தனது இரண்டாவது பட்டத்தை 1894 இல் பெற்றார்.

தனது ஆய்வுகளை பாரிசில் தொடங்கிய மேரி, முதலில் ஈயத்தின் காந்த சக்தி பற்றி ஆய்வு மேற்கொண்டார். அந்த வேளையில் பியரிகியூரி என்பவரை சந்தித்தார். இருவரிடமும் இருந்த அறிவியல் ஆர்வம் இருவரையும் ஒன்று சேர்த்தது. மேரி பியூரி இருவரும் திருமணபந்தத்தில் இணைந்தனர்.

1895இல் ஒரு மகள் பிறந்தாள். கியூரி தம்பதிகள் ஆய்வுகளை ஆராயும் ஆய்வு கூடம் நல்ல காற்றோட்டமோ, நீர் புகா அமைப்போ கொண்டிருக்கவில்லை. அவர்கள் கதிரியக்கத்தை கையாளுவதால் வரும் ஆபத்துக்களை அறிந்திருக்கவில்லை. 1898 இல் யுரேனியத்தை அடுத்து தோரியம் என்னும் தனிமமும், கதிரியக்க ஆற்றல் கொண்டிருப்பதை கண்டுபிடித்தார்.

1898 இல் கியூரி தம்பதிகள் புதிதாகக் கண்டுபிடித்த புதிய தனிமத்தை தனது தாய் நாட்டை பெருமைப்படுத்தும் விதமாக பொலோனியம் என பெயரிட்டனர். மேலும் ரேடிய ஆக்டிவிட்டி (Radioactivity ) என்னும் சொல்லை கதிரியக்கத்திற்கு பெயரிட்டனர். 1903 இல் ராயல் சுவீடிஸ் அகாடமி, மேரி மற்றும் கியூரி ஆகிய இருவருக்கும் இயற்பியலில் நோபல் பரிசு அளித்தது. இந்த மகிழ்ச்சியில் 1904 இல் இரண்டாவது பிள்ளையும் பிறக்கின்றது. ஆனால் இரண்டே வருடத்தில் கணவர் பியரி 1906இல் ஒரு சாலை விபத்தில் இறக்க, அவரின் பல்கலைக்கழக பேராசிரியர் பதவி மேரி அம்மையாருக்கு வருகின்றது.

முதல் பெண் பேராசிரியர் ஆனார் மேரி அம்மையார்.

1910இல் மேரி ரேடியத்தை பிரிப்பதில் சாதிக்க, உலகின் முதலாவது இரட்டை நோபல் பரிசை பெற்ற நபராக, 1911 ல் ராயல் சுவீடிஷ் அகடமி ஆப் சயின்ஸ் மேரிக்கு இரண்டாம் நோபல் பரிசை வேதியலில் வழங்கியது. பிரஞ்சு அகாடமி ஆப் சயின்ஸ் தேர்தல்களில் மேரி ஒரு அயல் நாட்டுக்காரர் என்றும் அவர் ஒரு நாத்திகர் என்றும் ஒதுக்கினர்.

ஆனால் நோபல் பரிசு பெற்ற பின் போற்றினர். தாய்நாடு, பெண் என்ற காரணத்தால் மேற்படிப்புக்கு தடை விதித்தது. அதே தாய் நாட்டை தன் கண்டுபிடிப்பில் பெயரிட்டு பெருமைப்படுத்தினார். 1914 இல் முதலாம் உலகப் போரின் போது, ஆம்புலன்ஸ் வண்டிகளில் எக்ஸ் கதிர் கருவிகளை பொருத்த உதவி செய்தார். முதலாம் உலகப் போரின் போது காயப்பட்ட வீரர்களுக்கு மருத்துவ உதவிக்கு எக்ஸ்ரே கருவிகளில் பயன்பாடு, ரேடியாலயி சேவை என இவரின் சேவைகள் விரிந்தது.

மேரி கியூரி அம்மையார் தொடர்ந்து கதிரியக்க வெளிப்பாட்டோடு, ஒழுங்கான உபகரணங்கள் இன்றி தொழிற்பட்டதால், நோயினால்ப் பாதிக்கப்பட்டு, இரத்த சோகை நோயினால் 1934இல் இவ்வுலகை விட்டு நீங்கினாலும் அவரின் கண்டுபிடிப்புகள் இன்றும் அவரை நிராகரித்த இந்த உலகில் அவரை நிலைநாட்டி நிற்கின்றது..

**திருமதி மங்கையரசி - யேர்மனி**

# கல்விக்கு வயது உண்டோ?...85 வருடங்களின் பின்பு!..



## 105 வயதில் முதுகலைப் பட்டம் பெற்ற மூதாட்டி!.. உலகசாதனை படைத்த அமெரிக்கப் பெண்மணி!...

85 ஆண்டுகள் கழித்து தனது 105வது வயதில் முதுகலைப் பட்டம் (ஆ.யு) பெற்று உலக சாதனை நிகழ்த்தியுள்ளார் அமெரிக்கப் பாட்டி ஒருவர். தற்போது 105 வயதுள்ள கின்னி ஹிஸ்லோப் என்னும் பெயர்கொண்ட முதாட்டிக்கு அண்மையில் பட்டமளிப்பு விழா அமெரிக்கா ஸ்டேன்போர்ட் பல்கலைக் கழகத்தில் சிறப்பாக நடைபெற்றபோது இந்த மூதாட்டி மிடுக்கா நடந்துவந்து தனது முதுகலைப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்..
ஏன்?.. 85 வருடங்கள் தாமதித்தது என்று நோக்கினால் 2வது உலகப்போர் காலத்தில் 1940ம் ஆண்டு கின்னி தனது இளங்கலைப் பட்டத்தை ஸ்டேன் போர்ட் பல்கலைக் கழகத்தில் பெற்றார். பின்னர் முதுகலைப் பட்டத்தைப் பெற ஆரம்பித்த வேளையில் அவரது காதலன் உலகப்போரில் பணியாற்றச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் அவரது பட்டப்படிப்பு தடைப்பட்டது.

பின்னர் 83 வருடங்களின் பின்பு படிப்பை வெற்றிகரமாக முடித்து தற்போது பட்டம் பெற்றிருக்கிறார். இவர் பட்டமளிப்பு விழாவில் பேசும்போது வெகுகாலம் காத்திருந்து முயற்சி செய்து படித்தபடியால் இந்த வெற்றியைப் பெற்றதாகவும் முயற்சி செய்தால் வெற்றிபெறலாம் என்றும் தெரிவித்தார்.
சாதனைகளை நிகழ்த்துவதற்கும் பிடித்த விடயங்களைச் செய்வதற்கும் வயது தடையில்லை என்பதை நிரூபித்திருக்கிறார் இந்த மூதாட்டி. அண்மையில் 81 வயது மூதாட்டி ஒருவர் அமெரிக்காவில் ரயில் ஓட்டிச் சாதனை படைத்ததையும் நினைவுபடுத்தினார்.

ஆகவே நாம் எப்படிப்பட்ட கடினமான காரியங்களை ஆற்ற வேண்டுமானால் முயற்சி, நம்பிக்கை, துணிவு, கடும்உழைப்பு இருந்தால் சாதனைகளைப் புரிந்து வெற்றிக்கனியைப் பறித்துவிடலாம். வயது, ஊனம், எந்த வகையிலும் தடையாய் இருாது என்பதே உண்மையான விடையமாகும். ""முயற்சி திருவினையாக்கும்""



# திரு இளங்கோ இளவழகன் - லண்டன்...

## அகதியாக பிரித்தானியாவில் குடியேறிய தமிழர்.. லண்டனில் நகரம் ஒன்றின் முதல்வரானார்...

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வாழ்ந்து வந்த தமிழரான இளங்கோ இளவழகன் என்பவர் பிரித்தானியாவின் நகரம் ஒன்றின் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். என்பது மகிழ்வான செய்தியாகும்.இந்து சமயத்தைச் சேர்ந்த இலங்கைத் தமிழரான இவர் பிரித்தானியாவில் பல ஆண்டுகளாக வாழ்ந்து வந்தவராவர். அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளின் தேர்தலில் பிரதான கட்சியான தொழிற்கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்

வேற்று மொழி, கலை, கலாச்சாரம், நிறம் அனைத்தும் மாறுபட்டிருந்தாலும் வாக்களித்த பல்லின மக்கள் அனைத்தையும் கடந்து இவருக்கு வாக்களித்து வெற்றிபெற வைத்தது உண்மையிலேயே பாராட்டத்தக்க விடையமாகும். இன்று புலம்பெயர்ந்து உலக நாடுகள் எங்கும் வாழ்ந்துவரும் இலங்கைத் தமிழர்கள் சாதனைகள் பலவற்றைப் புரிந்து உயர்ந்து நிற்பது சிறப்பான விடையமாகும். தொடரட்டும் சாதனைகள்!.. வாழ்த்துக்கள்!...

..................................................................

சாதியை எதிர்த்து
போராடுங்கள் ; அது
ஜனநாயகத்திற்கு எதிரி
என்பதால் !
மூடநம்பிக்கையை
எதிர்த்துப் போராடுங்கள்;
அது அறிவியலுக்கு எதிரி
என்பதால் !
ஆதிக்கத்தை எதிர்த்துப்
போராடுங்கள்;
அது
சுதந்திரம் - சமத்துவம்
சகோதரத்துவத்திற்கு
எதிரி என்பதால்!



பேரறிஞர் அண்ணா

## தாயகச் செய்திகள் சில...

25.04.2024- 2022 மார்ச் - 2024 மார்ச்வரை 2 வருடங்களில் 301 இலங்கைத் தமிழர்கள் சட்டவிரோதமாக கடல்வழிப் பாதையில் தமிழகம் சென்றுள்ளனர்.

27.04.2024- பல்வேறு நெருக்கடிகளால் கடந்த 5 வருடங்களில் 25.65.365 பேர் வெளிநாடுகுளக்குச் சென்றுள்ளனர். கடந்த 2 வருடங்களில் 18.21.474 கடவுச்சீட்டுகள் விநியோகம் அரசு அறிவிப்பு.

29.04.2024- நாட்டில் அதிகரிக்கும் போதைப் பொருள் பாவனையால் புனர்வாழ்வுக்கு நாடு முழுவதும் 230 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

30.04.2024- நாட்டில் டெங்குநோய், மற்றும் பகைப்பிடித்தல் அதிகரிப்பு. நாள் ஒன்றுக்கு 50 பேர்வரை இறப்பு. இதனால் அரசுக்குப் பெரும் பணச் செலவு.

01.05.2024- பல நெருக்கடிகளால் 2023ல் சகலதரப்புப் படையினர் 8.146 பேர் தப்பிச் சென்றுள்ளனர் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

05.05.2024- பல்வேறு காரணங்களால் வருடாந்தம் சராசரியாக 1.700 குழந்தைகள் தத்துக் கொடுக்கப்படவதாக அரசஅறிகைக தெரிவித்துள்ளது

08.05.2024- இலங்கை மக்களின் ஆயுட்காலம் குறைந்து வருகின்றது 2019ல் ஆண்கள் 78 வயது பெண்கள்82 வயதாக இருந்தது. தற்போது ஆண்கள் 76 வயதாகவும் பெண்கள் 80 வயதாகவும் குறைந்துள்ளது.

10.05.2024- 2023 வரை நாட்டில் 62.549 சிறுநீரக நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சு அறிவித்தது.

15.05.2024- யுத்த வெற்றி குறித்து (மே 18) 15 ஆண்டுகள் நிறைவையொட்டி இலங்கை அரசு 5.700 படையினருக்குப் பதவிஉயர்வு வழங்கியுள்ளது.

18.05.2024- முள்ளிவாய்க்கால் படுகொலை 15வது ஆண்டு நினைவு நாடு முழுவதும் கொண்டாடப்பட்டன. பல இடங்களில் வெளிநாட்டவர்களும் பங்குகொண்டு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

20.05.2024- வெசாக் தினத்தையொட்டி 3.000 இடங்களில் கொண்டாட்டம் 10 பெண்கள் உட்பட 278 சிறைக்கைதிகள் மன்னிப்பளித்து விடுதலை செய்யப்பட்டனர்.

22.05.2024- நாட்டில் நாளாந்தம் சுமார் 6 லட்சம் மாணவர்கள் காலை உணவை உண்ணாமல் பாடசாலைகளுக்கு வருகிறார்கள் என அமைச்சர் ஒருவர் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

24.05.2024- சட்டவரோதமாக மலேசியாவிற்குச் சென்ற 1.608 இலங்கையர்கள் மீண்டும் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

25.05.2024- நாட்டில் 10 வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்கள் 60 வீதம்பேர் கைபேசி பாவிக்கிறார்கள். இதனால் பல பாதிப்புகள் தோன்றியுள்ளன.

26.05.2024- ஜனாதிபதி வடபகுதி விஜயம் பல்வேறு நலத்திட்டங்களைத் திறந்து வைத்தார்.

28.05.2024- புகைப்பிடித்தலால் நாட்டில் 15 லட்சம்பேர் அடிமை. இதனால் அரசுக்குப் பெரும் செலவு. மரணம் அதிகரிப்பு. தினமும் 50 பேர்வரை பலி.

30.05.2024- பலஸ்தீனம்-காஸா போர் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக இலங்கை அரசு 127 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது..

01.06.2024- யாழ் நூலகம் எரிக்கப்பட்டு 43 வருடங்கள். தமிழர் பிரதேசங்களில் நினைவு கூரப்பட்டது.

05.06.2024- மே மாதத்தில் மட்டு 10.8.665 சுற்றுலாப் பயணிகள் வருகை முதல் 6 மாதங்களில் 10 லட்சம்பேர்வரை வருகைதந்துள்ளனர்.

20.06.2024- உலக இளைஞர் பௌத்த சங்கத்தின் 20 வது மகாநாடு நயினா

தீவில் நடைபெற்றது. 27 நாடுகளைச் சேர்ந்த 350 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## உலகச் செய்திகள் சில..

01.05.2024- தான்சானியா, கென்யா நாடுகளில் வெள்ளப்பெருக்கு 200 பேர்வரை பலி.51.000 வீடுகள் அழிவு 2 லட்சம்பேர் பாதிப்பு.

05.05.2024- ரஷ்ஷியாவின் ஜனாதிபதியாக விளாடிமிர் புற்ரின் 5வது தடவையாகப் பதவி ஏற்றுள்ளார்.

17.05.2024- ஸ்லொவாக்கியப் பிரதமர் மீது துப்பாக்கிச்சூடு உயிர் தப்பினார்.

18.05.2024- ரஷ்ஷிய அதிபர் புர்ரின் சீனா, வடகொரிய நாடுகளுக்கு விஜயம் மேற்குலக நாடுகளில் பதட்டம்.

.

19.05.2024- ஈரான் ஜனாதிபதியும் (63வயது) மந்திரிமாரும் என 7 பேர் உலங்கு வானூர்த்தி விபத்தில் பலியானார்கள்.

20.05.2024- பிரேசிலில் டெங்கு நோய் அதிகரிப்பு இந்த வருடம் 31.5.24வரை 51 லட்சம் பேராக அதிகரிப்பு.

23.05.2024- பலஸ்தீனத்தை சுதந்திர நாடாக அங்கீகரிக்க ஸ்பெயின், நோர்வே, அயர்லாந்து நாடுகள் அங்கீகாரம் வழங்கியுள்ளன.

24.05.2024- நைஜீரியாவின் கிராமம் ஒன்றில் தீவிரவாதிகள் தாக்குதல் 40 பொதுமக்கள் பலி.

25.05.2024- பப்புவாநியூகினிய தீவில் மண்சரிவு, நிலநடுக்கம் 200 பேர்வரை பலி.

29.05.2024- கடந்த ஒரு வருடத்தில் மட்டும் உலகில் இணையவழி பாலியல் சுரண்டல்களில் 30 கோடி சிறுவர்கள் பாதிப்பு ஸ்கொட்லாண்ட் பல்கலைக் கழக ஆய்வு ஒன்று அறிவித்துள்ளது.

01.06.2024- 2023ல் உலகம் முழுவதும் 16 நாடுகளில் 1.153 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.மிக அதிகம்பேர் ஈரானில் 2022ல் 576 பேரும் 2023ல் 853 பேரும் இதைவிட சீனா, வடகொரியா போன்ற நாடுகளில் அதிகம்.

05.06.2024- புகைத்தல், மதுபாவனையால் உலகில் வருடாவருடம் 60 லட்சம்பேர் இறப்பு. உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது.

06.06.2024- 200 வருடங்களின் பின்பு மெக்ஸிக்கோ நாட்டின் புதிய ஜனாதிபதியாகப் பெண் ஒருவர் தெரிவு (அண்டரியா மானுவல் 61 வயது)

09.06.2024- இந்தியப் பிரதமராக 3வது தடவையாக (2014, 2019, 2024) நரேந்திர மோடி தெரிவானார். (73 வயது) முன்னாள் பிரதமர் நேருவின் சாதனையைச் சமன் செய்தார். (1952, 1957, 1962) புதிய மந்திரி சபையும் பதவி ஏற்பு. தமிழகத்தில் அனைத்து இடங்களிலும் (40) தி.மு.க வெற்றி.

10.06.2024- உலகின் பணக்காரர்கள் தொகை அதிகரிப்பு தற்போது அமெரிக்காவில் 7.431 மில்லியன் பேர், யப்பானில் 3.777 மில்லியன் பேர் யேர்மனியில் 1.65 மில்லியன் பேர் என உலக நாடுகளில் அதிகரித்துள்ளது.

14.06.2024- சிலி நாட்டில் கடும் மழை 100 பேர்வரை பலி 5லட்சம்பேர் பாதிப்பு 60 ஆயிரம் வீடுகள் சேதம்.

16.06.2024- குவைத்தில் மாடி வீடுகளில் தீ விபத்து 50 பேர்வரை பலி.
கொங்கோ - (ஆபிரிக்கா) நதியில் படகு விபத்து 86 பேர் பலி
மாங்கோலியாவில் பனிப்புயல் 70 லட்சம் கால்நடைகள் பலி.
காற்று மாசுபடுதலால் உலகில் 2023ம் ஆண்டில் 81 லட்சம்பேர் பலி.
இந்தியாவில் கள்ளச்சாராயம் குடித்து 80 பேர்வரை பலி.
ஊட்டச்சத்து குறைபாட்டால் உலகில் 18 கோடி குழந்தைகள் பாதிப்பு.

20.06.2024- கடும் வெப்பம் சவுதி அரேபியாவில் 1300 பேரும் பாக்கிஸ்தானில் 700 பேரும் இந்தியா, எகிப்து நாடுகளிலும் பலர் இறந்துள்ளனர்.

25.06.2024- நேட்டோ நாடுகளின் புதிய பொதுச் செயலாளராக நெதர்லாந்துப் பிரதமர் மார்ச் ரூட்டோ பதவி ஏற்றுள்ளார்.

30.06.2024-பலஸ்தீனம், காஸா - இஸ்ரேல் போரால் இதுவரை 40.000 பேர் பலி, 13.000 பேர் காணாமல் போயுள்ளனர். தினமும் 10 - 15 வரை குழந்தைகள் கை, கால்கள் துண்டிக்கப்படுகின்றனர். 10 லட்சம் பேர்வரை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாகியுள்ளனர்.

# அமரர் இராஜவரோதயம் சம்பந்தன் M.P
( 05-02-1933 - 30.06.2024 )



தமிழினத்தின் விடுதலைக்காக நீண்டகாலம் ஓங்கி ஒலித்த குரல் ஒன்று அடங்கிப்போன துயர் சம்பவம் நடந்து முடிந்துவிட்டது. அதாவது தமிழினத்தின் விடுதலைக்காக பாராளுமன்றத்திலும் பொது வெளிகளிலும் குரல்கொடுத்து வந்தவர்தான் அமரர் சம்பந்தன் அவர்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் தமிழரசுக் கட்சியின் தலைவராகவும் நெடுங்காலம் பதவி வகித்ததுடன் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகவும் இலங்கைப் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார். இப்படியாக தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றிய அமரர் சம்பந்தன் அவர்கள் 30.06.2024 அன்று தனது 91 வயதில் காலமானார். அன்னாரது அரசியல் பணிகளின் சிறு குறிப்பைப் பார்ப்போம்..

- திருகோணமலையில் பிறந்து வளர்ந்தவர். இவரது தந்தை கல்லோயா நீர்ப்பாசனத் திட்டத்தில் பணியாற்றியவர்.
- யாழ் சம்பந்தரிசியார் கல்லூரி, மொறட்டுவ புனித செபஸ்தியார் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்று பின்னர் சட்டக் கல்லூரியில் கல்வி பயின்று சட்டத்தரணியாகப் பதவி வகித்தவர்.
- மனைவி லீலாதேவி பிள்ளைகள் மூவர் சஞ்சீவன், செந்துாரன், கிரிசாந்தினி
- 1977ம் ஆண்டு திருகோணமலையில் போட்டியிட்டு முதன் முதலாக பாராளுமன்ற எம் பியானார்.
- 1989 ஆண்டு தேர்தலில் ஈ.என் டி.எல்.எவ், ஈ.பி.ஆர். எல். எவ், ரெலோ, தமிழரசு கட்சிகளில் கூட்டாகத் தேர்தலில் போட்டி. தோல்வியடைந்தார்.
- 2001ல் பல கட்சிகள் ஒன்று சேர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பை நிறுவியதில் அதன் தலைவரானார்.
- 1977 - 1983 வரையும் 2001 - 2024 அவர் இறக்கும்வரை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார்.
- 2015 செப்டெம்பர் தொடக்கம் 2018 டிசம்பர்வரை இலங்கைப் பராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்தார்.

தமிழினத்தின் விடுதலைக்காக மிக நீண்டகாலம் குரல் கொடுத்து வந்ததுடன் உள்நாட்டு வெளிநாட்டுப் பிரமுகர்களுடன் பேச்சு வார்த்தைகளை அவ்வப்போது நடாத்தி தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காக குரல்கொடுத்து வந்த அமரர் சம்பந்தன் அவர்களின் இழப்பு தமிழினத்துக்குப் பேரிழப்பாகவே கருதப்பட்டுள்ளது. அன்னாருக்கு எமது அஞ்சலிகள்!.. அவர் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்!..

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப்பொறுப் பேற்றுஉதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1- திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலானி (பி.தி 10.04.2014)
குருபவராசா ரேணுஸ்றியா (பி.தி 23.08.2012)
றொனி டிலக்சனா (பி.தி 03.08.2014)

..................................................................................................................................

2- திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- ஜெகஸ்ரீன் மதுசாளினி (பி.தி 02.04.2013)

..................................................................................................................................

3- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுவோர்.. - திலக்சிகா கோடீஸ்வரன் (பி.தி 12.05.2008)
மதுஸா சுந்தரலிங்கம் (பி.தி 01.01.2008)

..................................................................................................................................

4- திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம்- தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. - கதிர்விழி சகாயநாதன் (பி.தி 09.05.2008)

..................................................................................................................................

5- திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
சிறீ அகிலாண்டேஸ்வரி "அருளகம்" - வவுனியா
உதவி பெறுவோர்.. - இ. அபிராமி (பி.தி 14.11.2002)

..................................................................................................................................

6- திருமதி அனிதா றஞ்சன் - Duisburg - - 480-00 யூரோ
திருஞானசம்பந்தர் குருகுலம் - களுவாஞ்சிக்குடி - மட்டக்களப்பு
உதவி பெறுவோர்.. சாய்ரிதன் சத்தியசீலன் (பி.தி 07.06.2010)

7- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து ”அன்பகம்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)
8- திரு Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து ”அன்பகம்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)
9- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து ”அன்பகம்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 )

---

- பொறுப்பெடுத்தவர்கள் 9 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)

- உதவி பெறுவோர் 13 பிள்ளைகள் (தாயகம் - சிறீலங்கா)

---

## 59ம் பக்கத் தொடர்ச்சி......




தொடர்ந்து தாய் மண்ணையும் ஈழத்து வேர்களையும் மறக்காது விடுதலைப்பாடல் ஒன்றை உணர்வுபூர்வமாகப்பாடி மெய் சிலிர்க்க வைத்தார் : ”முத்தைத்தரு பத்தித்திருநகை ”திருப்புகழை துரிதகதியில் பாடியபோது பக்கவாத்திய கலைஞர்களும் சேர்ந்து அமர்க்களப்படுத்திவிட்டனர். ஆரம்பத்திலிருந்து மங்களம் பாடும்வரை யாரும் அங்கும் இங்கும் அசைந்ததாகவே தெரியவில்லை.

மொத்தத்தில் அரங்கேற்றம் மிக வெற்றிகரமாக அமைந்தது உண்மை. குறை என்று தேடிப்பார்த்தால் ராகம் தானம் பல்லவியில் தன் திறமையைக்காட்ட எடுத்த ஒன்றரை மணி நேரத்தை சுருக்கியிருக்கலாம் என்று தோன்றியது. மூன்று ராகங்களுடன் மல்லுக்கட்டியதை குறைத்திருக்கலாமோ என எண்ணத் தோன்றியது. மற்றும் இசைக் கலைஞர்களை இன்னமும் சிறப்பாக பாராட்டியிருக்கலாம் என்பதுவும் என் தனிப்பட்ட அபிப்பிராயம்.

திரு திருமதி லதா. பரமதாஸ் குடும்பத்தினர் விருந்தோம்பலை மிக உன்னதமான முறையில் நிறைவேற்றியிருந்தமை பலராலும் பாராட்டப்பட்டது.

- சுபம் -

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-05-2024 + 746-89

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen +100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)-------------
+ 580-00 + 580-00
---------------
+1.326-89

அன்பளிப்புகள்...
08. செல்வன் ஜெதுசன் பிரபாகரன் - Oberhausen + 107-50
( பிறந்தநாள் அன்பளிப்பு )
09. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen + 100-00
(தாயரின் ஓராண்டு நினைவு அன்பளிப்பு)
10. திரு வை துரையரங்கன் - Essen + 165-00
(தாயரின் ஓராண்டு நினைவு அன்பளிப்பு)
11. திருமதி மேரி விஜயகுமார் - Stuttgart + 200-00
(கல்வி மேம்பாட்டு உதவி வைகாசி + ஆனி)
12. திருமதி மங்கை சிவராசன் - Stuttgart + 200-00
(கல்வி மேம்பாட்டு உதவி வைகாசி + ஆனி)
13. திரு திருமதி மகாலிங்கம்-டொறின்- Oberhausen+150-00
..............................................
922-50 + 922-50
-----------------
+ 2.249-39

| | |
|---|---|
| முற்பக்கப்படி | + 2.249-39 |

**அனுப்பியது...**

| | ரூபா | யூரோ |
|---|---|---|
| 1)"ஒளிரும் வாழ்வகம்" மல்லாவி துணுக்காய் | | |
| 22.05.2024 - (திரு வை.துரையரங்கன்) | 50.000-00 | - 162-48 |
| 28.05.2024 - (திருமதி பிங்கலை) | 30.014-40 | - 100-00 |
| 21.06.2024 - (சிவதர்சினி பிராங்ளின்) | 1.53.090-00 | - 480-00 |
| 2)"ஒளிரும் வாழ்வகம்" புதுக்குடியிருப்பு | | |
| 28.05.2024 - (டொறின் -மகாலிங்கம்) | 46.238-40 | - 150-00 |
| 3)"செபமாலை" இரக்கத்தின் இல்லம் | | |
| தலைமன்னார்.09.04.2024 (பிரபாகரன்)) | 32.508-00 | - 107-50 |
| 3)"நல்லாயன் சிறுவர் இல்லம்" மாங்குளம் | | |
| 25.04.2024 - மேரி + மங்கை | 1.27.170-00 | - 400-00 |
| | | - 1.399-98 |

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி

| | | | | |
|---|---|---|---|---|
| 01.05.2024 - 31.05.2024 - 21-49 | | | | |
| 01.06.2024 - 30.06.2024 - 15-69 | | - 37-18 | | |
| | | | - 1.437-16 | - 1.437-16 |
| 30.06.2024 மீதி கையிருப்பு | | | | + 812-23 |

## அடுத்த இதழில்!...



- "மண்" சஞ்சிகையின் 35 வது ஆண்டு நிறைவுப் போட்டிகள் ( 1990 - 2025 ) பற்றிய விபரங்கள் எமது அடுத்த மண் இதழில் வெளிவர இருக்கின்றன.
- சிறியவர்கள், மாணவமணிகள், இளையோர்கள், எழுத்தாளர்கள் எனப் பல தரப்பினருக்குமான பல போட்டிகள் நடைபெறவுள்ளன.
- ஆவலுடையவர்கள் அனைவரும் பங்குகொள்ளலாம். அத்தனை போட்டிகளும் இலவசமானவை..ஆவலுடன் அடுத்த இதழை எதிர்பாருங்கள்!...நன்றிகள்!..

- ஆசிரியர் -

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai
T.P:- 0212060620 FarmNo:-0213204790 Mobile:-0774868085
Fax:-0774868085 Viber:-0774868085

Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015

திகதி:..../.../20..

வை.சிவராஜா,

பிரதம ஆசிரியர்,

மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை,

ஜேர்மனி.


நன்றி நவில்கிறோம்

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், ஆதரவற்ற முதியோர், பெண்தலைமைத்துவ குடும்பங்கள், நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவினர் மத்தியில் பணியாற்றி வருகிறது. தங்கள் மண் சஞ்சிகை குழுமத்தினருக்கு ஊடாக ஏற்பாடு செய்து வழங்கிய (திருமதி பிங்கலை செந்திலன் அவர்களின் நிதி அனுசரணையுடன்) 480 யூரோ (153090) நிதியினை பயன்படுத்தி எமது துணுக்காய் பிரதேசத்தில் கல்வி கற்கும் மிகவும் வறிய குடும்பங்களைச் சார்ந்த மாணவர்கள் ஐவரின் கற்றலுக்காக மாதாந்தம் பயன்படுத்தி வருகிறோம் என்பதை தங்களிற்கு தெரிவித்துக்கொள்வதோடு இச்செயற்திட்டத்தை செயற்படுத்த நிதி அனுசரணை நல்குவதற்கு ஏற்பாடு செய்து வழங்கிய தங்களிற்கும் தங்கள் குழுமத்தினருக்கும் எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு சார்பாக இதயபூர்வமான நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம். தங்களது சேவை எம்மவர் மத்தியில் மேலும் கிடைத்தவண்ணமுள்ளமையினையிட்டு மிக்க மகிழ்வடைவதோடு பாராட்டி வாழ்த்தி நிற்கிறது ஒளிரும்வாழ்வு குடும்பம்.

நன்றி

தலைவர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

www.olirumvaalvu.com olirumvaalvuthunukkai2012@gmail.com olirumvaalvu thunukkai



**திருஞானசம்பந்தர் குருகுலம் - களுதாவளை**
(சிறுவர் பராமரிப்பு இல்லம் - ம.தெ.எ. பற்று)
**තිරුඥානසම්බන්ධර් කුරුකුලම - කළුදාවලයි**
(ළමා නිවාසය - ම. දෙ. එ.පත්තු)
**THIRUGNANASAMPANTHAR KURUKULAM - KALUTHAVALAI**
(CHILDREN'S HOME - M.S.& E PATTU)

President : ப. குணசேகரன்
Secretary : அ. மதிவதனன்
Treasurer : தி. சச்சின்

Regd No.: NEP/SS/09
AC. No.: 6835914
BOC, Kaluwanchikudy

Kaluthavalai (EP),
Sri Lanka.
T.P: 065 2250277

It is an Approved Charity

23/05/2024

மதிப்பிற்குரிய ஐயா
திரு வ. சிவராஜா அவர்கட்கு
ஜேர்மனி

நிதி கிடைக்கப்பெற்றமை

தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட பணம் 149371/42 சதம் கடந்த 25/04/2024 அன்று எமது வங்கிக் கணக்கிற்கு கிடைக்கப் பெற்றுள்ளது. அதை உடன் அவதானித்து பற்றுச்சீட்டினை அனுப்பி வைக்காமல் விட்டது எமது தவறுதான். அதற்கான பற்றுச்சீட்டினை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம். தவறுக்காக வருந்துகின்றோம்.

புலம்பெயர்ந்து எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் சம்பாதிக்கும் பணத்தில் பெரிய தொகையை வருடந்தோறும் தவறாமல் எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தந்து உதவிக்கொண்டிருப்பதையிட்டு மனமார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாங்களும் தங்களது அமைப்பைச் சேர்ந்தவர்களும் அனைவரும் இப்போதும் எதிர்காலத்திலும் பல்வேறு செல்வங்களும் வளங்களும் பெற்று நலமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் கிடைக்க வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றோம். நன்றி.

K. Kunasekaran

தலைவர்
திருஞான சம்பந்தர் குருகுலம்
களுதாவளை.

**Good Shepherd Child Development center,**
**Mullai Road, Mankulam**
**Srilanka.**
E-mail – mankulamcdc@gmail.com
Tel. No. – 0212060077/+94775924582

Date: 12.06.2024

அன்பின் மண் சஞ்சிகையின் உறுப்பினர்களுக்கு நன்றிகள் நிறைந்த உள்ளத்துடன் இறையாசிர்கள் கூறி வரைவது

மண் சஞ்சிகையின் குழுவில் இணைந்து செயற்படும் அன்பு நெஞ்சங்களே உங்களின் அயராத உழைப்பும் தியாகமும் தேவையில் இருக்கும் சிறார்களின் வாழ்வை வளப்படுத்துகின்றது என்பதை எம் இல்லத்தில் காணக்கூடியதாகவுள்ளது

மகிழ்ச்சியாக பிள்ளைகள் தமது கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உங்களின் தாரான உள்ளமும் உதவிக்கரமும் எமக்கு பக்க பலமாக உள்ளது.

இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய எமது இல்லத்தின் பிள்ளைகள் நால்வரும் சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளதுடன் அவர்களில் ஒருவர் பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்குரிய பெறுபேற்றை பெற்றுள்ளார். இது உண்மையில் உங்களின் தாராளமான நிதிப்பங்களிப்பினாலேயே என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மண் சஞ்சிகையில் இணைந்து செயல்படும் அனைவருக்கும் அருட்சகோதரிகள் பிள்ளைகள் சார்பில் நன்றிதனை தெரிவித்து நிற்கின்றேன். உங்களின் அன்பு பணி தொடர இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டும் என்று தொடர்ந்தும் மன்றாடுகின்றேன் என கூறி விடைபெறுகின்றேன்

நன்றி

இப்படிக்கு உங்கள் உதவியை மறவாத

Sr. Emeline

Sr. Sumathy

Sister In Charge
Good Shepherd Children's Home
Mankulam.

**Good Shepherd Child Development center,**
**Mullai Road, Mankulam**
**Srilanka.**
E-mail – mankulamcdc@gmail.com
Tel. No. – 0212060077/+94775924582
Date: 24.04.2024

மாங்குளம் நல்லாயன் இல்லத்தினால் அரவணைக்கப்படும் சிறார்களின் கல்விப்பாதையின் தூண்களாக பயணித்து வரும் மண்சஞ்சிகையின் உறவுகள் ஒவ்வொருவருக்கும் இறையாசீர் கூறி அன்புடன் வரைவது.

உங்களின் தாராள உள்ளத்தின் நிதி அனுசரணையினால் எம் சிறார்களுக்கு கல்வி அறிவூட்ட எமக்கு பலமாக இருந்து வரும் உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி கூறுகின்றோம். 28.02.2024 திருமதி மேரி விஜயகுமார் மற்றும் திருமதி மங்கையற்கரசி சிவராசன் ஆகியோர் மண் சஞ்சிகை அமைப்பின் ஊடாக அனுப்பிவைத்த ரூபா 130,926.22 சதம் (400 Euro) எம் கரம் கிடைத்தது. இந்நிதியானது பிள்ளைகளின் பிரத்தியேக வகுப்புகளில் (கணிதம், தமிழ், வரலாறு ஆகிய பாடங்களை) கற்பிக்கும் ஆசிரியர்களின் மாசி, பங்குனி, சித்திரை மாதங்களின் கொடுப்பனவிற்காக பயன்படுத்தினோம் என்பதை அறியத்தருகின்றோம்.

உண்மையில் உங்களின் இப்பெரும் உதவி எமக்கு ஆறுதலாக உள்ளது. பல சிரமங்களின் மத்தியில் பிள்ளைகளின் வளர்ச்சிக்காக நீங்கள் நிதி சேமிக்கின்றீர்கள் என்பதை நாமறிவோம். உங்களின் அயராத ஒத்துழைப்பினால் பல பிள்ளைகள் தமது ஆற்றல்கள் திறமைகளை இனம் கண்டு தமது கல்விப்பாதையில் முன்னேறிச் செல்கின்றார்கள். நீங்கள் ஒவ்வொருவரும் செய்து வருகின்ற இரக்கத்தின் அன்பு செயல் பலருக்கு மகிழ்வையும் அர்த்தமுள்ள வாழ்வினை வாழ வழி சமைத்துள்ளது என்பதை எமது உளக்கண்களால் காண முடியும்.


இந்நாட்களில் எமது பிள்ளைகள் பாடசாலை மட்டங்களிலான விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றி வருகின்றார்கள் அதுபோல் கல்வியிலும் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றார்கள். மேலும் பல புதிய பிள்ளைகள் இல்லத்தில் இணைந்துள்ளனர். தாராள உள்ளத்தினால் செய்கின்ற உதவிகளுக்கு நிச்சயம் இறைவன் நிறைவான வரங்களை அளித்தருவார் என்றும் உங்களின் ஆசீரும் ஒத்துழைப்பும் தொடர்ந்தும் எம்மை வந்து சேரும் என்ற நம்பிக்கையுடன் நன்றியுடன் இணைந்த ஆசீரை கூறி விடைபெறுகின்றோம்.

நன்றி

இப்படிக்கு,
உங்கள் உதவியை என்றும் மறவாத,

Sister In Charge
Good Shepherd Children's Home
Mankulam.



அன்புடையீர்!..

எனது அப்பா உயிரோடு இருந்திருந்தால் அவருக்குக் கடந்த 10.05.2020 அன்று 70 வயதாகி இருக்கும். துரதிஷ்டவசமாக அவர் 1994ம் ஆண்டு அவரது 43வயதிலேயே, அதாவது இன்டர்நெட் காலம் பூக்கும் முன்பே, இறந்து விட்டார். புதுமைகளையும், புது யுக்திகளையும் விரும்பிய அவர், இணையதளத்தையும் விரும்பி இருப்பார். அதனால், அவரது 70வது பிறந்தநாளில் அவர் நினைவாக, அவர் எழுதிய சிறுவர் அமுதம் சஞ்சிகைகளை நான் எங்கள் வலைப்பக்கத்தில் வெளியிட்டிருக்கிறேன்.

இப்போதுதான் தொடங்கி உள்ளேன். தற்போது ஆறு சஞ்சிகைகள் எங்கள் வலைப்பக்கத்தில் உள்ளன. இன்னு சில காலத்தில் எங்களிடம் இருக்கும் அனைத்து பதிப்புக்களையும் நீங்கள் எங்கள் வலைப்பக்கத்தில் காணலாம்.

இத்துடன் உங்களிடம் ஓர் உதவியையும் கோரிக் கொள்கிறேன். நினைவுகள் எனும் பகுதியில் உங்கள் நினைவுகளை எங்களோடு பகிர்ந்து கொண்டால் நான் மிகவும் மகிழ்ச்சி கொள்வேன். எந்த மொழி, எதைப் பற்றி, எவ்வளவு, எந்த வடிவம் (எழுத்து வடிவம், புகைப்படம், வீடியோ பதிவு) ஒன்றும் முக்கியம் இல்லை. நீங்கள் அனுப்பினாலே போதும்.)

உங்களுக்கு எனது அப்பா சின்ன இராஜேஸ்வரன், சிறுவர் அமுதம், என் அம்மா (1994-1999 வரை சிறுவர் அமுதம் தலைமை ஆசிரியை) பற்றி நினைவுக்கு வரும் எதுவும் எழுதலாம். மற்றும் இன்னுமோர் கோரிக்கை: இந்த வலைப்பக்கத்தை தயவு செய்து உங்களுக்கு தெரிந்தவர்களுக்கு, அதிலும் முக்கியமாக அப்பாவையும், அம்மாவையும் அறிந்தவர்களுக்கும், பழைய சிறுவர் அமுதம் வாசகர்களுக்கும் தெரியப் படுத்துங்கள்.

என்னிடம் எல்லோரின் தொடர்பும் இல்லை. உங்கள் ஆக்கங்களை எனது மின்னஞ்சல் முகவரிக்கு (Pingkalair@aol.com) அனுப்புமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

வலைப்பக்கத்தை பார்க்க: https://siruvar-amutham.blogspot.com/

Facebook குழு: https://www.facebook.com/Siruvar-Amutham-113831843635868

என்றும் அன்புடன்!..

**உங்கள்... பிங்கலை - செந்திலன் (அமரர் இராஜேஸ்வரனின் மகள்)**

நெதர்லாந்தில் வாழ்பவரும் எமது வாசகருமான திரு திருமதி ஜெயம் தங்கராசா - ஜெயமலர் தம்பதிகளின் நிதிப் பங்களிப்பில் துணுக்காய் ” ஒளிரும் வாழ்வகம் இல்லச் ” சிறார்களுக்கு கல்வி நிதி உதவியும் பரிசில் வழங்கல் நிகழ்வும் 11.04.2024









யேர்மனியில் வாழ்பவரும் எமது வாசகருமான திரு துரையரங்கன் அவர்களின் தாயாரின் ஓராண்டு நினைவாக அவரின் நிதிப் பங்களிப்பில் துணுக்காய் ” ஒளிரும் வாழ்வகம் இல்லச் ” சிறார்கள், மாற்றுத்திறனாளிகள், முதியோருக்கு உணவளித்தல் நிகழ்வு 29.05.2024









Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 226



(26.08.1910 - 05.09.1997)

Mother Teresa

திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் இலங்கைப் பாராளுமன்ற முன்னாள் எதிர்கட்சித் தலைவர்

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |